Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 25-5-2015 Issued : 25-5-2015

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஏப்ரல் 1, 2015—தொகுதி 79—எண் 2**

**Wednesday, the 1st April 2015—Volume 79—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**1–4–2015**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 293-347

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

(அ) ஒசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானது 347-357

திரு. டி. செங்குட்டுவன் 349-350

திரு. ப. டில்லி பாபு 350-352

திரு. எம். ஆறுமுகம் 352

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 352-353

திரு. அ. கணேஷ்குமார் 353

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 353-354

டாக்டர் க. கிருஷ்ணசாமி 354-355

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 355-357

(ஆ) அரசு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல் 358-361

*மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர் 358-361

பக்கங்கள்

**3. தகவல் கோரல்—**

(அ) குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை 348-349

*திரு. மு.க. ஸ்டாலின் 348-349

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 349

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 361-362

**4. வரவு—செலவுத் திட்டம், 2015—2016, பொது விவாதமும் பதிலுரையும்—** 362-417

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 362-410, 414

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 380-381, 412

திரு. க. பாலகிருஷ்ணன் 411

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 413, 415-416

திரு. சு. குணசேகரன் 414

டாக்டர் க. கிருஷ்ணசாமி 415

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 416

திருமதி எஸ். விஜயதரணி 416-417

**5. அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 417-418

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 418-419

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, பங்குனி 18, திருவள்ளுவர் ஆண்டு—2046

## 2015 ஏப்ரல் 1, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

இந்தச் செயல் செய்வதற்குக் கடினமானது என்று சிறிதும் சோர்வடையக் கூடாது. கடினமான செயலையும் மிகுந்த முயற்சி செய்து முடிக்க வேண்டும். அந்த முயற்சி சிறந்த பெருமையைத் தரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**106—**

### தரம் உயர்த்துதல்

***32386—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை

*110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 2 x 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் இயங்கி வருகிறது. இந்தப் பகுதியின் உச்ச மின் பளு 14.28 எம்.வி.ஏ. ஆகும். தச்சம்பட்டிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வரகூரில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 1 x 8 எம்.வி.ஏ. மின்மாற்றியுடன் 3.03 கோடி ரூபாயில் அமைப்பதற்காக நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் முடிவடையும். வரகூர் துணை மின் நிலையம் இயக்கத்திற்கு வந்த பின்னர், தற்போது தச்சம்பட்டு துணை மின் நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள வரகூரில் 2 எம்.வி.ஏ. மின் பளுவைப் பிரித்து புதியதாக அமையவுள்ள வரகூர் துணை மின் நிலையத்தில் இணைக்கப்படும். எனவே, தச்சம்பட்டு 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியில்லா பட்ஜெட்டை வழங்கி மக்களுக்காக நாளெல்லாம் உழைத்திடும் மாதர் குல மாணிக்கமே! கருணையின் பிறப்பிடமே! தமிழகத்தைக் கல்வியில் சிறந்த மாநிலமாக்கும் வகையில், பள்ளிக் கல்வித் துறைக்கு 20 ஆயிரத்து 937 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்த பாசமிகு தலைவியே! (மேசையைத்





தட்டும் ஒலி) வேளாண்மைத் துறைக்கு இதுவரை இல்லாத அளவிற்கு 6 ஆயிரத்து 614 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, விவசாயிகளின் காவல் தெய்வமாய் விளங்குகின்ற கழகத் தொண்டர்களைக் காக்கும் எங்களின் இதயத் துடிப்பே! காவேரி பெருவளத் தாயே! மாண்புமிகு மக்களின் முதல்வர், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டில் அமைந்துள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள தச்சம்பட்டு பகுதியிலே இப்போது இயங்கி வருகின்ற 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் தற்போது 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன. ஆக மொத்தம், 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின் மாற்றிகள் அங்கே இயக்கத்தில் இருக்கின்றன. இந்தப் பகுதியினுடைய உச்ச மின் பளு 14.28 எம்.வி.ஏ.தான். ஆகவே, தற்போது வரம்பிற்குள் இருக்கிறது. தச்சம்பட்டு பகுதியில் வருடாந்திர மின் பளு வளர்ச்சி 0.4 எம்.வி.ஏ.தான். ஆக, 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின் மாற்றி வசதி அங்கே இருக்கிறது. இப்போது உச்ச மின் பளு 14.28 என்ற அளவிலே இருப்பதால், அங்கே தரம் உயர்த்துவதற்கோ அல்லது புதிய மின் நிலையம் அமைப்பதற்கோ வேண்டிய சூழல் எழவில்லை. இருந்தாலும்கூட, வருங்காலங்களில் அந்தப் பகுதியில் மின் பளு அதிகரிக்கக்கூடும் என்கிற அடிப்படையிலே, அங்கிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வரகூரிலே புதிய துணை மின் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10-05

வரகூரிலே அமையவுள்ள அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து தச்சம்பட்டுவிற்கு 2 எம்.வி.ஏ திறன்கொண்டதாக அந்த மின் பளுவை மாற்றிவிடுவதன் மூலமாக, அங்கே ஏற்கெனவே 14.28 எம்.வி.ஏ. மின் பளு 12.28 ஆகக் குறைந்துவிடும். ஆகவே, அந்தப் பகுதியினுடைய தேவை 12.28 எம்.வி.ஏ.-ஆகக் இருக்கும். அங்கே 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட வசதி இருக்கிறது. ஆகவே, தரம் உயர்த்துவதற்கான சூழல் அங்கே எழவில்லை. இன்னும் சொல்லப்போனால், வரகூரிலே இப்போது அமைக்கப்படவிருக்கின்ற துணை மின் நிலையத்திலே, ஏற்கெனவே தச்சம்பட்டு பகுதியிலே இருக்கின்ற 2 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் பளுவை அங்கே இணைக்கின்றபோது, இந்தப் பகுதியிலே, இன்னும் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு, குறைந்த தாழ்வு அழுத்த மின்சாரப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்றால், அந்தப் பகுதியிலே ஆண்டுக்கு 0.4 எம்.வி.ஏ. திறன் அளவிற்குத்தான் மின் பளு அதிகரித்துக் கொண்டு வருகிறது. அப்படியென்றால், 10 ஆண்டுகளுக்கு அங்கே 4 எம்.வி.ஏ. திறன் அளவுக்குத்தான் மின் பளு கூடும். ஆகவே, இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், 10 ஆண்டுகளுக்கு அந்தப் பிரச்சினை எழ வாய்ப்பு இல்லை என்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற, அங்கே உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித்தான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியம் இல்லை. பக்கத்திலே 7 கிலோ மீட்டர் தொலைவில் வரகூரிலே அமையவிருக்கின்ற அந்தப் புதிய துணை நிலையத்தில் மின் பளுவை மாற்றுவதன் மூலமாக, அவரது கோரிக்கை நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

**திரு. ஆ.க. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கட்தொகை மற்றும் வேளாண் உற்பத்தியைக் கருத்தில்கொண்டு, திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தற்போது கூடுதலாக 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், அந்த வழித்தடம் 17 கிலோ மீட்டர் அளவிற்கு வனப் பகுதியின் வழியாகச் செல்வதால், இடி, மின்னல், மழை போன்றவற்றால் பழுதடைந்துவிடுகிறது. எனவே, அந்தப் பகுதியில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், அந்தப் பகுதியிலுள்ள சுமார் 807 விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி மனுச் செய்துள்ளார்கள். அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவதற்கும் ஏதுவாக இருக்கும். மேலும், என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில், திருவண்ணாமலை ஒன்றியத்தில் அடங்கியுள்ள 15 ஊராட்சிகள் அதாவது, அண்டம்பள்ளம், வெரையூர், தண்டரை, மதுராம்பட்டு, சு. நல்லூர், வலசை, கல்லேரி, விருதுவிலங்கினான், காடகாமான், பொறிக்கல், அருத்திராப்பட்டு, பனையூர், தேவனூர், பெருமணம் போன்ற ஊராட்சிகளின் கூடுதல் மின் தேவையினைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி தச்சம்பட்டு 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றே புரியவில்லை. நான் இரண்டு முறை பதில் தந்திருக்கின்றேன். மீண்டும் அந்தத் துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித் தருவாரா என்று கேட்கின்றார்கள். உங்களுக்கு இருக்கின்ற 33/11 கி.வோ. துணை மின் நிலையமே தச்சம்பட்டில் இருக்கின்ற மின் பளுவிற்குப் போதுமானது. அங்கே புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும்கூட, வருங்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, அந்தப் பகுதியிலே மின்தேவை அதிகரிக்கக்கூடும் என்பதைக் கருத்தில்கொண்டு, பக்கத்திலே வரகூரிலே 7 கிலோ மீட்டர் தொலைவிலே அமையவிருக்கின்ற அந்தப் புதிய துணை மின் நிலையத்திலே, 2 எம்.வி.ஏ. திறன்

[2015 ஏப்ரல் 1

அளவிற்கு அங்கே இருக்கின்ற மின் பளுவைக் குறைத்து, புதியதாக வரகூரிலே அந்த மின் பளுவைச் சேர்ப்பதற்கு இருக்கின்றார்கள். உங்கள் பகுதியிலே இருக்கின்ற மின் பளுவிற்கு ஏற்கெனவே இருக்கின்ற மின்மாற்றி போதுமானதாக இருந்தாலும்கூட, இன்னும் அந்த மின் பளுவைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாக உங்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, அந்தப் பகுதியிலே தடையில்லாத மின்சாரம் வழங்குவதற்கும், தாழ்வு அழுத்த மின்சாரப் பிரச்சினை ஏற்படுவதற்கும் வாய்ப்பே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், இன்னும் அந்தப் பகுதியில் பல்வேறு விவசாய இணைப்புகள் மற்றும் பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டாலும்கூட, புள்ளிவிவரப்படி அங்கே ஓர் ஆண்டுக்கு 0.4 எம்.வி.ஏ. திறன் அளவிற்குத்தான் மின் பளு அதிகரிக்கும். அந்த வகையில் இப்போது இருக்கின்ற மின் பளு வசதியோடு, புதியதாக வரகூரிலே ஏற்பட இருக்கின்ற மின் பளுவினுடைய வசதியையும் இணைத்துப் பார்க்கின்றபோது, 10 ஆண்டுக் காலத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மின் தேவை அதிகரித்தாலும்கூட பிரச்சினை எழாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, உங்களுடைய கோரிக்கையான தாழ்வு அழுத்த மின்சாரம் இருக்கக் கூடாது என்பது வேறு ஒரு வகையில் நிறைவேற்றித் தரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

*முற்பகல் 10-10*

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறைமூலம் புதிதாக மின் கம்பங்கள் ஊன்றி, மின் கம்பிகளை இழுக்கிறபோது, பல பட்டா இடங்களில், வீடு கட்டாமல் இருக்கின்ற பகுதிகளில் அந்த மின்வழித் தடங்கள் செல்கின்றன. பிறகு அந்த இடங்களில் வீடு கட்டுகிறபோதும், மின் இணைப்பு வாங்குகிறபோதும் மற்றும் அந்த மின் கம்பங்களை அகற்ற வேண்டும் என்று எண்ணுகிறபோதும், அதற்கு சில கண்டிஷன் போடுகிறார்கள். இணைப்பு தர முடியாது என்று சொல்கிறார்கள். இன்னொருபுறத்தில், மின் கம்பத்தை அகற்ற



2015 ஏப்ரல் 1]

பணம் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். நம்முடைய சில தேவைகளுக்காக, எந்த இடம் என்று தெரியாமல் மின் கம்பங்களை ஊன்றிவிடுகிறோம். பட்டா வீட்டுக்காரர்களிடம் இதுபோன்ற பல கண்டிஷன்கள் போடுகிறபோது, பல பேர் பாதிக்கப்படுகிறார்கள் என்பது நடைமுறையில் இருக்கிறது என்பது ஒரு விஷயம்.

மற்றொன்று, அரசுக் கட்டடத்திற்கே இதே நிலைதான். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ரேஷன் கடைக்கு மேலே மின் லைன் வருகிறது; இணைப்புத் தரமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அதை மாற்றிக் கொடுப்பதற்குப் பணம் கட்டவேண்டுமென்பதற்காக கூட்டுறவுத் துறையிலிருந்து கேட்டுப் பார்த்தோம். அவர்களும் பணம் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பேரூராட்சியும் பணம் கட்ட மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். கடைசியில், இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசி ரூ.46,000/-ஐ தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழையபடி கொடுத்தோம். இப்படி தேவையில்லாத சிரமம் ஏற்படுகிறது. அரசுக்கும் நஷ்டம் வருகிறது. இன்னொருபுறத்தில் பட்டா இடத்துக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதுகுறித்து வருகிறகாலத்தில் அந்த மக்களுக்குச் சிரமங்கள் ஏற்படாத வகையிலும், அரசுப் பணம் விரயமாவதைத் தடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே பலமுறை பேசப்பட்டுள்ளது. பல்வேறு பிரச்சினைகள் ஆங்காங்கு ஏற்பட்டுள்ளன. வீடுகள் இருக்கின்ற பகுதிகளில், மின்சாரக் கம்பிகள் செல்லும்போது, அந்தப் பகுதியிலிருந்து அவற்றை மாற்றுவதற்கு தனி நபர் பயன்படுகிற வகையிலே அதை மாற்றியமைக்கவேண்டும் என்று சொன்னால், மாறுதல் செய்வதற்குரிய மதிப்பீட்டுச் செலவை அந்தத் தனி நபர் ஏற்கவேண்டும். ஒட்டுமொத்தமாக, அது பொது மக்களுக்கான

[2015 ஏப்ரல் 1

தேவை என்று சொன்னால், ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையைக் கட்டலாம். உள்ளாட்சி அமைப்புகளிலும் ஏதேனும் பிரச்சினை இருக்குமென்றால், மின்சார வாரியம் தனது சொந்த நிதியிலிருந்து மேற்கொண்டு வளர்ச்சிப் பணிகளில் சேர்த்துக்கொள்ளலாம். இதனுடைய நோக்கமே, தனி நபர் பயன்பெறுகிறாரா அல்லது ஒட்டுமொத்த கிராமத்தின் தேவையா என்பதைக் கண்டறிந்துதான் அது முடிவு செய்யப்படுகிறது.

அதுபோல, சில இடங்களிலே வீடு கட்டுகின்றபோது, மின்சார வாரியத்தின் மின் கம்பிகள் எங்கு செல்கின்றதோ, அதற்கு நேராகக் கீழே வீட்டைக் கட்டிவிட்டு, அதற்குப் பின்பு அந்த மின்சாரக் கம்பியை மாற்றுங்கள் என்று சொல்கிறார்கள். அதற்குப் பதிலாக, ஏற்கெனவே மின் வழித்தடம் செல்லுகின்ற அந்தப் பகுதிகளிலே வீடு கட்டுவதைத் தவிர்த்து, சற்று மாற்றியமைத்துக்கொண்டால், இந்தப் பிரச்சினை வருவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இந்த அரசு உரிய வகையிலே பரிசீலித்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**107—**

### நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

***37316—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியாரிலிருந்து சோலையார் அணைக்கட்டு வரையுள்ள மாநில நெடுஞ்சாலையை அகலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?



2015 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

வால்பாறை தொகுதி, ஆழியாரிலிருந்து சோலையார் அணைக்கட்டுக்குச் செல்லும் சாலையின் ஒரு பகுதி இடைவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழியார் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து சோலையார் அணை வரையிலுள்ள சாலைகள் கடந்த காலத்தில் மோசமாக இருந்தன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, சாலைகள் போடப்பட்டுள்ளன என்பது உண்மை. சாலைகள் நன்றாகவே போடப்பட்டுள்ளன. அது குறுகலான சாலை. சமீப காலத்தில் வால்பாறை பகுதிக்கு Cross Hills, Suicide Valley, சோலையார் அணை, சின்னக்கல்லாறு அணை, காடம்பாறை நீரேற்றும் மின் திட்டம், கூழாங்கல் ஆறு, சின்கோனா, பாலாஜி கோயில், மானாம்புள்ளி பவர் ஹவுஸ் மற்றும் சோலையார் பவர் ஹவுஸ் போன்ற சுற்றுலா இடங்களைப் பார்ப்பதற்காக வெவ்வேறு மாநிலங்களிலிருந்து அதிகமான வாகனங்கள் வந்துகொண்டிருக்கிற காரணத்தினால், அந்தச் சாலை குறுகலான சாலையாக இருக்கின்ற காரணத்தினால், விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, அந்தச் சாலையை நன்றாகப் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் அந்தச் சாலையை அகலப்படுத்தி இரு வழிப் பாதையாக மாற்றுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலை எண் 78 பொள்ளாச்சி-

[2015 ஏப்ரல் 1

வால்பாறை சாலையில் கிலோ மீட்டர் 24/6 முதல் சோலையார் அணைக்கட்டுக்குப் பிரிந்து செல்லும் பகுதியான கிலோ மீட்டர் 58/4 வரையுள்ள சாலைப் பகுதி 5.50 மீட்டர் முதல் 10 மீட்டர் வரை அகலமாக தற்போதுள்ள வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ற அளவில் உள்ளது. இச்சாலை ஆனைமலை புலிகள் காப்பகம் பகுதியில் வருவதால், மேலும் அகலப்படுத்த, தேசிய வன விலங்கு உயிரியல் ஆணையத்தின் அனுமதி பெறுவதில் சிரமம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மேலும், இச்சாலையில் ரொட்டிக்கடை என்ற இடத்தில் கிலோ மீட்டர் 58/4-ல் பிரிந்து, சோலையார் அணைக்கட்டு வரை செல்லும் ஆனைமலை லூப் சாலை கிலோ மீட்டர் 0/0-லிருந்து 4/8 கிலோ மீட்டர் மற்றும் பழைய வால்பாறை சாலை கிலோ மீட்டர். 0/0-லிருந்து 19/2 கிலோ மீட்டர் பகுதிகள் அனைத்தும் கடந்த மூன்றாண்டுகளில் 3.75 மீட்டர் அகலத்திலிருந்து 5.50 மீட்டர் இடைவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. வால்பாறையில் இருக்கக்கூடிய அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான சாலைகள் சின்கோனா செக்போஸ்ட்டிலிருந்து 2/3, சின்னகல்லாறு போன்று இருக்கக்கூடிய சிரபுஞ்சி என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியில் வருடத்தில் 6 மாதங்கள் தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருக்கும். அந்தச் சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன. அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான சாலைகளைச் சீரமைக்க டெண்டர் விடப்பட்டிருப்பதாக இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.



2015 ஏப்ரல் 1]

அதேபோல், வால்பாறையில் இருக்கக்கூடிய தனியாருக்குச் சொந்தமான சில ஆலைகள் வில்லோனி எஸ்டேட், வன்னிமேடு எஸ்டேட், சங்கிலி ரோடு போன்ற பல்வேறு சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தச் சாலைகளையும் எடுத்துச் செய்வதற்கான முறையில், மாநில நெடுஞ்சாலைத் துறை ஏற்று, அதை உடனடியாக செய்வதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய சாலைகளெல்லாம் தனியார் எஸ்டேட் பகுதிகளில் இருக்கின்ற சாலைகளாகும். அவற்றையெல்லாம் நெடுஞ்சாலைத் துறைக்கோ அல்லது உள்ளாட்சித் துறைக்கோ மாற்றம் செய்த பிறகுதான், வனத் துறையிடமிருந்து அனுமதியைப் பெற்று, அங்கே சாலைகள் அமைக்க முடியும். மேலும், இது உள்ளாட்சி அமைப்பின்கீழ் வருகின்ற சாலையாக இருக்கின்ற காரணத்தினால், நெடுஞ்சாலைத் துறை மூலமாகச் சாலை அமைக்க இயலாது. போக்குவரத்துள்ள பகுதிகளில்தான் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தனியார் எஸ்டேட் பகுதிகளிலுள்ள அந்தச் சாலைளையெல்லாம் உள்ளாட்சித் துறையின்கீழ் கொண்டுவருவோமேயானால், அதற்குண்டான நிதியை ஒதுக்கி, அரசால் அந்தச் சாலைகள் செப்பனிடப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்டூர், பழகனுத்து, ஒட்டன்சத்திரம், தாராபுரம், திருப்பூர் மாநில நெடுஞ்சாலை S.H. 37 ஐந்தாண்டுகளாகச் சீரமைக்கப்படாமல் உள்ளது. தென் மாவட்டங்களில்

இருக்கக்கூடிய அத்தனை வாகனங்களும் ஒட்டன்சத்திரம் வழியாகத்தான் திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு போன்ற பகுதிகளுக்குச் செல்கின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அந்தச் சாலைகள் சீர் செய்ய எடுக்கப்பட்டிருப்பதாக இன்றைக்கு அறிகிறேன். கடந்த ஐந்தாண்டுகளாக அந்தச் சாலைகள் சீரமைக்கப்படாமல் இருப்பதால் அடிக்கடி விபத்து ஏற்பட்டுவிடுகிறது. அந்தச் சாலைப் பணிக்கான டெண்டர் விடப்பட்டு, உலக வங்கி அனுமதி பெறப்பட்டு, அதைச் சீரமைக்க இன்னும் ஓராண்டுக் காலமாகும். ஒட்டன்சத்திரம்-தாராபுரம் சாலை சுமார் 42 கிலோ மீட்டர் அளவிற்கு மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை மட்டும் சிறப்புக் கவனமாக எடுத்து, பராமரிக்க இந்த ஆண்டு நிதி ஒதுக்குவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தாழையூத்து, களிமந்தையம், இடையகோட்டை, தாடிக்கொம்பு வரை செல்கின்ற சாலை சுமார் 73 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலையும் ஐந்தாண்டுகளாகப் பராமரிக்கப்படாமல் உள்ளது. இப்படி ஒட்டன்சத்திரம் தொகுதியில் பல்வேறு சாலைகள் பழுதடைந்து இருக்கின்றன. அதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்— நான்காண்டுகளாகக் கருணை காட்டாமல்—இந்த ஆண்டாவது கருணை காட்டி, அந்தச் சாலைகளையெல்லாம் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகுதான், சாலைகளைச் சீர் செய்வதற்கும், அகலப்படுத்துவதற்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2006-2007 ஆம் ஆண்டு CRID-க்கு 1,183.52 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டு 729.20 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டு 1,015.19 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது.



2009-2010 ஆம் ஆண்டு 1,148.15 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. 2010-2011 ஆம் ஆண்டு 1,930.85 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. ஆக, ஐந்தாண்டுக் காலத்தில் சாலைகளை மேம்படுத்த, சீர்படுத்த, வலுப்படுத்த, விரிவுபடுத்த ரூ.6,006.91 கோடிதான் தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கப்பட்டது.

முற்பகல் 10-20

ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்தபிறகு, 2011-2012 ஆம் ஆண்டு ரூ.1,900 கோடியும், 2012-2013 ஆம் ஆண்டு ரூ.2,262 கோடியும், 2013-2014 இல் ரூ.3,285 கோடியும், 2014-2015 இல் ரூ.3,167 கோடியும், நடப்பாண்டில் 2015-2016 இல் ரூ.2,800 கோடியும் ஆக மொத்தம் ரூ.13,414 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள பழுதான சாலைகளையெல்லாம் சீர்செய்வதற்காக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே கோடிட்டுக் காட்டியிருந்தார்கள். ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து ஐந்தாண்டுக் காலம் நிறைவுபெற்ற, பழுதான சாலைகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக, நிதிநிலைக்கேற்ப சீர்செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் கிட்டத்தட்ட 39,246 கிலோ மீட்டர் சாலைகள் 13,038 கோடி ரூபாயில் சீர்செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். அவருடைய பகுதியிலே TNRSP திட்டத்தின்கீழ். உலக வங்கி நிதி உதவியோடு. தனியார் பங்களிப்புடன் இன்னும் நிறைவாக சாலைப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இன்னும் ஒரு சில மாதங்களில் அதற்கான டெண்டர் கோரப்பட்டு, பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரின் மையப் பகுதியில் ஓடுகின்ற

கௌண்டின்ய ஆற்றின் கரைமீது மாற்றுச் சாலை அமைத்துத் தரக் கோரியிருந்தேன். கடந்த 15 தினங்களுக்கு முன்புகூட அங்கு ஒரு விபத்து நிகழ்ந்துள்ளது. சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர்மீது டிராக்டர் மோதி அந்த இடத்திலேயே அவர் இறந்துவிட்டார். இப்படி அடிக்கடி அங்கே விபத்துகள் நடக்கின்றன. எனவே, கௌண்டின்ய ஆற்றின் கரைமீது ஒரு மாற்றுச் சாலை அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் புறவழிச் சாலை பற்றிக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். குடியாத்தம் புறவழிச் சாலை அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலை 234-ல் இப்புறவழிச் சாலை இருப்பதால், தேசிய நெடுஞ்சாலை அலகுமூலம் இப்புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி அமைகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் விபத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை செய்தித்தாளில் ஒரு செய்தியைப் பார்த்தேன். நான்குவழிச் சாலைகளிலே சுங்கச்சாவடியில் abnormal ஆகக் கட்டணத்தை ஏற்றியிருக்கிறார்கள். ரூ.25/- லிருந்து ரூ.75 வரை கட்டணம் உயர்த்தப்படவிருக்கின்றது என்ற செய்தியைப் படித்தேன். அது உண்மைதானா என்று அறிவதோடு, அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தச் சாலைகளெல்லாம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் வருகின்ற சாலைகள். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சுங்க வரிக் கொள்கைகள் 1997 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை வகுக்கப்பட்டுள்ளன. 1997 ஆம் ஆண்டு சுங்க வரிக் கொள்கையின்படி, இந்திய தேசிய நெடுஞ்சாலையில் மொத்தம் 22 சுங்கச்சாவடிகள் உள்ளன. 2008 ஆம் ஆண்டு சுங்க வரிக் கொள்கையின்படி, இந்திய தேசிய நெடுஞ்சாலையில் மொத்தம் 19 சுங்கச்சாவடிகள் உள்ளன. அவை சுங்கம் வசூலித்துக்கொண்டிருக்கின்றன. ஆக மொத்தம், 41 சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சுங்கம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 2008-க்கு முன்பு, அதாவது 1997 ஆம் ஆண்டு சுங்க வரிக் கொள்கையின்படியுள்ள 22 சுங்கச் சாவடிகளில் ஆண்டுக்கொருமுறை மொத்த விலைக் குறியீட்டின் உயர்வின் அடிப்படையில் சுங்கக் கட்டணம், செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் உயர்த்தப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டு சுங்க வரிக் கொள்கையின்படி அமைக்கப்பட்டுள்ள 19 சுங்கச் சாவடிகளில் ஆண்டுக்கொருமுறை மொத்த விலைக் குறியீட்டின் உயர்வின் அடிப்படையில் சுங்கக் கட்டணம் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் உயர்த்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலையின்மூலம் 1 சுங்கச் சாவடியில் 3 ஆண்டுகளுக்கொருமுறை ஏப்ரல் மாதம் உயர்த்தப்படுகிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் வகுக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் சுங்கச் சாவடியில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சுங்கச் சாவடிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வருபவை. இதில் மாநில அரசுக்கு எந்தச் சம்பந்தமும் கிடையாது. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 2011 ஆம் ஆண்டே தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுங்கச் சாவடிகளிலும் ஒரே சீரான கட்டணம் வசூல் செய்யவேண்டுமென்று மைய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. அதற்கு இதுவரை பதில் வரவில்லை. மீண்டும், அரசுச் செயலாளர்

மூலமாக நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கும் எந்தப் பதிலும் வரவில்லை. ஆகவே, மைய அரசுதான் இந்தச் சுங்கச்சாவடிக் கொள்கையை வகுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அவர்கள் போட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் சுங்கக் கட்டணம் உயர்த்தி வசூல் செய்யப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**108—**

## அங்கன்வாடி மையக் கட்டடம்

***38298—திரு. பொன். ராஜா:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், கூடுவாஞ்சேரி ஊராட்சி, பரிக்குப்பட்டு பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற அரசு, 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு புல எண் 45-ல் இடம் தேர்வு செய்துள்ளது. அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு, பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையம் பயன்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





*திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 2,094 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அவற்றில் 1,679 அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடங்களிலும், 157 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், 258 அங்கன்வாடி மையங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15,315 அங்கன்வாடி மையங்களுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஆகவே, விரைவில் பரிக்குப்பட்டு அங்கன்வாடி மையம் செயல்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

**திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரணி பாடி தரணி வணங்கும் எங்கள் குலதெய்வம்! ஏழை, எளியோர் பசிப்பிணிப் போக்க உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் எங்கள் அன்னபூரணி! சர்வ சமய பக்தர்களும் பசியாறும் வகையில் 518 கோயில்களிலே அன்னதானத் திட்டம் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) அமுது படைக்கும் எங்கள் வாழும் மனித தெய்வம்! ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த பொன்னேரி அகத்தீஸ்வரர் கோயிலின் 110 ஆண்டுகள் தடைப்பட்டிருந்த பங்குனி மாத பிரமோற்சவ விழாவை நடத்துவதற்கு ஆணையிடப்பட்டு, தற்பொழுது அவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கு பொன்னேரி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளின் பசி அறிந்து பாலூட்டுபவர் தாய்; தமிழக மக்களின் தேவை அறிந்து சேவை செய்பவர் மாண்புமிகு மக்களின் முதல்வர்*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்பார்கள். எங்கள் கேள்வி அவைக்கு வருவதற்கு முன்பே, எங்களின் தேவையை அறிந்து, பொன்னேரி தொகுதிக்குட்பட்ட கூடுவாஞ்சேரி ஊராட்சி, பரிக்குப்பட்டிலே அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்டப்பட்டு வருவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1992 ஆம் ஆண்டு முதல் 218 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து அங்கன்வாடி மையங்களின் மைய அலுவலகமான குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இலவம்பேடு பகுதியிலே சர்வே எண் 365/3-ல் 10 சென்ட் நிலம் ஊராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுப்பாண்டி அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்திருக்கிறேன். குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் தனியாக எந்த நிதி ஒதுக்கீடும் செய்வதில்லை. அதற்குப் பதிலாக, ரூ.3,500 மட்டும் வாடகையாகத் தருகிறார்கள். அந்த வாடகையை வைத்துதான் தற்பொழுது குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருக்கென்று சில அதிகார வரம்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட ஒன்றிய அலுவலகம் கேட்கின்ற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அறிக்கை பெற்று, பொன்னேரி தொகுதியிலே அந்த அலுவலகம் திறப்பது குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 10-30

**திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர், மங்கையர் குல தெய்வம், முகராசி படைத்த மகராசி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கின்ற தூத்துக்குடி 45-வது வார்டு, கோல்டன்புரம் பகுதியில் அங்கன்வாடி மையம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,315 அங்கன்வாடி மையங்களுக்கும் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துருவிற்காக அனுப்பி இருக்கக்கூடிய பட்டியலில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆதி திராவிடர் காலனியையும் சேர்த்து, அதை விரைந்து முடிப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**109—**

## கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு

*38060—**திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சியில் கூட்டுறவு வேளாண்மைக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியிலுள்ள ஆவுடையானூர் ஊராட்சியானது, நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியாகும். நாகல்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ஏற்கெனவே பெத்தநாடார்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அருணாப்பேரி கிராமத்தில் 150 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு உள்ளது. மேலும், கிராமப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2012-2013 ஆம் ஆண்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மற்றொரு கிடங்கும் கட்டப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்தின்மூலம் இப்பகுதி விவசாயிகளின் பயன்பாட்டிற்கு ஏற்கெனவே இரண்டு கிடங்குகள் உள்ள நிலையில், ஆவுடையானூர் ஊராட்சியில் புதிய கிடங்கு கட்ட சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.



**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவ மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக விவசாயிகளின் நலன் காத்திட மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களின் அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் வேளையில், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், சுந்தரபாண்டிபுரத்தில் இயங்கிவந்த கூட்டுறவு வேளாண்மை வங்கி கடந்த 2002-ல் கலைக்கப்பட்டது. சுந்தரபாண்டிபுரம் ஒரு சிறந்த வேளாண்மைப் பகுதியாகும். இதன் அருகில் திருச்சிற்றம்பலம், பட்டாகுறிச்சி ஆகிய கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் நஞ்சை நிலங்கள் 2,500 ஏக்கருக்கு மேலாகவும், புஞ்சை நிலங்கள் 2,000 ஏக்கருக்கு மேலாகவும் உள்ளன. இப்பகுதி சிற்றாறு பாசனத்தில் முதல் கால்வாய் வசதியைப் பெற்றுள்ளது. சுந்தரபாண்டிபுரத்தில் இயங்கி வந்த விவசாயக் கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்டதால், விவசாயக் கடன்கள், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற வேளாண்மை இடுபொருட்களை விவசாயிகள் பெறுவதற்கு 15 கிலோ மீட்டர் தொலைவு சென்று மேலகரம் கூட்டுறவு வங்கியை அணுக வேண்டியுள்ளது. எனவே, சுந்தரபாண்டிபுரத்தில் மீண்டும் இவ்வங்கியைத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் திரு. ரா. சரத்குமார் அவர்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிடங்குக் கட்டுவது குறித்துத்தான் கேள்வி கேட்டிருந்தார். இருந்தாலும் துணைக் கேள்வியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க வேண்டுமென்று ஒரு புதிய கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்வதற்காகச் சொல்கிறேன். கூட்டுறவுத் துறையின் சட்ட திட்டங்களில் பின்வரும் நிபந்தனைகள் கூறப்படுகின்றன: ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆரம்பிக்க

*அதன் விவகார எல்லைக்குள் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் நிலம் அதாவது 4,850 ஏக்கர் பயிரிடும் நிலப்பரப்பு இருக்கவேண்டும். அதில் மொத்த உறுப்பினர்கள் 60 விழுக்காடு பயிர்க் கடன் மட்டுமல்லாமல், பல்வேறு கடன்களையும் வாங்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். குறைந்தபட்சம் ஓர் ஆண்டிற்கு 2 கோடி அளவிற்கு அனைத்து வகையான கடன்கள் வழங்கக்கூடிய அளவிற்கு அந்தச் சங்கம் வணிகம் செய்யவேண்டும். அந்த அளவிற்கு வணிகம் செய்தால்தான், ஐந்து இலட்சம் ரூபாய் வட்டி வருவாய் கிடைக்கும். ஐந்து இலட்சம் ரூபாய் வட்டி வருவாய் இருந்தால்தான் அதன் நிருவாகச் செலவிற்கு ஏற்றதாக இருக்கும். இதுபோன்ற மேற்கூறிய நிபந்தனைகள் இருக்கும்பட்சத்தில், அங்கு புதியதாகக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவதற்கு துறைரீதியாக ஆய்வு செய்யப்படும்.*

*முற்பகல் 10-35*

*மேலும், வைத்தியநாதன் கமிட்டி, "தற்போது இயங்கி வருகின்ற சங்கங்களுடன் இணைத்துதான் செயல்பட வேண்டும் என்றும், புதிது, புதிதாகக் கூட்டுறவுச் சங்கங்களைத் திறந்தால், அதன் அருகில் அமைந்துள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயலிழக்கும் நிலை ஏற்பட்டுவிடும்" என்றும் சொல்லியிருக்கிறது. எனவே, அதுபோன்ற பாதிப்பு இல்லாத சூழ்நிலையில், அந்தப் பகுதி மக்களுக்குத் தேவை இருக்கும்பட்சத்தில், மேற்கூறிய கூட்டுறவுச் சட்ட விதிகளுக்குட்பட்டு அமையும்பட்சத்தில், அங்கு புதிதாகக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவதற்கு, துறை சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**110—**

## குடமுழுக்கு

***39089—திரு. எம்.கே. செல்வராஜு:**

*மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*சேலம் தெற்கு தொகுதி, அம்மாபேட்டையிலுள்ள அருள்மிகு குமரகிரி முருகன் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*சேலம் மாவட்டம், அம்மாபேட்டையில் குமரகிரி மலைமீது அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், அத்திருக்கோயில் ஆகம விதிகளுக்கு முரணாகவும், சிற்ப சாஸ்திர முறைகளுக்கு மாறுபட்ட வகையிலும் அமைந்துள்ளது. எனவே, அத்திருக்கோயிலை முழுவதுமாக இடித்துவிட்டு, புதிதாகத் திருக்கோயிலை நிர்மாணிக்கப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.*

**திரு. எம்.கே. செல்வராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் எல்லோருக்கும் தாய் மொழி உண்டு. ஆனால், 10 கோடி தமிழர்களுக்கும் தாய்தான் மொழி என்பதற்கு அடையாளம் 'அம்மா' எனும் மூன்றெழுத்துச் சொல். (மேசையைத் தட்டும் ஒலி) உழவினத்தின் உயிரோட்டம் காத்து, உலகத் தரக் கல்விக்கு மடிக்கணினி தந்து, தாலிக்குத் தங்கம் தந்து, தாய்க்குலத்தை இமையாக நின்று கண்ணாகக் காத்து நிற்கின்ற எங்கள் அன்னைத் திருமகள், எங்கும் நிறைந்திருக்கும் மக்களின் முதல்வர், முதல்வருக்கெல்லாம் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) முக்கடல் சூழ்ந்த பாரதத்தில் மூன்றாம் பெரும் இயக்கத்தை வழி நடத்தி, 39-க்கு 37-ல் வென்று, எதிரணியினருக்குப் பூஜ்ஜியத்தை வழங்கிய புரட்சிக் காவியம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று சூளுரைத்து மக்களாட்சி நடத்தி வரும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அம்மாபேட்டையில் அமைந்துள்ள அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி திருக்கோயில், குமரக்கரடு என்று சான்றோர்களாலும், குமரகிரி என்று ஆன்மிக பக்தர்களாலும் அழைக்கப்படுகிறது. இத்திருத்தலம் சேலம்-சென்னை புறவழிச் சாலையில் அமைந்துள்ளது. இந்த அருள்மிகு குமரகிரி முருகன் திருக்கோயில் 900 அடி உயரம் கொண்டது; இதில் 700 படிக்கட்டுகள் உள்ளன; இரண்டு கிலோ மீட்டர் நீளம் தார்ச் சாலை வசதி கொண்ட மலைப் பாதை உள்ளது. 1914 ஆம் ஆண்டு தவத்திரு கருப்பண்ண சுவாமி அவர்களால் இத்திருக்கோயில் முதன்முதலாகக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பின்பு 1959, 1991 ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மிகவும் பழமைவாய்ந்த, பிரசித்தி பெற்ற இத்திருக்கோயிலைப் புதிதாக நிர்மாணித்து, குடமுழுக்குச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் பாரம்பரியத்தையும் கலை மற்றும் கலாசாரத்தையும் பேணிக் காப்பதில் தலைசிறந்து விளங்கும் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், "சிதிலமடைந்த கோயில்களைக் கண்டறிந்து, அக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்து, குடமுழுக்குச் செய்திட வேண்டும்" என ஆணையிட்டார்கள். அதனடிப்படையில், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 286 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 7,192 திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தொன்மை வாய்ந்த திருக்கோயில்களைப் புனரமைக்க கடந்த 4 ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு 22.50 கோடி ரூபாய் வீதம் 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 250 தொன்மை





வாய்ந்த திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள 2,636 திருக்கோயில்களுக்கு 13.18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற கோயில்களில் 2,268 திருக்கோயில்களுக்கு 13.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த அவைக்குப் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேலம் குமரகிரி மலைமீது அமைந்துள்ள பழுதடைந்துள்ள நிலையில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலைப் புனரமைத்து, அதற்குக் குடமுழுக்குக் காண வேண்டுமென இங்கே கேள்விக் கணையினைத் தொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகம விதியென்று சொல்கின்றபோது, கருவறை, அர்த்த மண்டபம், மஹா மண்டபம், முருகன் கோயில் என்பதனால், மயில், பலிபீடம், கொடி மரம் மற்றும் கோபுரம் போன்றவையெல்லாம் அமைந்திருக்க வேண்டும் என்பது ஆகம விதி. அந்த ஆகம விதிகளின்படி, அந்தத் திருக்கோயில் அமையாததனால், அதனைப் புதுப்பிப்பதைவிட, புதிதாக நிர்மாணிக்க வேண்டுமென வல்லுநர்கள் ஒரு மதிப்பீடு தயார் செய்துள்ளார்கள். அதன் அடிப்படையில் இத்திருக்கோயில் மூலவர் சன்னதி, மஹா மண்டபம், சோபனா மண்டபம், நவக்கிரக சன்னதி, துர்க்கை சன்னதி, சாஸ்தா சன்னதி, விநாயகர் சன்னதி, ராஜகோபுரம் ஆகியவற்றைக் கட்டும் பணி மற்றும் திருக்கோயிலை இடித்து அகற்றும் பணிக்கு ஒரு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திருப்பணிகள், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதிமூலம் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் நிறைவடைந்தவுடன், மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இத்திருக்கோயில் குடமுழுக்கு வெகுசிறப்பாக நடைபெறும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

**திரு. எம்.கே. செல்வராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த, சிதிலமடைந்த இத்திருக்கோயிலை நிர்மாணித்து குடமுழுக்கு செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, சங்கரி சோமேஸ்வரர் திருக்கோயில் மற்றும் தாரமங்கலம் கைலாசநாதர் திருக்கோயில்களில் குடமுழுக்குகளுக்கான ஆயத்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்பணியினை விரைவுபடுத்தி, இவ்விரு கோயில்களுக்கும் குடமுழுக்குச் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்த இரு திருக்கோயில்களின் குடமுழுக்குப் பணிகளும் விரைவுபடுத்தப்பட்டு, வெகு விரைவில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு திருப்பணிகளும் முடிவுற்று, குடமுழுக்கும் நடைபெறும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2015 ஏப்ரல் 1]

**111—**

### சர்க்கரை ஆலை

***52042—திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதிக்குட்பட்ட கரும்புப் பகுதி, ஏற்கெனவே நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்திலுள்ள பொன்னி சர்க்கரை ஆலைக்கும், தருமபுரி மாவட்டம், அரூரிலுள்ள சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கும் ஒதுக்கப்பட்ட பகுதியாகும். அந்த இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கும் தேவையான கரும்பு இல்லாத காரணத்தினால், முழு அரைவைத் திறனுடன் அரைக்க முடியாமல் கடந்த மூன்று ஆண்டுகளாகக் குறைந்த அளவில் அரைவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. போதிய அளவு கரும்பு இல்லாத காரணத்தினால், ஓமலூர் தொகுதியில் புதிய சர்க்கரை ஆலை அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.

**திரு. சி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய சட்டமன்றத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த மாதத்திலே, நமக்கெல்லாம் மீண்டும் ஒரு தீபாவளி வர இருக்கிறது

[2015 ஏப்ரல் 1

என்றால், இந்த மாதத்திலே தமிழகத்தின் மக்களின் முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு சப்ஜெக்ட் பேசுங்கள்.

**திரு. சி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக புடம் போட்ட தங்கமாக, சிங்கமென இந்த மன்றத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற அந்த நாள் நமக்கெல்லாம் மீண்டும் ஒரு தீபாவளியாக அமையும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

அரூர், சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ஓமலூரிலிருந்து செல்ல வேண்டுமென்று சொன்னால், 60 கிலோ மீட்டர் தூரம் வடக்கே செல்ல வேண்டும். அதேபோல, விவசாயிகள் தெற்கே உள்ள பொன்னி சர்க்கரை ஆலைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 60 முதல் 80 கிலோ மீட்டர் தூரம் வரை செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதிதான் கரும்பு அதிகமாக உற்பத்தியாகக்கூடிய இடமாயிருக்கிறது. நான் இந்த நேரத்திலே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம், ஓமலூரில் உள்ள அரூர் சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு பொன்னி சர்க்கரை ஆலையிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கி, ஓமலூர் மத்திய பகுதியிலே குறைந்த திறன்மிக்க ஒரு கரும்பு ஆலையை மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசுதான் அமைத்துக்கொடுக்க முடியும். இந்தப் பகுதியில் ஆலை அமைக்க வேண்டுமானால், அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் நிறைவேற்றப்படுமென்று எங்களுடைய தொகுதி மக்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றார்கள். எனவே, இந்த ஆலை அமைப்பது குறித்த கோரிக்கையை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்து, குறைந்த திறன் படைத்த ஒரு சர்க்கரை ஆலையை. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2015 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன், இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன, உரையை முடியுங்கள்.

**திரு. சி. கிருஷ்ணன்:** எனவே, சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள் ** குறித்துப் பேசிய வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சர்க்கரை ஆலைக்குச் செல்வதற்கு 65 கிலோ மீட்டர் தூரமும், பொன்னி சர்க்கரை ஆலைக்குச் செல்வதற்கு 80 கிலோ மீட்டர் தூரமும் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆக, மத்தியில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இரண்டு ஆலைகளுக்கும் தேவையான கரும்பே இல்லாத காரணத்தினால், 50 சதவிகிதத்திற்கும் குறைந்த அளவே இந்த இரண்டு ஆலைகளிலும் கரும்பு அரைவை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. புதிதாக இன்னொரு ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 15,000 ஏக்கர் கரும்பு பயிரிட வேண்டும். ஏற்கெனவே, ஓமலூர் பகுதியிலே 1,500 ஏக்கர் அளவிற்குத்தான் கரும்பைப் பயிரிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னேன். அங்கே கரும்பு அதிகமாகப் பயிரிடுகின்றபொழுது, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. சி. கிருஷ்ணன்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**112—**

## பேருந்து பணிமனை

***34792—திரு. செ. காமராஜ்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரங்கம்பட்டி பகுதியில் 3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*



**113—**

## கால்நடைக் கிளை நிலையம்

***47383—திரு. க. பாண்டியராஜன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சி, வெள்ளூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விருதுநகர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற வெள்ளூர் ஊராட்சியிலே கால்நடை பராமரிப்புத் துறை விதிகளின்படி, 3,000-க்கும் அதிகமான அலகுகள் உள்ளதால், அரசு விதிகளின்படி கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதி மக்களின் நீண்ட, நெடுநாள் கனவான ராமமூர்த்தி சாலை மேம்பாலப் பிரச்சினையில் தீய சக்திகளால் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை அகற்றி, மேம்பாலம் அமைக்க நேற்று ஆணை பெற்றுத் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றி மலர்களை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2015 ஏப்ரல் 1

*முற்பகல் 10-50*

"The greatness of a Nation and its moral progress can be judged by the way its animals are treated" *என்பது மகாத்மா காந்தியின் மறையாத வரிகள். "ஒரு நாட்டின் உன்னதமும், அதன் ஆன்ம உயர்வும், அந்த நாடு தன் வாயில்லா ஜீவன்களை எப்படி நடத்துகிறது என்பதனை வைத்தே அறியப்படுகிறது" என்ற மகாத்மாவின் வார்த்தைக்கு வடிவம் தரும் வகையில், விலையில்லா கறவை மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம், கால்நடைத் துறை வாயிலாக நமது பொருளாதாரத்திற்கு 4 சதவிகித பங்களிப்பும், வேலைவாய்ப்பில் 5 சதவிகித பங்களிப்பும் வழங்கிவரும், "ஆவினத்திற்கும் ஆனந்தம் தரும்" மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

*விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் வெள்ளூர் ஊராட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி. வெள்ளூரைச் சுற்றியுள்ள சிதம்பராபுரம், முத்துக்குமராபுரம், அம்மன்கோவில்பட்டி, சாத்தப்பிள்ளைப்பட்டி, கவுண்டம்பட்டி, மேலாமத்தூர், குமாரபுரம், சேர்வைக்காரன்பட்டி உள்ளிட்ட குக்கிராம மக்களின் வாழ்வாதாரமாகக் கால்நடை வளர்ப்பு விளங்குகிறது. கடந்த நான்கு வருடங்களில் அரசின் சீரிய திட்டங்களின்மூலம் இந்தப் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குமிழங்குளம் கால்நடை மருந்தகத்திற்கு மக்கள் செல்ல வேண்டியுள்ளது. வெள்ளூரிலேயே கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி, நேரடியாக மருந்தகம் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லை. முதலிலே 3,000 அலகுகள் இருக்கும்போது கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும். அதுவே 5 ஆயிரம் அலகுகளாக எண்ணிக்கை அதிகமாகும்போது, மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். அதுவே 10 ஆயிரம் அலகுகளாக*



2015 ஏப்ரல் 1]

*எண்ணிக்கை அதிகமாகும்போது மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படும்; இதுதான் விதி. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு, அங்கே 5 ஆயிரத்திற்கும் அதிகமாக கால்நடைகளின் அலகுகள் இருக்குமென்று சொன்னால், அது சிறப்பு நேர்வாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு உறுதி தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருதுநகர் தொகுதியில் கால்நடை உறைவிந்து வங்கிக் கட்டடம் கட்டும் பணிகள் 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடைபெறுவதற்கும், இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்தமைக்கும் நன்றி. அதைப்போல், விருதுநகரில் 24 மணி நேரம் செயல்படும் ஈனியல் அறுவை சிகிச்சை சிறப்புப் பிரிவுகள் இயங்கும், உதவி இயக்குநர் நிலையில் உள்ள முதன்மை மருத்துவர் மற்றும் உதவி மருத்துவர்கள் செயல்படும் கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பட்ஜெட் வரலாற்றிலேயே, கால்நடைத் துறை ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைப் பார்த்ததேயில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், (மேசையைத் தட்டும் ஒலி) பட்ஜெட்டிலே ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி இந்தத் துறைக்கு நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள். கடந்த நான்கு ஆண்டுக் காலமாக, ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கிக் கொண்டிருக்கின்றார்கள். வாக்களித்த மக்களை*

[2015 ஏப்ரல் 1

மட்டுமல்ல; வாயில்லா ஜீவன்களையும் காக்கக்கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே மருத்துவமனை அமைக்க முடியுமா என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**114—**

**ஊதிய உயர்வு**

*__20292—திரு. என்.எஸ்.என். நடராஜ்:__

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது சம்பந்தமாக வினா எழுப்பியுள்ளார். கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்விதமாக, அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும், ஏற்கெனவே அவர்கள் பெறும் அடிப்படைக் கூலியில், 2011 ஆம் ஆண்டு 10 சதவிகிதம் உயர்வும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலே, தலா 10, 10 சதவிகிதம் உயர்வும் வழங்கப்பட்டது. அதைப்போலவே, ஏற்கெனவே அடிப்படைக் கூலியுடன் வழங்கப்பட்டு வந்த 105 சதவிகித அகவிலைப் படி 2014 ஆம் ஆண்டு 10 சதவிகிதம் உயர்த்தப்பட்டு, 105 சதவிகிதத்திற்குக் கூடுதலாக, 115 சதவிகிதம் அகவிலைப் படி கடந்த 1-11-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக, 1,164 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள நெசவாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி மக்கள் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரையும் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. என்.எஸ்.என். நடராஜ், யாரையும் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-55

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சம்பள உயர்வு மற்றும் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் செய்து கொடுத்து நெசவாளர்களுக்கு நல்ல திட்டத்தைக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் இதயத்தில் இருக்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் கைத்தறித் தொழிலாளர்களுக்கு மீண்டும் ஊதிய உயர்வு வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 ஏப்ரல் 1

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் கைத்தறித் துறையிலுள்ள திட்டங்களிலே முதன்முதலாகக் கைத்தறி நெசவாளர்களுக்கென்று 1-11-2014 முதல் பாவு சுற்றுதல், பசை போடுதல் மற்றும் தார் சுற்றுதல் போன்ற நெசவுக்கு முந்தைய பணிகளுக்காக அவர்கள் பெற்றுவரும் கூலியிலே தனியாக 20 சதவீதம் அளவிற்கு நெசவுக்கு முந்தைய கூலி வழங்கப்பட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இதன் மூலமாக பட்டு கைத்தறி நெசவாளர்கள் ஓர் உருப்படிக்கு சுமார் ரூ.200/- முதல் ரூ.322/- வரை கூலி உயர்வும், பருத்தி கைத்தறி நெசவாளர்கள் ரூ.15/- முதல் ரூ.70/- வரை கூலி உயர்வும் தனியாக அவர்கள் பெற்று வருகின்றார்கள். இந்த ஆண்டு அவர்களுக்கு அகவிலைப் படி 10 சதவீதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டு எந்த வகையிலே அவர்களுக்குக் கூலி உயர்வு வழங்கலாம் என்பதை ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாமென்று சொல்லிவிட்டேன். அவர் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) பெயரைக் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்துகொள்வது நியாயமா? (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்துகொள்வது நியாயமா? (குறுக்கீடுகள்)



2015 ஏப்ரல் 1]

உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இதுபோன்று நடந்துகொண்டால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுத்தான் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) இல்லை. நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, அப்படி பெயர் இடம்பெற்றிருந்தால் எடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் பேரவைத் தலைவரை அப்படியெல்லாம் நிர்ப்பந்திக்க முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை நீங்கள் அப்படியெல்லாம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்

முற்பகல் 11-00

பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**115—**

## விளையாட்டு அரங்கம்

***29278—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 ஏப்ரல் 1

(அ) கும்பகோணத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பகோணத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியில் பத்து கல்லூரிகளும், 40 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அதில் சுமார் 60,000 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். பிற தடகளப் போட்டிகள் மற்றும் குழுப் போட்டிகளான கால் பந்து, வாலிபால், கைப் பந்து, வளைகோல் பந்து, கூடைப் பந்து, கோ-கோ மற்றும் கபடி போன்ற விளையாட்டுகளை விளையாட வேண்டுமென்று சொன்னால், கும்பகோணத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தூரமுள்ள தஞ்சாவூருக்கும், மயிலாடுதுறைக்கும், திருவாரூக்கும் செல்ல வேண்டியிருக்கின்றது. மண்டல விளையாட்டுப் போட்டிகள் என்றால் 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நாகப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றது.

எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தின் மத்தியப் பகுதியில் கும்பகோணம் அமைந்துள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட விளையாட்டு அரங்கம் ஒன்றை கும்பகோணத்தில் அமைத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2015 ஏப்ரல் 1]

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் மக்களுடைய தேவைகளை அறிந்து, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் மக்களுக்காகச் சிறப்பான முறையில் பணியாற்றி வந்து கொண்டிருப்பதை தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கின்றார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய நல்லாசியோடும் வழிகாட்டுதலோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு மாவட்டத் தலைநகரங்களில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம், தடகளம், கூடைப் பந்து, கால் பந்து, கபடி, கையுந்துப் பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளை உள்ளடக்கி, விளையாட்டு அரங்கத்தை அமைத்து வருகின்றது. மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு வசதியை ஏற்படுத்தியபின், மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கிட விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திட்டமிட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தின் தலைநகரமாக தஞ்சாவூர் விளங்கிக்கொண்டிருக்கின்றது. தஞ்சாவூரில் திறந்தவெளி அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது என்றாலும், கும்பகோணம் மாவட்டத்தின் தலைநகரம் அல்ல. ஆதலால், மாவட்டத்தின் விளையாட்டு அரங்கத்தை கும்பகோணத்தில் அமைத்திட வாய்ப்புகள் இல்லை. மேலும், கும்பகோணத்தில் விளையாட்டு வசதிக்காக, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் இடமில்லை. ஆணையத்திற்கு விளையாடும் இடத்தை மாற்றம் செய்தால் அல்லது ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தால், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலோடு மதிப்பீடு மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைமைக்கேற்ப கும்பகோணத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

[2015 ஏப்ரல் 1

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் திருக்கோயில்கள் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். கும்பகோணம் வளர்ந்து வருகின்ற வணிக நகரமாக உள்ளது. மேலும், மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்டத் தலைமை மருத்துவமனை, மாவட்ட கால்நடை மருத்துவமனை, மாவட்ட பதிவுத் துறை அலுவலகம், மண்டலப் போக்குவரத்து அலுவலகம், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, காரைக்குடி, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தினுடைய தலைமையிடம், என பல்வேறு மத்திய, மாநில அரசுகளின் துறைத் தலைமையிடமாகக் கும்பகோணம் உள்ளது. வரும் ஆண்டுகளில் கும்பகோணத்தைத் தலைமையிடமாகவும், தனி மாவட்டமாகக்கூடிய அந்தஸ்து பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய அளவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகள் நிறைந்த ஊர் கும்பகோணம். இளைஞர்கள், தங்களது விளையாட்டுப் போட்டித் திறமையை வளர்த்துக்கொள்ளவும், மாணவ-மாணவிகள் அகில இந்திய அளவில் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்குப் பயிற்சிக் களமாகப் பயன்படும் வகையில் அது அமைய வேண்டும். மேலும், பல ஆண்டுகளாக மாவட்டத்தின் தடகளச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறேன். பல்வேறு புதிய வீரர்களை உருவாக்கியிருக்கின்றோம். இந்த நிலையில் வர இருக்கிற 2016 ஆம் ஆண்டு கும்பகோணம் மகாமகம் பெருவிழாவினை நினைவூட்டும் வகையில், சிறப்பினமாகக் கருதி, கும்பகோணத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2015 ஏப்ரல் 1]

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிமுறைகளின்படி மாவட்டத்தின் தலைநகரங்களில்தான், மாவட்ட விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மத்தியில் அமைந்திருக்கின்றது; பத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன; நாற்பதுக்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 30,000 மாணவ/மாணவியர்கள் இருக்கின்றார்கள். குழுப் போட்டிகளுக்குச் சிறந்த இடமாக அமைந்திருக்கின்றது. 40 கிலோ மீட்டர் தஞ்சாவூருக்கு தள்ளியிருக்கின்றது. இது கோயில்கள் நிறைந்த நகரமாக இருக்கிறது என்றார். கோயில் நிறைந்த நகரத்திற்கும் விளையாட்டிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மாவட்டத்தின் மத்தியில் அமைந்துள்ளதால் மட்டுமே ஒரு மாவட்டத்தின் தலைநகரத்தில் அமைக்கப்படும் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. வீரர்கள் நிறைந்த இடமாக இருந்தால் கட்டாயம் விளையாட்டுத் துறையின் மூலமாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மகாமகம் போன்ற திருவிழாக்கள் நடக்கின்றபோது, விளையாட்டு வீரர்களுக்கும் மகாமகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Common Wealth போட்டியில் பங்கு கொண்டு வேலூரைச் சேர்ந்தவர் சிறப்பான முறையில் தங்கப் பதக்கம் வென்றதை மாண்புமிகு அம்மா அவர்கள் பாராட்டி, ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் அங்கே விளையாட்டிற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, விளையாட்டு வீரர்கள் வரக்கூடிய காலங்களில், தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் போன்றவற்றை தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குகொண்டு சிறப்பான முறையில் வெற்றி பெற்றால் கட்டாயம் துறைரீதியாக ஆய்வு செய்து விளையாட்டு வீரர்களுக்கான வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

[2015 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**116—**

### பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***41332—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கரியகோவில்வளவிலுள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கரியகோவில்வளவில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை, அப்பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் அமைந்துள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் நல்லரசால் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற உயர்ந்த



2015 ஏப்ரல் 1]

இலட்சியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கரியகோவில்வளவில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியில் சுமார் 450 மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள். தற்சமயம் இவர்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 12 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாண்டே இப்பள்ளியினைத் தரமுயர்த்திச் செயல்படுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரியகோவில்வளவில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியானது 1981 ஆம் ஆண்டில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியாகத் துவங்கப்பட்டு, 1987-ல் நடுநிலைப் பள்ளியாகவும், 2006-ல் உயர்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது இந்த அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி 167 மாணவர்கள், 133 மாணவிகள் ஆக மொத்தம் 300 மாணவ-மாணவிகளுடன் 5 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமையாசிரியர் ஆகியோருடன் இயங்கி வருகிறது. கரியகோவில்வளவில் வசிக்கும் 1,270 மக்களில் 1,260 நபர்கள் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாவர். கரியகோவில்வளவில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியிலிருந்து சுமார் 11 கிலோ மீட்டர் தூரத்தில் கருமந்துறை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இருப்பினும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் இப்புனித அரசு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான இடவசதி, திட்டத்தின் பயன்பாடு மற்றும் நிதிநிலை இவற்றைக் கருத்திற்கொண்டு

கரியகோவில்வளவில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

**திரு. சு. மாதேஸ்வரன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆலோசனைக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுமென்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**117—**

## வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***37901—திரு. கே. பொன்னுசாமி:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாராபுரம் தொகுதி, தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையிலே உள்ளது. மேலும், வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பகுதியில் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வட்ட வழங்கல் பிரிவு மற்றும் தேர்தல் பிரிவு மற்றும் கூட்ட அரங்கம் ஆகியவற்றைத் தனியே கட்ட பொதுப் பணித்*





*துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

**திரு. கே. பொன்னுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறைஎன்று வைக்கப் படும்"*

*என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க நீதிநெறியோடு ஆட்சி தந்த தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை தமிழக மக்கள் கடவுளாக வணங்கி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதம் தொட்டு வணங்குகிறேன். தாராபுரம் தொகுதி, தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்த கட்டடம். ஆங்கிலேய ஆட்சியின்போது கட்டப்பட்ட கட்டடம். சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் அக்கட்டடம் கட்டப்பட்டது. அதில் வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், நில அளவை அலுவலகம், சமூகப் பாதுகாப்புத் திட்ட அலுவலகம் போன்ற அலுவலகங்கள் செயல்படுவதால் இட நெருக்கடியும் உள்ளது. ஆகவே, புதிய அலுவலகம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி வருவாய்த் துறை நிருவாகம் புத்துயிர் பெற்றிருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுகின்ற வகையிலேதான் வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை இல்லாதவகையில், காணாத வகையில், கடந்த*

*4 ஆண்டுகளில் ரூ.342.1 கோடியில் 351 வருவாய்த் துறை கட்டடங்களை வாரி வழங்கி, உருவாக்கித் தந்த ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.125.59 கோடி நிதி ஒதுக்கீட்டிலே, புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 34 வட்டாட்சியர் அலுவலகங்கள் உட்பட 59 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறும் கட்டடம் நல்ல நிலையில் இருக்கின்ற காரணத்தினாலும், பழைய கட்டடமாக இருந்தாலும் அது பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் இருக்கின்ற காரணத்தினாலும், கூடுதலாகத் தேவைப்படுகின்ற கட்டடங்களைக் கட்டுவதற்குப் பொதுப் பணித் துறை மூலமாக அங்கே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்குவதற்கும், அவை மக்களுக்கு எளிதாகக் கிடைப்பதற்கு உறுதிசெய்தும், இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே வருவாய்த் துறையினை வழிநடத்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

**திரு. கே. பொன்னுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையினைப் பெற்று கூடுதலாகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*





**118—**

## புதிய கட்டடம்

**35315—திரு. வீ.பி. நாகைமாலி:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழையூரிலுள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூரில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம், தற்போது கீழையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இவ்வலுவலகத்திற்குப் புதியதாகச் சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

**திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழையூரில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் மிகவும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது. இதனால் இந்த அலுவலகம் பக்கத்தில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஒரு வகுப்பறையில் தற்போது இயங்கி வருகின்றது. இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தின் நிருவாகத்தில் 16 உதவிபெறும் பள்ளிகளும், 41 அரசுப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் 252 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். மிகவும் பழுதடைந்துள்ள இந்த*

அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டக் கோரி நாகை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்மூலம் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு முறையான கருத்துரு அனுப்பப்பட்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கட்டடம் கட்டுவதற்கான நிலமும் தேர்வு செய்யப்பட்ட நிலையில் இவ்வளவு காலதாமதம் ஏன் என்று புரியவில்லை. எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விரைவாக இந்தக் கட்டடத்தினைக் கட்டித் தர நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழையூர் ஊராட்சி மன்றத் தலைவரால் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் கட்டுவதற்கு சர்வே எண் 388/17-ல் 62.5 ஏர்ஸ் கிட்டத்தட்ட 66,000 சதுர அடி பரப்பளவுக் கொண்ட அரசு புறம்போக்கு காலி மனை ஒதுக்கீடு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை நாகப்பட்டினம் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் பெயரில் பதிவு மாறுதல் செய்ய மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறவேண்டும். தற்போது உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்ட, Part-II, பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலுள்ள, கீழையூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்டிட, மேற்குறிப்பிட்ட காலி மனையினை நாகப்பட்டினம் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் பெயரில் மாவட்ட ஆட்சியர் ஒதுக்கீடு செய்தும், பகுதி-2 திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்தும், அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாவிடில், சட்டமன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தரும் பட்சத்தில், கீழையூர் உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதல்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து நான் இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடத்தைக் கட்ட கோரிக்கை வைத்து, முயற்சி எடுத்து வருகின்றேன். அதற்கான நிலமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இந்த அலுவலகம் பக்கத்தில் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளி வகுப்பறையிலே செயல்படுகிறது. ஏற்கெனவே அந்தப் பள்ளி வகுப்பறை இல்லாமல் சிரமப்படுகிறது. இந்த நிலையிலே இந்த அலுவலகமும் அங்கு செயல்படுவதினாலே மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகத்தை இந்த ஆண்டிலேயே கட்டி முடிப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து கட்டடம் கட்ட வலியுறுத்தி வருகிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வருடம் Part-II திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதனைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**119—**

## அகழி அமைத்தல்

***43700—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேற்குத் தொடர்ச்சி மலை அருகே உள்ள கம்பம் ஒன்றியத்தில் வன விலங்குகள் தோட்டப் பகுதியில் நுழைவதைத் தடுப்பதற்கு அகழி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை அருகேயுள்ள கம்பம் ஒன்றியத்தில் வன விலங்குகள் வனப் பகுதியைவிட்டு தோட்டப் பகுதியில் நுழைவதைத் தடுக்கும் வகையிலும், விவசாய நிலங்களில் பயிர்ச் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டும் மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 2013-2014 ஆம் ஆண்டில் 48 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 95 இலட்சம் செலவிலே யானைகள் புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 வருடங்களில் இந்தச் சபையில் கேள்வி நேரத்தின்போது நான் அறிந்துகொண்டது என்னவென்றால், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் கேள்வி கேட்கின்றபோதே, அதற்குண்டான திட்டத்தை தீட்டி முன்பே நடைமுறைப்படுத்துகின்ற ஒரே அரசு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் கூறுகின்ற நல்ல செய்தியாகும்.*





*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, 48 கிலோ மீட்டர் தூரம் அகழிகள் வெட்டியதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேவேளையில், இடையில் பாறைகள் இருப்பதால் அந்த இடங்களில் HITACHI இயந்திரம் மூலமாகத் தோண்ட முடியாத ஒரு சூழ்நிலையில், அவற்றை வெடிவைத்துத் தகர்க்க வேண்டுமென்ற ஒரு திட்டம் தங்களிடத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் வெடிவைத்துத் தகர்த்து, அதையும் அகழிகளாக வெட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மனித-வன உயிரினங்கள் மோதலைத் தடுக்கவும், வன உயிரினங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், பயிர்ச் சேதத்தைத் தவிர்க்கவும் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.*

*அதன் அடிப்படையிலே, 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தமிழகத்திலுள்ள 14 மாவட்டங்களிலே 1,895.64 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 58.12 கோடி செலவிலே யானைகள் புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இதுதவிர 2011 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை, 185.58 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 334.80 இலட்சம் செலவில் சூரிய மின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், வன விலங்குகள் காட்டைவிட்டு வெளியே வராவண்ணம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளும் கடந்த நான்கு ஆண்டுகளாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடையிலே*

இருக்கின்ற பாறைப் பகுதியில் வேட்டு வைத்து அந்த இடங்களிலே அகழிகள் வெட்ட முடியாத காரணத்தினால்—ஏனென்றால் வேட்டு வைத்தால் வன விலங்குகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்—அந்தப் பகுதியிலே தடுப்புச் சுவர்கள் எழுப்பி, அங்கே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பு வேலி அமைப்பது நல்ல திட்டம். அதேவேளையில், எங்கள் கம்பம் valley பகுதியில்தான் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, வன விலங்குகள் அதிகமாக இருக்கின்றன. அதை வனத் துறையினர் பார்க்கின்ற வகையில், watch tower அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதைப்போன்றும், பல்வேறு கோரிக்கைகளின் அடைப்படையிலும் பல்வேறு இடங்களில் Watch Tower-கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேட்டைத் தடுப்புக் காவலர்கள் முகாம்கள் அமைக்கப்பட்டு, அவை நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு வரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிகாட்டுகின்ற மேற்கூறிய பகுதியில் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூறிக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**120—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***50580—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, இளையாளூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விதிமுறைகளின்படி இளையாளூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களுக்காக நான் மக்களால் நான்’, என்று தாய்த் தமிழகத்தை அமைதி, வளம், வளர்ச்சி கண்டு சாதனைத் திட்டங்களைத் தந்தவரே! ஆயிரம் சூழ்ச்சிகள் அணி வகுத்தாலும் அற்பனின் எண்ணங்கள் பழியைச் சேர்த்தாலும் எதிலும் வெல்லும் தாயே! இதிலும் வெல்வீர்கள் தாயே! என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2015 ஏப்ரல் 1

எனது பூம்புகார் தொகுதிக்குட்பட்ட இளையாளூர் வடகரை ஊராட்சியில் 1958-ல் ஊரக மருத்துவமனை திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்தது. தற்போது இந்த மருத்துவமனை சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இப்பகுதிவாழ் மக்களின் நலன் கருதி இவ்வூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொதுவாக சமவெளிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க 30 ஆயிரம் மக்கள்தொகை தேவைப்படுகின்றது. 8 கி.மீ. தூரத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கவேண்டும் என்பது மத்திய அரசு வகுத்திருக்கின்ற விதிமுறையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஊராட்சி ஒன்றியத்திலே ஏற்கெனவே ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமானதாக இருந்து அங்கு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகையினாலே, மேற்படி இளையாளூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையாளூர் ஊராட்சி சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. மேலும், அன்னவாசல், கழனிவாசல், கடக்கம் மற்றும் குளிச்சார் ஆகிய ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதி. அங்கு சுமார் இருபதாயிரம் மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் மருத்துவ வசதி பெறவேண்டுமென்றால் 8 கி.மீ. தொலைவிலுள்ள மயிலாடுதுறைக்கும், 8 கி.மீ. தொலைவிலுள்ள செம்பனார்கோவிலுக்கும் செல்லவேண்டிய சூழல் உள்ளதால், மக்களின் நலனில் மகத்துவம் காணும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின்



2015 ஏப்ரல் 1]

அரசு இப்பகுதிவாழ் மக்கள் மருத்துவ வசதிபெற ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மக்கள்தொகையின் எண்ணிக்கைக்கேற்ப, விதிமுறைகளுக்கேற்ப வரும் காலத்தில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள், கேள்வி நேரத்தின் போது குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்ற அடிப்படையிலே, அவர் கூறிய அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) ஓசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் சொல்கிறேன். வேறு அலுவல் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். ஓசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானதாக வந்த செய்தி குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. இ. பெரியசாமி, திரு. அர. சக்கரபாணி,

திரு. டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் விதி *56*-ன்கீழும், திரு. டி. செங்குட்டுவன், விதி *55*-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரும் பேரவை விதி *55*-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### (அ) குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சப்ஜெக்ட்டுக்குள் போய்விட்டேனே! (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



ஆனால் அதேநேரத்தில் முக்கியமான பிரச்சினை, சென்னை மற்றும் தமிழகம் முழுவதும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினை. அதையும் எடுத்துக்கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முதலில் இதுசம்பந்தமாகப் பேசுவோம், பிறகு பார்க்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து விரிவான விளக்கம் சட்டமன்றத்திலே அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதற்கு மேல் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான விளக்கக் பேரவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், துறை சார்ந்த செயலாளர்கள், அலுவலர்கள் கேட்ட நிதி போதிய அளவில் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. நிலைமையைக் கூர்ந்து கவனித்து, தேவை ஏற்படின் கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) ஒசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானது-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் செயல்பட்டுவரும், பரிமளம் தனியார் பள்ளியில் கடந்த *18-3-2015* அன்று நடைபெற்ற

[திரு. டி. செங்குட்டுவன்] [2015 ஏப்ரல் 1

கணிதத்தேர்வின்போது தேர்வு மையத்தில் தேர்வு மேற்பார்வையாளராகப் பணியிலே இருந்த திரு. கோவிந்தன் மற்றும் திரு. மகேந்திரன் ஆகிய இரண்டு ஆசிரியர்கள் கேள்வித் தாளை whatsapp-லே அனுப்பி, பதிலையும் whatsapp மூலமாகப் பெற்று மாணவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். ஓசூர் மாவட்டக் கல்வி அலுவலர் உள்ளிட்ட சில அரசு அலுவலர்களும் இதற்கு உடந்தையாக இருந்துள்ளார்கள். தேர்வு மைய மேற்பார்வையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வையாளர்கள் செல்ஃபோனை எடுத்துச் செல்லக்கூடாது என்ற கடுமையான நிபந்தனை இருந்தும், செல்ஃபோனுடன் ஆசிரியர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், சுருக்கமாகக் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** ஓசூர் மாவட்டக் கல்வி அலுவலர் உள்ளிட்டோரே இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டுள்ளதால், மிகவும் சிரமப்பட்டு வருடம் முழுவதும் படித்துத் தேர்வு எழுதிய மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்கிற அச்ச உணர்வு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியிலே எழுந்துள்ளது. இதனால் தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை நிருவாகத்தின்மீது பொது மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினைக் குறித்து உரிய விளக்கத்திற்காக இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

*முற்பகல் 11-30*

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18-3-2015 ஆம் தேதி +2 மாணவர்களுடைய கணிதத் தேர்வின்போது கிருஷ்ணகிரி, ஓசூர் கல்வி மாவட்டத்திலுள்ள பரிமளம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சூப்பர்வைசர்களாகப்



2015 ஏப்ரல் 1] [திரு. ப. டில்லி பாபு]

பணியாற்றிக்கொண்டிருந்த இரண்டு ஆசிரியர்கள் திரு. மகேந்திரன் மற்றும் திரு. கோவிந்தன் ஆகியோர் தங்களது செல்ஃபோன் whatsapp மூலம் கேள்வித் தாளை விஜய் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு அனுப்பியபோது அங்கே சூப்பர்வைசராகப் பணிக்குச் சென்ற squad-னுடைய உயரதிகாரி S.S.A.,. C.E.O. திரு. பொன் குமார் அவர்களால் நேரடியாகக் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு, அதன்பிறகு விசாரணையிலே இதுவரை எட்டு பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

ஓசூர் கல்வி மாவட்டத்தினுடைய கல்வி அலுவலர் (D.E.O.) அவர்களையும் அரசு suspend செய்திருக்கிறது. மேலும், இந்தச் சம்பவம் நடைபெறுகின்றபோது, கிருஷ்ணகிரியில் உள்ள அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தமிழ் முதல் தாள் வினாத் தாள் நகல் எடுக்கப்பட்டு, பாரத் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிக்கு 46 வினாத்தாள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, அந்த மாவட்டத்திலே இத்தகைய நிகழ்வு என்பது தொடர்ந்திருக்கிறது. சமீபத்தில், தேர்வுத் துறை இயக்குநர் அவர்கள் தருமபுரியில் தனியார் பள்ளியில் ஓர் ஆய்வுக்கூட்டத்தை நடத்தியிருக்கிறார். மாநிலத்தினுடைய உயர் கல்வித் துறை அதிகாரியே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** முடித்து விடுகிறேன். ஆக, இது ஏதோ ஒரு பள்ளியிலே ஓர் ஆசிரியர், இரண்டு ஆசிரியர்கள் பகிர்ந்துகொண்டதாக நாங்கள் பார்க்கவில்லை. உயர்மட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, இந்தப் பிரச்சினையில் தேர்வுத் துறை இயக்குநர் C.E.O., D.E.O., கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டு C.E.O.-க்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. District Crime Branch நல்ல முறையில் விசாரணை செய்தாலும், இதில் இருக்கக்கூடிய பல்வேறுப்பட்ட விஷயங்களை வெளியே கொண்டு வருவதற்கு C.B.C.I.D. விசாரணை வேண்டுமென்று கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களினுடைய இளைஞர்கள், மாணவர் சங்கங்கள், வாலிபர் சங்கங்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், இந்தப் பேரவையின் கவனத்திற்கும் இதன்மீது உண்மையான விவரங்களை வெளியே கொண்டு வருவதற்காக C.B.C.I.D. விசாரணை

மேற்கொள்ள வேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-3-2015 அன்று ஓசூர் கல்வி மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் கேள்வித் தாள் whatsapp-ல் செல்ஃபோன் மூலமாக அனுப்பப்பட்ட விவகாரத்தில் 8 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக அவர்கள்மீது மட்டுமல்லாமல் பள்ளி நிருவாகிகள்மீதும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாவட்டக் கல்வித் துறை அதிகாரிகள்மீதும், இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவர்மீதும் நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட செயல்கள் நடைபெறாமல் தடுக்கும்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-3-2015 ஆம் தேதி கேள்வித் தாட்களை whatsapp மூலம் பள்ளி நிருவாகிகளே அனுப்பியிருக்கிறார்கள். பாரபட்சமாக ஒருசில பள்ளிக்கூட மாணவர்கள் மட்டும்தான் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டுமென்று செய்தது மிக மோசமான செயல். அது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகளையும் கண்டுபிடித்து அவர்கள்மீது C.B.I.-மூலம் வழக்குத் தொடர்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. இது சமூக நீதிக்கு எதிராகச் செய்யப்பட்ட செயல். இதனால் உண்மையாக படிக்கக்கூடிய மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறக்கூடிய வாய்ப்பு பறிபோகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, வருங்காலங்களில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படாதவகையில் அரசு, சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல்,





அந்த அதிகாரிகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்து, அரசின் கவனத்தை ஈர்த்து அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18-3-2015 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் வரும் தனியார் பள்ளியில் +2 மாணவர்களின் வினாத் தாள் whatsapp மூலமாக எடுக்கப்பட்டு, அதனுடைய பதில் திரும்பவும் whatsapp மூலமாகப் பெறப்பட்டதைக் கண்காணிப்புக் கேமரா மூலமாகக் கண்டுபிடித்துத் தடுத்திருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேநேரத்தில் இதுபோன்று இன்னொரு மகளிர் பள்ளியில் இருந்தும் +2 வினாத் தாள் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய சூழலைப் பார்க்கும்போது இது தனியார் கல்வியாளர்களுக்குச் சாதகமான சூழலை அரசுக் கல்வித் துறை எடுக்கிறதோ என்கிற ஐயம் ஏற்படுகின்ற காரணத்தால் இதுகுறித்து ஓர் உயர்மட்ட விசாரணைக் குழுவை அமைத்து, தெளிவுப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முற்பகல் 11-35

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் பரிமளம் மெட்ரிகுலேஷன் பள்ளித் தேர்வு அறையில் நடைபெற்று இருக்கக்கூடிய இந்தச் சம்பவம் அனைவரையும் குறிப்பாக, மாணவர் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள். மாவட்டக் கல்வி அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது பாராட்டத்தக்க செயல். ஆனால் அதேநேரத்தில் தேர்வுப் பணியில் இல்லாத ஆசிரியர்களை தேர்வுக் கண்காணிப்புப் பணிக்கு ஓசூர் விஜய் வித்யாலயா

பள்ளியினுடைய நிர்வாகிகள் அனுப்பியிருக்கின்றார்கள். தேர்வு அறையில் யார் கண்காணிப்பாளராகப் போக வேண்டும் என்பது குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த முறையும் பின்பற்றப்படவில்லை. எனவே, இந்தப் பள்ளி நிர்வாகிகள்மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி whatsapp மூலமாக வினாத் தாள் அனுப்பப்பட்டு, விடைத் தாள் பெறப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில், பொதுத் தேர்தல்கள் நடக்கும்போது எப்படி வாக்குச்சாவடிகள் web camera மூலமாகக் கண்காணிக்கப்படுகின்றதோ அதேபோன்று அரசும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்வு மையங்களைக் கண்காணிப்பதற்காக web camera முறையைக் கொண்டு வருவதனுடைய அவசியத்தையும் இந்த நிகழ்வு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சுருக்கமாகக் கூறுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு நேரங்களில் தேர்வுக்கு வரும் மாணவர்கள் எப்படி செல்ஃபோன்களை எடுத்துவரக்கூடாதோ அதேபோன்று ஆசிரியர்களும், கண்காணிப்பாளர்களும் தனியாக ஓர் அறையில் அவற்றை வைத்துவிட்டுதான் வரவேண்டும் என்ற கட்டுப்பாடுகளைக் கொண்டுவர வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தி அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18-3-2015 அன்று நடைபெற்ற +2 கணிதத் தேர்வில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் இருக்கக்கூடிய பரிமளம் மெட்ரிக் பள்ளியிலிருந்து விஜய் வித்யாலயா பள்ளிக்கு whatsapp மூலமாக வினாத் தாள் அனுப்பப்பட்டிருக்கின்றது. இது நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கக்கூடிய ஒரு மிக முக்கியமான செய்தி. இச்சம்பவத்தில் இதுவரையிலும் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது ஏதோ ஒரு பகுதி என்று மட்டும் விட்டுவிடாமல், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் எந்தப்





பகுதியிலும் நடந்துவிடாவண்ணம் தடுத்து நிறுத்துவதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான் இந்தப் பிரச்சினையில் பேசுகிறேன். எனவே, தேர்வுகள் நடைபெறுகின்ற பள்ளி அறைகளில் C.C.T.V.-Camera பொருத்தி கண்காணிக்க வேண்டும். அதேபோல், இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்கள்மீது கடுமையான சட்டங்கள்மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் கல்வி மாவட்டத்திற்குட்பட்ட தேர்வு மையங்களில் ஒன்றான பரிமளம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 3 இணைப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 323 மாணவர்கள் +2 தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேர்வு நடைபெற்ற தேர்வறைகள் மொத்தம் 13 ஆகும். இத்தேர்வு மையத்தில் செயின்ட் ஜான் பாஸ்கோ (பெண்கள்) மேல்நிலைப் பள்ளி, பரிமளம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அச்சீவர்ஸ் அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இம்மூன்றும் சேர்த்து மொத்தம் 323 பேருக்கு 18-03-2015 அன்று கணிதம் மற்றும் விலங்கியல் பாடங்களை முதல் பாடமாகக் கொண்ட தேர்வு நடைபெற்றது. அத்தேர்வில் மொத்தம் 244 தேர்வர்கள் தேர்வெழுதினர். இவர்களில் கணிதத் தேர்வுக்குப் பதிவு செய்த தேர்வர்கள் 236 மற்றும் விலங்கியல் தேர்வுக்குப் பதிவு செய்த தேர்வர்கள் 8 ஆகும்.

மேற்படி தேர்வு நாளில் தேர்வறைகளைக் கண்காணிக்கும் பணியில் ஓசூர் விஜய் வித்யாலயா மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த திரு. மகேந்திரன் மற்றும் திரு. கோவிந்தன் ஆகிய இரு ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்வு நடைபெறும் நேரத்தில் சுமார் 11-00 மணியளவில் அம்மைய துறை அலுவலர் திரு. இரா. சீனிவாசன் தேர்வறைகளைப் பார்வையிடும்போது மேற்படி இரு தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் கைகளில் அலைபேசிகள் இருப்பதைக் கண்டறிந்து பறிமுதல் செய்து ஆய்வு செய்ததில், கணிதப் பாட வினாத் தாளின் சில பக்கங்கள் படமெடுக்கப்பட்டு whatsapp-ல் வேறொரு அலைபேசி எண்ணிற்கு அனுப்பப்பட்டுள்ளதெனக் கண்டறியப்பட்டது.

[திரு. கே.சி. வீரமணி] [2015 ஏப்ரல் 1

முற்பகல் 11-40

மேற்படி நிகழ்வு குறித்து அம்மையத்தினைப் பார்வையிட வருகைபுரிந்த கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரிடமும், கண்காணிப்பு அலுவலரிடமும் தகவல் தெரிவிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக மேற்படி இரு ஆசிரியர்கள் தேர்வறைப் பணியிலிருந்து விடுவிப்பு செய்து, தேர்வுக் கட்டுப்பாட்டு அறைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன், மேற்படி இரு ஆசிரியர்கள் பணிபுரியும் ஓசூர் விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளித் தேர்வு மையத்தில் இந்நிகழ்வின் தொடர்ச்சியாக முறைகேடுகள் நிகழாமலிருக்க கண்காணிப்புப் பலப்படுத்தப்பட்டு, எவ்வித ஒழுங்கீனச் செயல்களும் நடைபெறாமல் தவிர்க்கப்பட்டது.

இச்செயல் குறித்து முதன்மைக் கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி காவல் துறைக்கு உடனடியாகப் புகார் அளித்ததன் அடிப்படையில் காவல் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். மேற்படி இரு ஆசிரியர்கள் கணிதப் பாட வினாத் தாள் பக்கங்களை Whatsapp-ல் அனுப்பி வைத்த அலைபேசி எண்களை ஆய்வு செய்தபோது, அவை ஓசூர் விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த திரு. கார்த்திகேயன் மற்றும் திரு. உதயகுமார் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. அதன்படி, மேற்படி தேர்வு மையத்தில் அறைக் கண்காணிப்பாளர்களாகப் பணிபுரிந்த, மேற்படி நிகழ்வில் தொடர்புடைய ஓசூர் விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த திரு. மகேந்திரன் மற்றும் திரு. கோவிந்தன் ஆகியோரும், வினாத் தாள் செய்திகளை அலைபேசியில் பெற்றுக்கொண்ட திரு. கார்த்திகேயன் மற்றும் திரு. உதயகுமார் ஆகியோரும் அன்றிரவு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் தொடர்புடைய ஆசிரியர்கள் விஜய் வித்யாலயா பள்ளியைச் சேர்ந்தவர்களாதலால், இனிவரும் தேர்வுகளில் இதன் எதிரொலியாகவும், தொடர்ச்சியாகவும், எவ்வித முறைகேடுகளுக்கும் இடமளிக்கக்கூடாது என்பதால் முன்னெச்சரிக்கையாக விஜய் வித்யாலயா கல்வி நிறுவனங்களான, ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி,



2015 ஏப்ரல் 1] [திரு. கே.சி. வீரமணி]

ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஓசூர், ஸ்ரீ விஜய் வித்யாலயா ஆண்கள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தருமபுரி, ஸ்ரீ விஜய் வித்யாலயா பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தருமபுரி ஆகிய நான்கு தேர்வு மையங்களுக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த முதன்மைக் கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், அறைக் கண்காணிப்பாளர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் இனிமேல் நடக்கவிருக்கும் தேர்வுகளுக்கு 18-3-2015 முதல் நியமனம் செய்யப்பட்டனர்.

அரசுத் தேர்வுத் துறை இயக்குநர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த பணியாளர்கள் திரு. வேதக்கண்தன்ராஜ், மாவட்டக் கல்வி அலுவலர், ஓசூர், திரு. மாது, உடற்கல்வி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புக்கசாகரம், திரு. ஆர். ரமணராஜன், இளநிலை உதவியாளர், மாவட்டக் கல்வி அலுவலகம், ஓசூர், திரு. எஸ். சந்திரசேகரன், இருக்கைப் பணி கண்காணிப்பாளர், மாவட்டக் கல்வி அலுவலகம், கிருஷ்ணகிரி மற்றும் திரு. எஸ். அசோக்குமார், உதவியாளர், முதன்மைக் கல்வி அலுவலகம், கிருஷ்ணகிரி ஆகியோர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கில் கைதான ஆசிரியர்களின் ஜாமின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கைப்பற்றப்பட்ட இரு ஆசிரியர்களின் அலைபேசிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. இனிவரும் தேர்வுகளில் இதுபோன்ற நடைமுறைகளைத் தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் கடைபிடிக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக அரசுத் தேர்வுத் துறை இயக்குநர் அனைத்து அலுவலர்களுக்கும் ஒரு விவரமான சுற்றறிக்கை/ வழிகாட்டுதல்களையும் அனுப்பியுள்ளார்.

மேலும், இதுபோன்ற முறையற்ற நிகழ்வுகள் இனிவரும் தேர்வுகளில் நடைபெறாமல் இருப்பதற்கு அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 ஏப்ரல் 1

## (ஆ) அரசு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் உள்ளிட்ட சில காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டியன் அவசியம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா மற்றும் திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததாகக் கருதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பதிலுரை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், (குறுக்கீடு) முன்னோடி மாநிலமாக இன்றைக்கு உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் உலக சுகாதார நிறுவனம், மத்திய சுகாதாரத் துறை என அனைத்துத் தரப்பினராலும்*



2015 ஏப்ரல் 1][டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

*பாராட்டப்படுகின்ற ஒரு துறையாக, மக்கள் நல்வாழ்வுத் துறையை இன்றைக்கு மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இந்தளவுக்கு* Millennium Development Goals-*ஐ, இலக்கை அடைந்திருப்பதற்குக் காரணம் மருத்துவர்கள் மட்டுமல்லாமல் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள்* (para-medical staff) *போன்ற அனைத்துப் பணியாளர்களையும் உடனுக்குடன் நியமிக்கின்ற பணியையும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருப்பதும் இந்தச் சாதனைக்குக் காரணம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அந்த வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பதவியேற்றவுடனேயே 2,027 மருத்துவ அலுவலர்களை மிகச் சிறப்பாக நியமனம் செய்து, பணியிலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-45*

*அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு* Medical Services Recruitment Board *என்று சொல்லக்கூடிய மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தைப் புதிதாக உருவாக்கி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முதன்மையாக, முன்னோடியாக இன்றைக்கு,* Medical Services Recruitment Board *வழியாகத் தேர்வுகளை நடத்தி, மிகச் சிறப்பான முறையிலே இன்றைக்கு ஏறத்தாழ 5,472 மருத்துவர்கள், அதேபோல்,* Pharmacists, V.H.N. *என்று சொல்லக்கூடிய கிராம சுகாதார செவிலியர்கள்,* Lab Technician, Radiographer, E.C.G. Technician *மற்றும் பல்வேறு திறன் உதவியாளர்கள் உள்பட ஏறத்தாழ 6,918 மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட பணியாளர்களை, மருத்துவத் தேர்வு வாரியம் மிகச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து, இன்றைக்குப் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இந்த அவையிலே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, ஏற்கெனவே வேலைவாய்ப்பு மூலமாக இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி 2,027 பேர்கள், இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய* M.R.B.-Medical Services Recruitment Board-*ன் மூலமாக 6,918 பேர்கள் என மொத்தம் 8,945 பேர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே,*

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் இந்த நான்காண்டுகளிலே பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பணியாளர் நியமனம் என்பது, ஓய்வு பெறுகின்றபோது ஏற்படுகின்ற பணியாளர் நியமனம் மட்டுமல்ல. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பணியாளர்கள் பணியிடமும் ஆகும். இன்றைக்கு மருத்துவர்கள் பணியிடம் காலியாக இருக்கிறது என்று சொன்னால், ஓய்வு பெறுகின்றபோது ஏற்படும் பணியிடங்கள் மட்டுமல்ல, புதிதாக உருவாக்கப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிதாகத் தரம் உயர்த்தப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிதாகத் தரம் உயர்த்தப்படுகின்ற தாலுகா மருத்துவமனைகள், புதிதாக உருவாக்கப்படுகின்ற மருத்துவக் கல்லூரிகள், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்ற Multi Super Speciality Hospital என எல்லா இடங்களிலும் தோற்றுவிக்கப்படுகின்ற, புதிதாக உருவாக்கப்படுகின்ற பணியிடங்களும் (newly created posts) அடங்கும். ஆக, அந்தப் பணியிடங்களையும் உருவாக்கி, M.R.B. மூலமாக இன்றைக்கு மிகச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து, அதாவது—qualified and meritorious candidates-ஐ தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இரண்டு மாதப் பயிற்சியும் கொடுத்து, மிகச் சிறப்பான முறையிலே நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய இடம்கூட, கலந்தாய்வு மூலமாக, கவுன்சிலிங் மூலமாக அவர்கள் விரும்புகின்ற இடத்தைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, மருத்துவ அலுவலர்கள். M.O. என்று சொல்லக்கூடிய Medical Officers, M.B.B.S., படித்த மருத்துவர்கள். இங்கு பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் குழந்தைகள் நல மருத்துவர் வேண்டும், E.N.T. மருத்துவர் வேண்டும், MD, MS, வேண்டுமென்றெல்லாம் கேட்கிறார்கள். இந்திய வரலாற்றிலேயே மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு, walk-in selection என்று சொல்லக்கூடிய ஒரு நடைமுறையை, சிறப்பு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறது. MD, MS, மேற்படிப்பு படித்த





மருத்துவர்களுக்குத் தேர்வு கிடையாது. Interview கிடையாது. நேரடியாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை அவர்கள் walk-in selection மூலமாக online-ல் apply செய்து, online-லே அவர்கள் விரும்புகின்ற இடத்தைத் தேர்வு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அரசாணை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்களும் நியமிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். முதன்முதலாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க G.O. மூலமாக 433 speciality மருத்துவர்கள், கலந்தாய்வு மூலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 7,243 செவிலியர்களின் வழக்குகளெல்லாம் முடிக்கப்பட்டு, அவர்களுக்கும் notification செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற செய்தியையும் இந்த அவையிலே நான் பதிய வைக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவத் துறையிலே ஒரு மிகப் பெரிய வளர்ச்சியை Tamil Nadu Vision-2023 என்ற இலக்கை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எட்டியிருப்பதற்குக் காரணம், (மேசையைத் தட்டும் ஒலி) human resource என்று சொல்லக்கூடிய, மனித வளம் என்று சொல்லக்கூடிய இந்தப் பணியாளர்கள் நியமனமும்தான் அதற்கு அடித்தளம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லி, மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்களின் நியமனத்தால் ஓர் அற்புதமான சூழலை, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அனைத்துச் சாதனைகளும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2015-2016 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கையின்மீது பதிலுரை ஆரம்பித்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க இருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, பதிலுரை ஆரம்பித்துவிட்டது. நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) அதைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு இப்போது நேரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு)*

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சேர்ந்த திருமதி எஸ். விஜயதரணி மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*முற்பகல் 11-50*

## 4. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான அற்புதங்கள் பூமியை சொர்க்கம் ஆக்குகின்றன; ஆன்மிக அற்புதங்கள் மனிதர்களின் அகவாழ்வை அழகாக்குகின்றன; அரசியல் அற்புதங்கள் மானுடத்தின் புறவாழ்வை புதுப்பிக்கின்றன; இம்மூன்று அற்புதங்களின் சிருஷ்டி கர்த்தாக்களையே சிறந்த உயிர்களாக புகழ் செறிந்த பெயர்களாக உலகமே போற்றிப் புகழ்கிறது; புகழ்மாலை சூட்டுகிறது; அவ்வகையில், தம் பேரறிவுத் திறத்தால் பீடுநடை மறத்தால், அயராத உழைப்பால், அர்ப்பணிப்பு குணத்தால், சூழவரும் பகைகளை சுக்கு நூறாக்கும் வீரத்தால், (மேசையைத் தட்டும்





ஒலி) எதிர்வரும் எதிர்ப்புகளையே ஏணிகளாக்கும் விவேகத்தால், மக்கள் சக்தி பலத்தால், மதிநுட்ப வளத்தால், திராவிட அரசியலை தன்னைச் சுற்றியே சுழல வைக்கும் எங்கள் அம்மா எனும் மூன்றெழுத்து மந்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி)

தாய் ஆளும் காலமே தமிழகத்தின் பொற்காலம்; எங்கள் தாய் வாழும் காலமே தமிழினத்திற்கே நற்காலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை காலக் கல்வெட்டாய் செதுக்கிய கம்பீரச் சித்திரமே! பனிரெண்டாம் நூற்றாண்டில் பெண் இனப் போராளியாய் படை நடத்தி பகை முடித்த டெபோரா! பதினேழாம் நூற்றாண்டில் பிரஞ்சு தேசத்தில் பீரிட்டு எழுந்திட்ட ஜோன் ஆஃப் ஆர்க்! இந்தியத்தின் வீரத்தை இமயத்தின் உச்சத்தில் நிறுத்தி இவ்வையகத்தையே வியந்து பார்க்க வைத்த ஜான்சி ராணி! (மேசையைத் தட்டும் ஒலி) இழந்த மண்ணை மீட்க இடையறாது போராடி, உலகத்தில் முதன் முதலாய் உமையாள் படையென்னும் பெண் ராணுவத்தை நிறுவி, குயிலி என்னும் வீரத் திருமகளால் மண்ணுலகமே அதுவரை காணாத மனித வெடிகுண்டுத் தாக்குதலும் நடத்தி, கும்பினியர் கூட்டத்தைக் குலை நடுங்க வைத்த வீரத் தமிழச்சி வேலுநாச்சி! (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் அற்புத அவதாரங்களின் ஓர் உருவாக அன்னைத் தமிழ் மண்ணில் அவதரித்த 21 ஆம் நூற்றாண்டின் இரும்புத் தலைவியாம், (மேசையைத் தட்டும் ஒலி) நான் வணங்கும் தாயுருவ தெய்வம், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி தலைவணக்கம் எனது முதல் வணக்கம் செலுத்துகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவர், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த 2011 ஆம் ஆண்டு, மே மாதம் தமிழகத்தின் முதலமைச்சராக, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, இந்த அரசின் சார்பாக நான்கு நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, ஐந்தாவது நிதிநிலை அறிக்கை, கடந்த 25-3-2015 அன்று இப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

2010-2011 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பீட்டளவு 94,218.19 கோடி ரூபாய் ஆகும். இது கடந்த நான்கு

ஆண்டுகளில் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2015-2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடு 1,84,296.01 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 2010-2011 இல் 70,187.63 கோடி ரூபாய் ஆக மட்டுமே இருந்தது. இது 2015-2016 ஆம் ஆண்டிற்கு 1,42,681.33 (மேசையைத் தட்டும் ஒலி) கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தபடி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே நேரத்தில், ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கும் நலத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்தும் ஒரு மக்கள் நல அரசாக, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பின்பற்றிவரும் மும்முனை முன்முயற்சிகளான விவசாயம், தொழில் போன்ற துறைகளை ஊக்குவித்தும் கட்டமைப்பை மேம்படுத்தியும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது, மனித வளம் சார்ந்த கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, எண்ணற்ற நலத் திட்டங்கள்மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பது என மூன்று முறைகளிலும் செயல்பாடுகளை முடுக்கிவிட்டு, அனைவருக்கும் நலம் பயக்கும் ஒரு சமச்சீர் வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில், இந்த வரவு-செலவுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-55*

எத்தகையதொரு மந்தமான பொருளாதாரச் சூழ்நிலையில், பெரும் நிதி நெருக்கடிகளுக்கு இடையே, வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், பொதுமக்களின் நலனுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இயங்கும் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் தெளிவுபடுத்தியுள்ளோம். இத்தகைய கடும் நிதிச் சூழ்நிலையை எடுத்துரைக்கும்போது, உண்மை நிலையை வெளிப்படையாகக் கூறவேண்டிய அவசியம் கருதி சில விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.



பதினான்காவது நிதி ஆணையம் எவ்வாறு சில அளவுகோல்களை மாற்றியும், தேவையற்ற புதிய அளவுகளைப் புகுத்தியும், தமிழ்நாடு போன்று சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்குக் கணிசமாக நிதிப் பகிர்வு குறையும் வகையில் ஒரு புதிய முறையை வகுத்துள்ளது என்பதைத் தெரிவித்து, அதிலுள்ள குறைகள் என்ன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம். இத்தகைய மாறுதல்களால் எந்த அளவிற்கு மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் நிதி குறையும் என்பதையும் நாம் எடுத்துரைத்துள்ளோம். மத்திய அரசின் பகிர்வு முறையில் (Vertical devolution) மாநிலங்களுக்குக் கிடைக்கும் நிதியை, 32 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்த்தியுள்ளதை நாம் பாராட்டியுள்ளோம். ஆனால், இவ்வாறு நிதிப் பகிர்வு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மாநிலங்களுக்கு வழங்கப்படும் மானியங்களின் அளவை மத்திய அரசு கணிசமாகக் குறைத்துள்ளதைச் சுட்டிக்காட்டி, இம்மாற்றங்களால் கூடுதல் நிதி ஆதாரங்கள் மாநிலங்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இல்லை என்பதை நாம் குறிப்பிட்டுள்ளோம். அதே வேளையில், மாநிலங்களுக்கிடையே நிதிப் பகிர்வு முறையில் (Horizontal devolution) தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதால் எவ்வாறு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் நாம் தெரிவித்துள்ளோம்.

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிறுத்தப்பட்ட சில திட்டங்களையும், நிதி குறைக்கப்பட்ட சில திட்டங்களையும் குறிப்பிட்டுள்ளோம். இவை மத்திய அரசைக் குறை சொல்லும் நோக்கத்துடன் அல்ல என்பதையும், இந்த மாற்றங்கள் பதினான்காவது நிதி ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பதால், அதனால் தமிழகம் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடுதான் இவை விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. அதேசமயத்தில், தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குக் கிடைக்கும் நிதி குறைந்துள்ளதால், மத்திய அரசின் நீதி ஆயோக் (NITI Aayog) அமைப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20,000 கோடி ரூபாயிலிருந்து இது ஓரளவிற்கு ஈடு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வைக்கப்பட்டுள்ளது. பல இனங்களில் மத்திய அரசு ஊக்கத்தொகை விடுவித்துள்ளதற்கும்,

பாரம்பரிய நகரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் வேளாங்கண்ணி, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களைச் சேர்த்துள்ளமைக்கும் நன்றியையும் தெரிவித்துள்ளோம். எனவே, இந்த அறிக்கையில் உண்மை நிலவரங்கள் உள்ளபடியே குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின்மீது 27-3-2015, 30-3-2015 மற்றும் 31-3-2015 ஆகிய நாட்களிலும் பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துகளையும், குறைபாடுகள் என்று தாங்கள் கருதுவதையும் சுட்டிக்காட்டி மாமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்துகள் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இந்த அறிக்கையைப்பற்றி அரசியல் கட்சித் தலைவர்களும், பத்திரிகைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளும் தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். பெருவாரியான தொழில் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் துறையைச் சார்ந்தவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஒரு முழுமையான வளர்ச்சிக்கு உதவும் அறிக்கை என கருத்து தெரிவித்துள்ளதோடு (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். இதேபோன்று, பத்திரிகைகள் தங்களின் பாரபட்சமற்ற விமர்சனத்தையும் முன்வைத்துள்ளன. அரசியல் தலைவர்கள் சிலர் அவரவர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு, wishful thinking என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதாவது தங்களின் கற்பனை விருப்பத்திற்கேற்ப நடந்துவிட்டதாகக் கருதுவார்களே, அதுபோல அரசியல் ரீதியாகவும், பொதுப்படையாகவும் தங்களின் எண்ணப்படி கருத்துகளை முன்வைத்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது, ஒரு சில துறைகளில் சென்ற ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் ஒதுக்கீடு குறைந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார்.

முதலாவதாக, காவல் துறைக்கான ஒதுக்கீடு இந்த ஆண்டு 5,716.81 கோடி ரூபாயாக உள்ளதைவிட, வரும் நிதி ஆண்டிற்கு 5,568.81 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது என்று



திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுகுறித்துகூட, நான் உடனடியாக விளக்கமளித்தேன். இருந்தும் அவருக்கு அதில் திருப்தி ஏற்படவில்லை என்றே நான் கருதுகின்றேன். அதனால் சில விளக்கங்களை இங்கே கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2014-2015 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், 5,186.20 கோடி ரூபாய் என்றும், 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 5,568.81 கோடி ரூபாய் என்றும், அதனால் இது அதிகம்தான் என்றும் குறிப்பிட்டேன். ஆனால், திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் திரும்பத் திரும்ப திருத்திய ஒதுக்கீட்டை இங்கே குறிப்பிட்டுப் பேசினார். இதுகுறித்த விரிவான விளக்கத்தை நான் தருவதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு துறைக்கும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்துவிட்டு, ஒதுக்கீடு செய்த பிறகு, ஒருமுறை ஒதுக்கீடாக, சில திட்டங்களுக்கும், செலவினங்களுக்கும் அல்லது ஏற்கெனவே நிலுவையில் உள்ள தொகையை வழங்குவதற்கு ஒருமுறை ஒதுக்கீடாகவும் நிதி ஒதுக்கீடு செய்ய நேரிடும். சில சமயம் ஓர் ஆண்டில், அந்த ஆண்டில் மட்டும் மேற்கொள்ளப்பட உள்ள கட்டடப் பணிகள் இருக்கலாம். அத்தகைய இனங்களில் திருத்திய ஒதுக்கீட்டில் கூடுதல் நிதி ஒதுக்கம் நேர்ந்தாலும், அடுத்த ஆண்டிற்கு அத்தகைய நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், அந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு குறைய வாய்ப்புள்ளது. அதேபோல் சில திட்டங்கள் அந்த ஆண்டு முடிவுக்கு வருமேயானால், அடுத்த ஆண்டிலே நிதி ஒதுக்கம் குறையவும் வாய்ப்பு உள்ளது. எனவே எல்லா மானியக் கோரிக்கைகளிலும் ஆண்டுக்கு ஆண்டு கூடுதலாகவே நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. எனினும் அவசியமான திட்டங்களில் எந்த நிதியையும் குறைக்காமல் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலும் அவ்வாறே செய்யப்பட்டுள்ளது.

காவல் துறையைப் பொறுத்தவரை, 2014-2015 ஆம் ஆண்டில் மேலக்கோட்டையூரில் 176.70 கோடி ரூபாயில் காவல் துறையினருக்கு வீட்டுக் கடன் வழங்க ஒருமுறை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, 88.49 கோடி ரூபாயில் மத்திய அரசு நிதிமூலம் 2014-2015 ஆம் ஆண்டில் செயல்படுத்தி வந்த

காவல் துறை நவீனமயமாக்கும் திட்டம், மத்திய அரசால் 2015-2016 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டுள்ளது. பதின்மூன்றாவது நிதிக் குழுவின்மூலம் 64.22 கோடி ரூபாயில் செயல்படுத்தி வந்த திட்ட நிதி 2014-2015 ஆம் ஆண்டோடு முடிவு பெறுகிறது. ஆகவே, மொத்தமாக 329.41 கோடி ரூபாய்க்குமேல் இத்திட்டங்களால் நிதி குறைந்துள்ளது. ஆனால், இத்துறையில் பொதுவாக மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்பாடுகளுக்குமான நிதி கூட்டப்பட்டுள்ளது. எனவே, இதில் நிதிக் குறைபாடு என்பது இல்லை.

சமூக நலத் துறையைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். இத்துறையில் 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி ஒதுக்கப்பட்ட நிதி 3,854.64 கோடி ரூபாய் ஆகும். 2015-2016 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி 4,081 கோடி ரூபாய். இது சென்ற ஆண்டைவிடக் கூடுதலான நிதி ஒதுக்கீடுதான். திருத்திய ஒதுக்கீட்டில் இத்துறைக்கு 4,138.38 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டதற்குக் காரணம், மதிய உணவுத் திட்டத்தில் அங்கன்வாடி கட்டடங்களைக் கட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும் ஒரு முறை ஒதுக்கீடாக 170.09 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சிறப்பு ஒதுக்கீடாகும். அதே அளவு நிதி, வரும் ஆண்டிலும் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. அதனால் இந்தத் துறைக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் எந்தத் திட்டத்திற்கும் நிதி குறைக்கப்படவில்லை.

அதேபோலவே போக்குவரத்துத் துறையைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். போக்குவரத்துத் துறையில் 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படியான ஒதுக்கீடு 1,107.97 கோடி ரூபாய். 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 1,540.13 கோடி ரூபாய். இது சென்ற ஆண்டைக் காட்டிலும் கணிசமான கூடுதல் ஒதுக்கீடு என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், திருத்திய ஒதுக்கீட்டில் 1,800.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தக் கூடுதல் ஒதுக்கீடான சுமார் 300 கோடி ரூபாய், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதியைவிடக் கூடுதலாக டீசல் மானியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஆகும்.

தற்போது டீசல் விலை குறைந்துள்ள நிலையில் அதே அளவிற்கான ஒதுக்கீடு இத்துறைக்குத் தேவையில்லை என்பதைத்



தெரிவித்துக்கொள்கிறேன். அதனால், இந்தத் துறைக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-05

இளைஞர் நலத் துறையைப் பொறுத்தவரையில், 2014-2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 146.64 கோடி ரூபாய் ஆகும். அந்த ஆண்டின் திருத்திய மதிப்பீடு 199.35 கோடி ரூபாய். இதில் கூடுதலாக 27.42 கோடி ரூபாய் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தின் சில கட்டடப் பணிகளுக்காக ஒருமுறை ஒதுக்கீடாக சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தொடர்ந்து தேவைப்படாத நிலையில், 2015-2016 ஆம் ஆண்டிற்குத் தேவையான ஒதுக்கீடான 145.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு 2014-2015 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கைத்தறி மேம்பாட்டு திட்டத்திற்காக 44.09 கோடி ரூபாயும், தொழிலாளர் பென்ஷன் திட்ட பாக்கித் தொகைகளை வழங்க கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 63 கோடி ரூபாயும், ஒருமுறை ஒதுக்கீடாக 2014-2015 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது 2015-2016 ஆம் ஆண்டு தேவையில்லை என்பதால், 1,100.57 கோடி ரூபாய் மட்டும் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் தொகைகூட இத்துறைக்கு சென்ற நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,032.43 கோடி ரூபாயைவிடக் கூடுதல் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவுத் துறைக்கும் அதேபோல் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தும் கூட்டுறவு அமைப்புகளுக்குக் கூடுதலாக 60 கோடி ரூபாய் 2014-2015 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனவே, 2014-2015 ஆம் ஆண்டு ஒதுக்கீடு 658.02 கோடி ரூபாயாக இருந்தாலும் திருத்திய ஒதுக்கீட்டில் 723.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ள நிலையில், 2015-2016 ஆம் ஆண்டுக்கு 670.06 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையில் நிலுவையாக இருந்த விளம்பரச் செலவுகளைச் சரி செய்ய திருத்திய ஒதுக்கீட்டில் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2015-2016 ஆம் ஆண்டிற்குத் தேவை இல்லை என்பதால், அத்துறைக்குத் தேவையான அளவில் மட்டும், அதாவது

66.78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, சில துறைகளில் மேற்கண்ட விவரங்களின்படி, திருத்த ஒதுக்கீட்டிற்குக் குறைவான ஒதுக்கீடு இருந்தாலும், 2014-2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் கணிசமாகவே உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்பதையும், பல துறைகளில் திருத்திய ஒதுக்கீட்டைக் காட்டிலும்கூட, தேவைக்கு ஏற்ப கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இவை, அந்தந்தத் துறைகளின் தேவையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும், எந்தத் திட்டங்களுக்கும் நிதி குறைக்கப்படவில்லை என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உதாரணமாக, விவசாயத் துறைக்கு 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு 5,360.30 கோடி ரூபாய். திருத்திய ஒதுக்கீடு 5,968.34 கோடி ரூபாய். 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 6,613.68 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல உதாரணங்களை, பல துறைகளில் சொல்லலாம். எனினும், ஒரு உறுதியை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எந்தத் திட்டங்களுக்கும் நிதி குறைக்கப்படவில்லை. அவசியமாகத் தேவைப்படும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் கூடுதல் நிதி தேவைப்படுமாயின், அவற்றிற்கும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தவறாமல் போதிய நிதியை ஒதுக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், உங்களுக்குத் திருப்திதானே.

பிற்பகல் 12-10

கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபோது, இந்த மாநிலத்தின் நிருவாகம் எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி, 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நிருவாகம் சீர்குலைந்து இருந்தது என்று தெரிவித்தேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் பலமுறை இதையேதான் இம்மாமன்றத்திலே தெரிவித்துள்ளார்கள். கடந்த தி.மு.க. ஆட்சி முடிவுற்ற 2010-2011 ஆம் ஆண்டில் மாநிலத்தின் நிருவாகம் சரியாக இல்லை என்பதும், நிதிநிலையும் சீராக இல்லை என்பதும் அனைவருக்கும் தெரியும். நிதிப் பற்றாக்குறை, மாநில உற்பத்தி மதிப்பில் மூன்று சதவிகிதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று இருந்தாலும், அந்த ஆண்டில் நிதிப் பற்றாக்குறை,



மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3.04 சதவிகிதமாக இருந்தது. மாநிலத்தின் நிருவாகம் சீர்குலைந்தும், சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டும் இருந்ததை நாடே அறியும். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்த கருத்து, பொதுவாக மாநில நிருவாகம் அப்போது எப்படி இருந்தது என்பதைத்தான். இதை மனதில் வைத்து, இந்த அரசைப் பற்றி ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையை வைத்துக்கொண்டு இம்மாமன்றத்தில் சில கருத்துகளைக் கூறினார். தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவதுபோல் நடிப்பவர்களை எப்படி எழுப்புவது? (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவையின் நாற்பது ஆண்டுகால அனுபவம் உள்ளவர் அவர். ஒரு மாநில அரசின் நிதிநிலை பராமரிக்கப்படும் செயல்முறைகள் அனைத்தையும் மிகவும் நன்கு அறிந்தவர். ஆண்டுதோறும் தலைமை நிதிக் கணக்காயரின் ஆய்வு அறிக்கை இப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுவதையும் நன்கு அறிந்தவர்.

எந்த அரசாக இருந்தாலும், அதில் அந்தக் காலக்கட்டத்தில் ஏற்படுகின்ற சில குறித்துரைகள், குறைபாடுகள், தவறுகள் போன்றவற்றை அந்த அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பொதுக் கணக்குக் குழு, துறைகள்தோறும் விரிவாக ஆய்வு செய்து, அந்தக் கருத்துகளைப் பற்றி தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் நன்கு அறிவார். இதுபோல் சில இனங்களில் ஆண்டுதோறும் செய்த ஒதுக்கீடு திரும்ப ஒப்புவிப்பு செய்யப்படுவதும், அது மறு நிதி ஒதுக்கத்தின்மூலம் அந்தந்த மானியங்களின் ஒதுக்கீடுகளுக்குள் பயன்படுத்தப்படுவதையும் நன்கு அறிந்தவர். இதையெல்லாம் அறிந்தும் ஒதுக்கீடு செய்யப்பட்ட சில இனங்களில் அதற்கான நிதி திரும்ப ஒப்புவிக்கப்பட்டதை ஏதோ ஒரு பெரும் குற்றமாக இங்கே பெரிதுபடுத்திப் பேசினார்.

நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு திட்டத்திற்கும், ஒவ்வொரு பணிக்கும் தேவையான நிதியை அந்தந்தத் துறைகளுடன் விவாதித்து, அவர்கள் அளிக்கும் தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது. அதன்பிறகு துணை மதிப்பீடுகளின் மூலமாகப் புதிதாக அறிவிப்பு செய்யப்பட்ட திட்டங்களுக்கும், தேவைப்படும்

கூடுதல் நிதி போன்றவற்றிற்கும் கூடுதல் நிதி ஆதாரங்களைக் காட்டி ஒதுக்கீடு செய்யப்படும். இறுதித் துணை மானியக் கோரிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படும்பொழுதுகூட, அந்தந்தத் துறைகள் சில இனங்களில் குறிப்பிட்ட தொகை தேவை எனத் தெரிவித்தால், அந்த ஒதுக்கீடு தரப்படும். ஆண்டு இறுதியில் வருவாய்ச் செலவினங்களாகட்டும் அல்லது மூலதனச் செலவினங்களாகட்டும், சில சமயங்களில் அவ்வாறு பெறப்பட்ட தொகையிலும் எதிர்பாராதபடி சில இனங்களில் செலவை மேற்கொள்ள முடியாமல் போகலாம். அவ்வாறு செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மறு ஒப்புவிப்பு செய்தால், அதைத் துணை மானியக் கோரிக்கையிலும் மானியங்களுக்குள் ஏற்படும் சேமிப்பிலிருந்தும் மறு நிதியொதுக்கம் செய்வதை எதிர்நோக்கி, அனுமதிக்கப்பட்ட பல திட்டங்களுக்கு அடையாள ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்தந்த மானியக் கோரிக்கைகளுக்குள்ளாகவே மறு நிதி ஒதுக்கம் செய்து பயன்படுத்தப்படும். இதையும் மீறி சில இனங்களில் கூடுதல் செலவினங்களும், ஒதுக்கீட்டிற்குக் குறைவான செலவினங்களும் ஏற்படுமேயானால், அது குறித்து பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்த நடைமுறை, நிதி மேலாண்மையைப் பொறுத்தவரையில் காலம் காலமாக நடந்துவரும் நடைமுறை. எந்த ஓர் அரசும் துல்லியமாகச் செலவுகளைக் கணக்கிட்டு ஒதுக்கீடு செய்து, சேமிப்பே ஏற்படாமல் முழுமையாகச் செலவு செய்துவிட முடியாது. எல்லா அரசு நிதி நிருவாகத்திலும் இவ்வாறு சில இனங்களில் நிதி திரும்ப ஒப்புவிப்பு செய்வது, தவிர்க்க முடியாத ஒன்று. இதில் நிதி ஒதுக்கம் திரும்பப் பெறுவதால் நிருவாகமே சீர்குலைந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் இந்த நிதி, அதே திட்டங்களுக்கு அடுத்த ஆண்டிலே செலவிடப்படும் அல்லது மறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டால், அந்தத் திட்டங்களுக்கு அடுத்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளப்படும். இதில் எந்த நிருவாகத் தவறுகளும் நடைபெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு விளக்கமாகப் பதில் அளிக்க வேண்டுமென்றால், அவர் பேசுகின்றபொழுது இங்கே குறிப்பிட்டுச் சொன்ன



கருத்துகள்; *2012* ஆம் ஆண்டு, தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையில் *248* தலைப்புகளில் *11,571.34* கோடி ரூபாய் சரண்டர் செய்யப்பட்டதாகவும், அதில் *74* தலைப்புகளில் *4,359.78* கோடி ரூபாய் முழுமையாகத் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் இங்கே குறிப்பிட்டுப் பேசினார். இதில் வருவாய்க் கணக்குகளும், மூலதனக் கணக்குகளும் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், ஒப்புவிப்பு என்பது வருவாய்க் கணக்கிலும் வரலாம், மூலதனக் கணக்கிலும் வரலாம். மூலதனக் கணக்கில்தான் வர வேண்டும் என்பதல்ல. அத்தகைய ஒப்புவிப்பு தவிர்க்க முடியாத ஒன்று என்ற விளக்கத்தையும், அதில் உள்ள நடைமுறைகளையும் ஏற்கெனவே விளக்கினேன்.

*பிற்பகல் 12-15*

இதேபோல *2006-2007* ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் *166* தலைப்புகளில் *5,401.32* கோடி ரூபாய் செலவிடப்படாமல் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளதை அந்த ஆண்டு தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல *2007-2008*-ல் *202* இனங்களில் *4,766.83* கோடி ரூபாயும், *2008-2009*-ல் *174* இனங்களில் *5,708.31* கோடி ரூபாயும், *2009-2010*-ல் *184* இனங்களில் *6,767.93* கோடி ரூபாயும் தி.மு.க. ஆட்சியில் செலவிடப்படாமல் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளன என்பதும் அந்தந்த ஆண்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. *2010-2011* ஆம் ஆண்டிலும் *190* இனங்களில் *4,505.91* கோடி ரூபாய் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். *100* சதவீதம் திரும்ப ஒப்புவிப்பு செய்யப்பட்ட தலைப்புகள் பற்றியும் அந்த அறிக்கையில், நீங்கள் ஆளுகின்றபொழுது சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் மறு ஒப்புவிப்பு செய்த இனங்களில்கூட கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், விவசாயம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மீனளம் போன்ற துறைகளும் உள்ளன என்பதையும், அவற்றிலும் வருவாய்க் கணக்கிலும், மூலதனக் கணக்கிலும் ஒதுக்கப்பட்ட நிதி ஒப்புவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான்

இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, ஆண்டுதோறும் இவ்வாறு சில இனங்களில் ஒதுக்கப்படும் நிதி திரும்ப ஒப்புவிப்பு செய்யப்படுவதும், அவை மறு நிதி ஒதுக்கீட்டின் மூலமாக அதே ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கு அந்தந்த மானியங்களுக்குள் பயன்படுத்தப்படுவதும், நிதி திரும்ப ஒப்புவிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுமேயானால், அவற்றிற்கு அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி பயன்படுத்தப்படுவதும் எல்லா அரசும் பின்பற்றும் பொதுவான நடைமுறையேயன்றி வேறொன்றுமில்லை.

ஏதோ தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் புதிதாகக் கண்டுபிடித்துவிட்டதைப் போன்று இந்த மாமன்றத்தில் ஒரு பிரமையை ஏற்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின்மீது ஒரு தவறான களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே முயற்சி செய்துள்ளார் என்றே நான் கருதுகிறேன். அவரது கட்சித் தலைமைக்கு தனது விசுவாசத்தை இப்படிக் காண்பிக்க முற்பட்டுள்ளார் என்றே நான் எண்ணுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலை அறிக்கையை அவர் படிக்கவே இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். எனவேதான், நிதிநிலை அறிக்கை பற்றி வேறு எந்தக் கருத்தையும் அவரால் இங்கு தெரிவிக்க இயலவில்லை.

எனவே, மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவிப்பது என்னவென்றால், இத்தகைய நிருவாக நடைமுறைகள் எல்லா அரசாங்கங்களாலும் பின்பற்றக்கூடியவை என்பதையும், இதனால் அரசினுடைய நிருவாகத்தில் எந்தத் தவறும் நடக்கவில்லை என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உதாரணமாக, சிறு தலைப்பு 800 இதர செலவினங்கள், இதர வருவாய் இனங்களில் அதிக செலவுக்கான பணிகள் மேற்கொண்டது பற்றி தலைமை நிதிக் கணக்காயரின் அறிக்கையைக் குறிப்பிட்டு மாமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் பேசினார். நமது நிதிநிலை அறிக்கையிலும், மானியக் கோரிக்கைகளிலும் அனுமதிக்கப்படும் செலவினங்கள் ஆறு தலைப்பு (heads) நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது, பெருந்தலைப்பு-major head, துணைப் பெருந்தலைப்பு-



sub major head, சிறு தலைப்பு-minor head, உள் தலைப்பு-sub head, நுணுக்கத் தலைப்பு-detailed head, உள்நுணுக்கத் தலைப்பு-sub detailed head. இவற்றில் முதல் மூன்று தலைப்புகளும் தலைமை நிதிக் கணக்காயரால் நிர்ணயம் செய்யப்படுகின்றன. அடுத்த மூன்றும் மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படுகின்றன. இப்போதுதான் correct-ஆன point-க்கு வருகிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை செய்கிறார்.

பிற்பகல் 12-20

அரசு எந்த ஒரு செலவினத்தை மேற்கொண்டாலும், அச்செலவு எந்தப் பயன்பாட்டிற்காக ஒப்புதல் அளிக்கப்படுகிறதோ, அதற்கேற்ப இந்த ஆறு தலைப்புகளின்கீழ் கணக்கு வைக்கப்படும். உதாரணமாக கல்வித் துறையில் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வாங்குவதற்கு 2202-கல்வி, 01-தொடக்கக் கல்வி, 101-அரசு தொடக்கப் பள்ளிகள் துறை, Jf-நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினி வழங்குதல், 76-கணினி, 01 வாங்குதல் என்ற தலைப்பு பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், அனைத்துத் துறைகளிலும் தேவைக்கேற்ப, உள், நுணுக்க மற்றும் உள்நுணுக்கத் தலைப்புகளை மாநில அரசு ஏற்படுத்தினாலும், சரியான சிறு தலைப்பு தலைமை நிதிக் கணக்காயரால் அளிக்கப்படுவதில்லை. ஏனெனில், இவை தேசிய அளவில் உள்ளதாலும், நமது மாநிலத்தில் உள்ள சில செலவினங்கள் மற்ற மாநிலங்களில் இல்லாததாலும், அதற்குரிய சிறு தலைப்புகள் கிடைப்பதில்லை. இதுமட்டுமன்றி, மேற்கூறிய முறையில் சில சமயங்களில் நிதி ஒதுக்கீடு ஒரு திட்டத்திற்குச் செய்யப்படும்பொழுது, அந்தத் திட்டத்தில் பல்வேறு வகையான அம்சங்களும், பல்வேறு செலவினங்களும் இருப்பதால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் துறை, அதன் தேவைக்கேற்ப இவ்வாறு ஒதுக்கப்படும் நிதியை, பின்னர் பிரித்துச் செலவழிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இத்தகைய தேவை உள்ள திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது, அந்த நிதியை இதர தலைப்பில் ஒதுக்கீடு செய்தால் மட்டுமே, பின்னர் தேவைக்கேற்ப செலவினங்களைப் பிரித்து, உள் ஒதுக்கீடு செய்து பயன்படுத்த முடியும். இவ்வாறு இதர செலவினங்கள் என ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவழிக்கப்பட்ட சிலவற்றை, தலைமை நிதிக் கணக்காயர் சுட்டிக்காட்டியுள்ள குறை பற்றி உரிய விளக்கம் பொதுக் கணக்குக் குழுவில் அளிக்கப்படவுள்ளது.

இதை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், ஏதோ கணக்கில் ஒரு பெரும் தவறு இழைக்கப்பட்டுள்ளது போலப் பேசினார். இதற்கு இன்னும் விளக்கம் தரவேண்டுமானால், வேளாண்மைத் துறையில் ஒரு செலவு 2,127.59 கோடி ரூபாய், ‘800-இதர செலவினம்’ என்பதன்கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் 1,952.43 கோடி ரூபாய் விவசாயிகளுக்கான கட்டணமில்லா மின்சாரத்திற்கும், 154.44 கோடி ரூபாய் தேசிய விவசாய வளர்ச்சித் திட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறைக்கான 2401 பெருந்தலைப்பின்கீழ், ‘001-நிருவாகம்; 102-உணவு தானியங்கள்; 103-விதைகள்; 104-பண்ணைகள்; 105-உரங்கள்; 106-உர இறக்குமதி; 107-பயிர்ப் பாதுகாப்பு; 108-பணப் பயிர்; 109-வேளாண் விரிவாக்கம்; 110-பயிர்க் காப்பீடு; 111-புள்ளிவிவரம்; 112-பயறு வகைகள்’ என மொத்தம் 19 சிறு தலைப்புகள் உள்ளன. தேசிய அளவில் அனைத்து மாநிலங்களிலும் விவசாயிகளுக்குக் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படாத காரணத்தால், அதற்கென ஒரு சிறு தலைப்பு இல்லவே இல்லை. அதனை உருவாக்கும் அதிகாரமும் மாநில அரசுக்குக் கிடையாது. எனவே, வேறு வழியின்றி, ‘800-இதர செலவினம்’ என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியிலும் இதே நடைமுறைதான் இருந்தது.

ஒரு தலைப்பிலிருந்து வேறொரு தலைப்பிற்கு நிதி ஒதுக்கத்தை மாற்றம் செய்வது, அதாவது, re-appropriation என்பது ஒரு பெரிய குற்றமில்லை; mis-appropriation செய்வதுதான் குற்றம். நாட்டிற்கு வரவேண்டிய பணத்தை வரவிடாமல், உள்நோக்கத்திற்குத் தனியார் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிற்கு வரவேண்டிய பணத்தை வரவிடாமல், உள்நோக்கத்திற்குத் தனியார் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுப்பது, தேசிய சொத்தினை mis-appropriation செய்வதாகும். அந்த வகையில், 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில், (மேசையைத் தட்டும் ஒலி) 1,80,000 கோடி ரூபாய் நாட்டிற்கு இழப்பீடு ஏற்படுத்திய தி.மு.க.-வினுடைய செயல்தான் மாபாதகச் செயல் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதை மத்திய தணிக்கைத் துறை தனது அறிக்கையில் வெளிப்படுத்தி அதன் காரணமாகத்தான் நீதிமன்றத்திலே வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் அதற்குள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்) நான் அதற்குள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்) நான் உள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்) நான் வழக்கிற்கு உள்ளேயெல்லாம் போகவில்லை. (குறுக்கீடுகள்) நான் வழக்கிற்கு உள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் வழக்கிற்குள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்) நான் வழக்கிற்குள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை எடுக்கமுடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதன் காரணமாகத்தான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் வழக்கிற்கு உள்ளே போகவில்லை. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து வந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவரவர் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், (குறுக்கீடுகள்) நான் ஒரு வார்த்தை சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி விடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட வேண்டாம். (குறுக்கீடுகள்) குறுக்கீடு வேண்டாம். (குறுக்கீடுகள்) இது முறையல்ல; (குறுக்கீடுகள்) நீங்கள் என்னுடைய இருக்கையை நோக்கி வருவது முறையல்ல. (குறுக்கீடுகள்) என்னுடைய இருக்கைக்கு அருகில் வருவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உங்களது இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்களது இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப்போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குப்போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குப்போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி விடுகிறேன். ஆட்சேபணை இருந்தால் நீக்கிவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காருங்கள். நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முழுமையாகப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்)



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாகப் பேசட்டும். (குறுக்கீடுகள்) அவர் முழுவதுமாகப் பேசட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுவதுமாகப் பேசட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது, நேற்று முன்தினம் நீங்கள் தெரிவித்த கருத்து-தலைமைத் தணிக்கை அதிகாரியினுடைய (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) நேற்று முன்தினம் நீங்கள் பேசியதைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நேற்று முன்தினம் நீங்கள் பேசியதைத்தான் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதை முழுமையாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆட்சேபணை இருந்தால் நீக்கிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன பேச வருகிறார் என்பதைக் கேளுங்கள். நீங்கள் பிறகு பேசலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன பேசுகிறார் என்பதை முழுவதுமாகக் கேட்டுவிட்டு பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் என்ன சொல்கிறேன் என்று கேளுங்கள். நான் அந்த வழக்கிற்குள் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் அந்த வழக்கிற்குள் போகவில்லை. (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேளுங்கள். தவறு இருந்தால் நீக்கிவிடுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, நீங்கள் நேற்று பேசும்போது (குறுக்கீடுகள்) நான் அந்த வழக்கிற்குள் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது, நேற்று நீங்கள் பேசும்போது full surrender பற்றிச் சொன்னீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெரும் தவறு நிகழ்த்தப்பெற்றிருக்கிறது என்று சொன்னீர்கள். எல்லா ஆட்சிகளிலும் குறிப்பிட்ட தலைப்புகளின்கீழ் ஒதுக்கப்படுகின்ற நிதி செலவிடப்படவில்லை என்றால் மறு நிதியொதுக்கமாக அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லப்படும் என்று இங்கே சொன்னேன். அதற்குரிய காரணங்களையெல்லாம் சொல்லிவிட்டேன். அதில் நீங்கள் சொன்ன கூற்றுப்படி (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்ன கூற்றுப்படி 2012-2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் இயங்கிக்கொண்டிருக்கின்ற இந்த அரசின்மீது எந்தக் குறையும் இல்லை. தணிக்கைத் துறையின் அறிக்கையின்படி நாட்டிற்கு ஏதாவது இழப்பீடு இருந்தால் அதன்மீது தணிக்கைத் துறை நீதிமன்றத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை இருக்கிறது. அதன்படி, எங்கள் அரசின்மீது எந்தக் குறையும் இல்லை. நாங்கள் இழப்பீடு ஏற்படுத்தவில்லை. அதனால் எங்கள் அரசின்மீது இந்திய தணிக்கைத் துறையால் எந்த வழக்கும் போட முடியாது. ஆனால், அதுமாதிரியான ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதைத்தான் நான் உதாரணமாகச் சொல்ல வந்தேன். (குறுக்கீடுகள்) நான் அந்த வழக்கிற்குள் போகவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அது தேசிய இழப்பீடு. இதில் இழப்பு என்பது எதுவுமில்லை. மறு ஒதுக்கீடு வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முழுமையாகப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முழுமையாகப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பேசவிடாமல், அவர் பேசியதில் பாதியை மட்டும் கேட்டுவிட்டு நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) இல்லை, அவரை முழுவதுமாகப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) அவரை முழுமையாகப் பேசவிடாமல் நீங்களே பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்பதைத்தான் நானும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கை அறிக்கையில் (குறுக்கீடுகள்) அவர் ஒன்றும் குறை சொல்லவில்லை. ஒப்பிட்டுத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் முழுமையாகப் பேசட்டும். உங்கள் கட்சி உறுப்பினர்களுக்குத்தானே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசியதற்குத்தான் அவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** தயவுசெய்து அனைவரும் அப்படியே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) யாரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறைபாடு இருக்கிறது என்று நீங்கள் பேசியதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அதாவது இந்தக் குறைபாடு, இந்த நிதி ஒதுக்கீட்டில் உள்ள குறைபாடு, மறு நிதி ஒதுக்கீடுமூலம் சரி செய்யப்படுகிறது. இதில் தேசிய இழப்பு எதுவும் இல்லை. ஆனால், அது ஒரு தேசிய இழப்பு. யாரையும் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) யாரையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) ஓர் ஒப்பீட்டைத்தான் காட்டினார். (குறுக்கீடுகள்) ஓர் ஒப்பீட்டைத்தான் அவர் சொன்னார்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒப்பீட்டைத்தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நேற்றைய முன்தினம் பெருந் தலைப்பு, குறுந் தலைப்பு என்ற விவரங்களை எல்லாம் சொல்லாமல் சொல்லி, surrender, full surrender செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் சொல்லி, ஏதோ நம்முடைய அரசு மிகப் பெரிய தவறை இழைத்துவிட்டதுபோல் ஒரு மாயத் தோற்றத்தை இங்கே உருவாக்கினார். அதற்குரிய விளக்கத்தை எல்லாம் நான் தந்து, அதன் மூலமாகத் தணிக்கைத் துறை இந்த அரசுமீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஓர் உதாரணமாகத்தான், நான் ஏற்கெனவே பேசிய 2G Spectrum scam பற்றி, பெரிய அளவில் ஊழல் நடந்திருக்கிறது என்று தணிக்கைத் துறை ஆய்வு செய்து, முடிவு செய்து, அது நீதிமன்றத்தில் கொண்டு வைக்கப்பட்டிருக்கிறது. வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது. இதோடு முடித்துக்கொள்ளலாம் என்று நான் நினைத்தேன். அதற்குள் அவர்கள் பதட்டப்பட்டுவிட்டார்கள். இதில் என்ன இருக்கிறது? *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதில் ஒரு முக்கிய விஷயம் குறித்து சொல்கிறேன். நாட்டிற்கோ, தேசத்திற்கோ மிகப் பெரிய இழப்பு என்று இந்தியத் தணிக்கைத் துறை கருதுமேயானால், அதை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்தப்படும். இது நடைமுறை. அந்த நடைமுறை இதுவரைக்கும் நம்முடைய அரசுக்கு ஏற்படவில்லை. எந்தத் தவறையும் நாங்கள் செய்யவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் எதையாவது பேசி விட்டு உடனே எழுந்து வெளிநடப்புச் செய்து விடுவார்கள்; அதைச் செய்யலாம். அதைப் பற்றி நாம் பேசினால் அவர்களுக்கு ஏன் சுடுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு ஒரு கதைதான் நினைவுக்கு வருகின்றது. சலூன் கடைக்கு ஒருவர் முடி வெட்டச் செல்கிறார். முடிவெட்டுவதற்காக அங்குள்ள நாற்காலியில் உட்காருகிறார். அந்த



நாற்காலியில் உட்கார்ந்தவுடன் கோபித்துக்கொண்டு வெளியில் சென்று விடுகிறார். வெளிநடப்புச் செய்துவிடுகிறார். ஏன் வெளிநடப்புச் செய்கிறார் என்றால் நாற்காலியில் உட்கார்ந்தவுடன் ஒரு துணியை போர்த்துவார்கள் அல்லவா, அதாவது, அந்தத் துணியை, பொன்னாடையை போர்த்தியபோது யாரும் கைத்தட்டவில்லையாம்; அதனால் வெளிநடப்புச் செய்தாராம். *(மேசையைத் தட்டும் ஒலி)* எதற்கு எடுத்தாலும் கோபித்துக்கொண்டு வெளிநடப்புச் செய்தால் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் யோசனை செய்கிறார். நாம்தானே அடிக்கடி வெளிநடப்புச் செய்கிறோம் என்று. அதிகமாக வெளிநடப்புச் செய்வது நாம்தானே என்று யோசனை செய்கிறார்.

இதுபோல, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பது நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்போது அறிந்திட இயலாது. அதன்பிறகுதான், அத்திட்டத்தில் பல பணிகளுக்கு அனுமதி வழங்கப்படும். இதனை அடுத்து அந்தந்தப் பணிகளுக்கு ஏற்ப உள் தலைப்பு, நுணுக்கத் தலைப்பு, உள் நுணுக்கத் தலைப்பு ஆகியவற்றை மாநில அரசு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் எந்தப் பணிக்கு எவ்வளவு நிதி செலவிடப்படுகிறது என்பது தெளிவாகவே இருக்கும் என்பதால், கணக்குகள் தெளிவில்லாமல் இருப்பதாகக் கூறுவது சரியல்ல. இது குறித்து தலைமை நிதிக் கணக்காயருக்கு விளக்கப்படும். எனவே, இதை வைத்து அரசு நிருவாகத்தைக் குறை கூறுவது சரியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார வளர்ச்சியைப் பற்றி சிலர் விமர்சனம் செய்துள்ளார்கள். குறிப்பாக, தி.மு.க. கூட பொருளாதார வளர்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. ஏதோ தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருந்தது போலவும், இந்த ஆட்சியில் அது குறைந்துவிட்டது போலவும் ஓர் உண்மைக்கு மாறான தகவலை தி.மு.க.-வினர் அடிக்கடி கூறி வருகிறார்கள். இந்த ஆட்சியில் 2012-2013 ஆம் ஆண்டில் மட்டும் வறட்சியின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சி குறைந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான நிருவாகச் செயல்பாடுகளினால் இது உடனடியாகச் சீர்செய்யப்பட்டு,

2013-2014-ல் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.29 சதவீதம் ஆகவும், அதுவே 2014-2015-ல் 7.25 சதவீதம் ஆகவும் உள்ளது. இது நாட்டின் சராசரி வளர்ச்சியைவிட அதிகம் என்பதையும் அவர்களுக்குக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு) அவர்கள் போய்விட்டார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சியில் 2007-2008-ல் மொத்த வளர்ச்சி 6.13 சதவீதம்தான். அதுவும், 2008-2009-ல் குறைந்து மொத்த வளர்ச்சி என்பது 5.45 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டுகளில் விவசாயத் துறையின் வளர்ச்சி முறையே (-)4.69, (-)2.70 சதவீதம். உற்பத்தித் துறையின் (Manufacturing Sector) வளர்ச்சி 2007-2008-ல் 0.59 சதவீதம். 2008-2009-ல் (-)1.31 சதவீதம் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மிகக் குறைந்த வளர்ச்சி பெற்ற 2013 ஆம் ஆண்டில்கூட உற்பத்தித் துறை எதிர்மறையான வளர்ச்சியைப் பெறவில்லை. அந்த ஆண்டில்கூட அதன் வளர்ச்சி 1.12 சதவீதமாகத்தான் இருந்தது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2010-2011 ஆம் ஆண்டில் 13.12 சதவீத வளர்ச்சி அடைந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். 2005-2006 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் ஆட்சி நடைபெற்ற காலத்தில் தமிழ்நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சி 13.96 சதவீதம் ஆக உயர்வடைந்தது. அந்த அடித்தளத்தில் தான் தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடைபெற முடிந்தது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

மானியங்களுக்கும் உதவித் தொகைகளுக்கும் 59,185 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை சிலர் குறை கூறுகின்றனர். இந்த அரசு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருகிறதா? அல்லது இலவசங்களுக்கு முக்கியத்துவம் தருகிறதா? என்ற கேள்வியை அவர்கள் எழுப்பியுள்ளனர். அவர்களுக்கு நான் அளிக்கின்ற பதில், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தருகிறது. அவசியமான திட்டங்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக ஏழையெளிய மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களுக்கும், மானியம் அவசியமென்ற காரணத்தினால், அவற்றிற்கும் முக்கியத்துவம் தருகிறது. இத்தகைய கருத்துகளைச் சொல்பவர்கள் இந்த



59,185 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் வறுமை ஒழிப்பு முதல் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களும் அடங்கியுள்ளதை ஆராய்ந்து அதன்பின் அவர்களுடைய கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாடு பொருளாதார வளர்ச்சி பெறுவதால் மட்டுமே ஏற்றத்தாழ்வுகளை முற்றிலுமாக நீக்கிவிட முடியாது. அவ்வாறு ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும்போது அரசுக்குக் கிடைக்கின்ற நிதி ஆதாரத்தின் ஒரு பகுதியை பல்வேறு நலத் திட்டங்கள் மூலமாக ஏழைகளுக்கு மானியமாகப் பகிர்ந்தளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரமும் தாழ்ந்து விடாமல் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். இதில் என்ன தவறு உள்ளது? மேற்கத்திய பொருளாதாரத்தை அரைகுறையாகக் கற்றவர்கள் வேண்டுமானால், ஏழைகளுக்கு மானியம் தருவதைக் குறையாகக் கூறலாம். ஆனால், ஒருபுறம் சமூக நீதி பற்றி பேசிவிட்டு, மறுபுறம் விலையில்லாமல் ஏழைகளுக்கு அவர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பட வழங்கப்படும் உதவிகள் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக எதிர்க்கிறோம் என்று கூறும் தலைவர்கள் பற்றி நான் என்ன கூறுவது? அத்தகைய மானியம் வழங்கும் திட்டங்களுக்கு அவசியத்திற்கு ஏற்பவே மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முக்கியத்துவம் வழங்கி வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மானியங்களுக்கும், உதவித் தொகைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள 59,185 கோடி ரூபாய் எதற்காகச் செலவிடப்படுகிறது? இதில் எந்தெந்தத் திட்டங்கள் உள்ளன என்பதைப் பார்க்க வேண்டும். உணவு மானியத்திற்காக 5,300 கோடி ரூபாய், விவசாயம், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் போன்ற மின்சார மானியத்திற்காக 7,136 கோடி ரூபாய், நலிந்த ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவித் தொகை வழங்குவதற்காக 4,206 கோடி ரூபாய், நலிந்த பிரிவு மாணவ-மாணவியருக்குக் கல்வி உதவித் தொகை வழங்க 1,924 கோடி ரூபாய், போக்குவரத்துக் கழகத்திற்கு டீசல் மானியமாக 500 கோடி ரூபாய். இவையெல்லாம் தேவையற்ற செலவினங்களா? இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கிய விலையில்லா அரிசித் திட்டத்தால்தான் தமிழகத்தில் பசிப் பிணி என்பதே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தால் பருப்பு, சமையல் எண்ணெய் ஆகியவற்றை ஏழை எளிய மக்கள் மானிய விலையில் பெறுகின்ற ஒரு நல்ல சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு இப்படி மானியங்கள் தருவது குறித்தும், உதவித் தொகைகள் அளிப்பது குறித்தும், விலையில்லா பொருட்கள் வழங்குவது குறித்தும் வாய்கிழியப் பேசுபவர்கள் இந்த அரசின் நிதிநிலை குறித்த கவலையால் அப்படிப் பேசவில்லை. அவர்களது கவலையெல்லாம் இப்படி மானியங்கள் வழங்குவதாலும், கல்வி உதவித் தொகைகளை அள்ளித் தருவதாலும், விலையில்லா அரிசி, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி, விலையில்லா மிதிவண்டி என்றும், தாலிக்குத் தங்கம் என்றும், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமென்ட் என்றும் வகை வகையாய்த் திட்டங்களைச் செயல்படுத்துவதாலும், *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் இதயங்களில் நீங்கா இடம் பெற்று விட்டார்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் இதயங்களில் நீங்கா இடம் பெற்று விட்டார்களே, மக்கள் மனதிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களை இனி என்றுமே நீக்க வழியில்லையே என்பதுதான் அவர்களது கவலை. *(மேசையைத் தட்டும் ஒலி)* உலை கொதிக்கும் இல்லங்களில், அன்னத்தின் வடிவிலே அம்மா தெரிகிறார். பள்ளி மாணவச் செல்வங்கள் விரிக்கும் புத்தகத்திலும், அணியும் சீருடையிலும், மடிக்கும் கணினியிலும், உருண்டோடும் மிதிவண்டியிலும், சுமக்கும் புத்தகப் பையிலும், வண்ணப் பென்சில்களிலும், வடிவியல் பெட்டிகளிலும், உலக வரைபடப் புத்தகத்திலும், வெள்ளைத் தாளை வண்ணமாக்கும் கிரையான்களிலும், இன்ன பிற கல்வி உபகரணங்களிலும், அள்ளித் தரும் கல்வி உதவித் தொகையிலும், கலைமகளின் உருவாக காவியத் தாயே ஜொலிக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-40*

கட்டுத் துறையில் கட்டியிருக்கும் ஆடும் மாடும் எழுப்பும் அம்மா என்னும் குரலிலும் அவர்தானே ஒலிக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏழைப் பெண்களின் கழுத்திலே தவழும் தங்கத் தாலியிலும், கொழு கொழு எனக் குதித்தோடி வரும் பிள்ளைகளின் முகத்திலும் மாண்புமிகு அம்மா அவர்கள்தானே தெரிகிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*



தஞ்சைக்கு ஓடிவரும் காவேரித் தண்ணீரிலும், முழு அளவை எட்டுகிற முல்லைப் பெரியாறு நீரிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் முகம்தானே தெரிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

என்.எல்.சி. நெய்வேலி நிலக்கரி பங்குகளிலும், அபகரிப்பிலிருந்து மீட்டுப் பெற்ற நிலங்களிலும், எங்களைக் காக்கும் தெய்வமாய் எங்கள் அம்மாதானே தெரிகிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இப்படி மக்கள் நோக்கும் இடங்களில் எல்லாம் நீக்கமற அம்மா நிறைந்திருப்பதைத் தாங்க முடியவில்லை அவர்களால். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழரைக் கோடி தமிழர்களின் இதயங்களிலும் நீங்கா இடம் பிடித்து கொலுவீற்றிருப்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை அவர்களால், அவர்களது இதயங்களால். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனால்தான் இல்லாத ஊருக்கு பொல்லாத வழி சொல்லுவதுபோல் இந்த அரசு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருகிறதா? இலவசங்களுக்கு முக்கியத்துவம் தருகிறதா? என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வலியச் சென்று உதவிகள் தருவது ஒன்றும் வம்படியாய் ஆதரவு பெற்றிட அல்ல. மக்களைத் தன் உயிரெனக் கருதி உள்ளன்போடு உதவிகள் தருகிறார் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழக மக்களும், தங்கள் உயர்வுக்குக் காரணம் அம்மா அவர்களே என்ற உண்மையை உணர்ந்து, அளவிலா அன்பை, பாசத்தை, நேசத்தை மாண்புமிகு அம்மா அவர்கள்மீது செலுத்துகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரேபியாவில் ஆறு இல்லை, ஆமைக்கு பல் இல்லை, அத்திமரத்தில் பூ இல்லை, இனிப்பு அறியும் சக்தி பூனைக்கு இல்லை, இலந்தை மரத்தில் பறவை கூடு கட்டுவதில்லை, ஈசலுக்கு வயிறு இல்லை, இந்தியாவில் எரிமலை இல்லை, ஐஸ்லாந்தில் இரயில் இல்லை, ஹவாய் தீவில் பாம்பு இல்லை, கடலில் முதலைகள் வாழ்வது இல்லை, உலகில் 26 நாடுகளில் கடலோரக் கடற்கரையே இல்லை, பல்லி தண்ணீர் குடிப்பது இல்லை, ஒட்டகத்திற்கு நீந்தத் தெரிவதில்லை, மலைப் பாம்புக்கு நஞ்சு இல்லை, வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை, குயில்கள் கூடுகட்டி வாழ்வதில்லை; குளிர் காலத்தில் கூவுவதும் இல்லை பூட்டான் நாட்டில் தியேட்டர் இல்லை,

மாசிடோனியாவுக்கு தேசியக் கொடி இல்லை, பக்ரைன் தேசிய கீதத்தில் வார்த்தைகளே இல்லை, ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை, யமுனா நதி கடலில் கலப்பது இல்லை, சிங்கப்பூரில் காகம் இல்லை, கிவி பறவைக்கு இறக்கை இல்லை, பூச்சி-புழுக்கள் தூங்குவது இல்லை, உண்மையை மறைத்து வம்புக்கு பேசும் அரசியல் கட்சிகளுக்கு அரசியல் வாழ்க்கை இனி இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தங்கத் தாரகை எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களைக் குறை சொல்ல யாருக்குமே அருகதை இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசுகின்றபோது 110 விதி, 110 விதி, 110 விதி பற்றி அடிக்கடி சில வினாக்களை எழுப்பியிருந்தார். நான் சுருக்கமாகச் சொல்கின்றேன். அதில் துறை வாரியாகவும், திட்டங்கள் மூலமாகவும் சொல்லவேண்டும் என்று சொன்னால், நேற்று சட்டமன்றம் மாலை 6-00 மணி வரை நடைபெற்றதே அதுபோலத்தான் இன்றும் நடைபெற வேண்டியிருக்கிற சூழ்நிலையைத் தவிர்த்து இதனைச் சுருக்கமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) சபைக்குச் சொல்ல வேண்டிய கடமை இருக்கின்றது.

2011-2012 ஆம் ஆண்டில் விதி எண் 110-ன்கீழ் 51 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 51 திட்டங்களுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டு 30 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 12 திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

2012-2013 ஆம் ஆண்டில் விதி எண் 110-ன்கீழ் 87 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 83 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 50 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 32 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அரசாணை வெளியிடப்பட்ட ஒரு திட்டத்தினைச் செயல்படுத்த முடியவில்லை. மீதம் உள்ள நான்கு திட்டங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன.

2013-2014 ஆம் ஆண்டில் விதி எண் 110-ன்கீழ் 292 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.



அதில் 288 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 132 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 156 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒரு திட்டம் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது. இதர மூன்று திட்டங்களைச் செயல்படுத்த ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2014-2015 ஆம் ஆண்டில் விதி எண் 110-ன்கீழ் 236 திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 209 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 12 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 197 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நான்கு திட்டங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன. மீதம் உள்ள 23 திட்டங்களைச் செயல்படுத்த ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 12-45

நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பற்றி நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். பெரிய உள்கட்டமைப்புப் பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகள் உள்ளன. நில எடுப்புப் பணியின் காரணமாகப் பாலம் மற்றும் சாலைப் பணிளுக்கு அவற்றிற்கான கால அளவு வழங்கப்படவேண்டும். மேலும், நீதிமன்ற வழக்குகள் காரணமாகவும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும்போது சாலையின் தன்மை மற்றும் தல ஆய்வு செய்வதற்கு உரிய கால அவகாசம் வழங்கப்படவேண்டும். எனவே, திட்டம் அறிவிக்கப்பட்ட ஆண்டிலேயே முழு நிதியையும் ஒதுக்க இயலாது. இந்த நடைமுறையை தி.மு.க.-வும் கடைபிடித்துள்ளது. உதாரணத்திற்கு 14,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்த 2007-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால், 2011 ஆம் ஆண்டுவரை 1,143 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்து, செலவு செய்யப்பட்டது. ஏன் 14,300 கோடி ரூபாயை 2007 ஆம் ஆண்டிலேயே ஒதுக்கீடு செய்யவில்லை என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் பதில் தேடினால் தற்போது ஏன் திட்டங்களுக்கான முழுத் தொகையையும் ஒதுக்கம் செய்யவில்லை என்ற அவரது வினாவிற்கு விடை கிடைக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் கூட, சிறப்பு பொது விநியோகத் திட்டம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்களும் நேற்று இங்கே பேசினார்கள். அவர்களுக்கு நான் தெரிவிப்பது, ஜனவரி மாதத்தில் 12,755 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 4,877 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும் மற்றும் 144 இலட்சம் லிட்டர் சமையல் எண்ணெய்யும் பொது விநியோகக் கடைகள்மூலம் வழங்கப்பட்டுள்ளன. பிப்ரவரி மாதத்தில் 9,373 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 5,805 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும், 138 இலட்சம் லிட்டர் சமையல் எண்ணெய்யும் வழங்கப்பட்டுள்ளன. சில கடைகளில் மட்டும் இருப்பு குறைந்திருக்கலாம். தற்காலிகமாக இருப்பு தீர்ந்திருந்தால் அது பற்றிய கோரிக்கைகள் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றன. அது சரிசெய்யப்படவேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இத்தகைய குறைபாடுகள் உறுதியாகச் சரி செய்யப்படும். அதற்காக இந்தத் திட்டம் செயல்படவில்லை என்று சொல்லிவிட முடியாது. இத்திட்டம் சிறப்பாகத் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நாங்கள் கேட்பதெல்லாம் இத்தகைய மானியங்கள் வீண் செலவா? விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் வழங்கப்படும் கட்டணம் இல்லா மின்சாரம் வீண் செலவா? ஏழையெளிய நடுத்தர மக்கள் வீட்டில் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு மானியம் வழங்குவது வீணானதா? டீசல் மானியம் தருவதால்தானே குறைந்த பேருந்துக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. இது தேவையற்றதா? ஒருபுறம் போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று கூறுகிறார்கள்; மின்சாரக் கட்டணம் உயர்த்தக் கூடாது என்கிறார்கள். ஆனால், அதே சமயம், இதனால் அந்த நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டை இதுபோல் மானியம்மூலம் அரசு வழங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவ்வாறு ஒதுக்கினால் அதை வீண் செலவு என்று கூறுகின்றனர். எதைத்தான் இவர்கள் அரசிடம் எதிர்பார்க்கின்றனர் என்று ஒன்றுமே புரியவில்லை.

இது தவிர, பல்வேறு திட்டங்களுக்கு நிதி உதவியாக 36,507 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதி 11,798 கோடி ரூபாய் ஆகும்.



இந்தச் செலவினங்களைத் தேவையற்ற செலவினங்களாகக் கருதிவிட முடியுமா? மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு வழங்கப்படும் 5,248 கோடி ரூபாய் உதவித் தொகை வீண் செலவா? ஏழைகளுக்கு வழங்கப்படும் சூரிய மின்சக்தியோடு கூடிய பசுமை வீடுகள் கட்ட 1,260 கோடி ரூபாய், தேசிய சுகாதாரத் திட்டத்திற்கு 1,224 கோடி ரூபாய், திருமண உதவித் திட்டங்களுக்கு 693 கோடி ரூபாய், மகப்பேறு மருத்துவ உதவித் தொகைக்கு 668 கோடி ரூபாய், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு 140 கோடி ரூபாய், நகர்ப்புற ஏழைகளுக்கு வீடுகள் கட்ட 289 கோடி ரூபாய், உயர் கல்வியில் இடைநிற்றலைக் குறைக்க 381 கோடி ரூபாய், மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க 1,100 கோடி ரூபாய், நகர்ப்புற வறுமை ஒழிப்பிற்கு 357 கோடி ரூபாய், தூய்மை இந்தியா திட்டத்திற்கு 350 கோடி ரூபாய், கிராமப்புற வறுமை ஒழிப்பிற்கான புதுவாழ்வுத் திட்டத்திற்கு 255 கோடி ரூபாய், தூய்மை கிராமம் திட்டத்திற்கு 335 கோடி ரூபாய், திறன் மேம்பாடுத் திட்டத்திற்கு 150 கோடி ரூபாய் போன்ற திட்டங்களும் இந்த ஒதுக்கீட்டில் அடங்கியுள்ளன. இவையெல்லாம் வீணான செலவுகளா? இத்திட்டங்கள் கைவிடப்பட வேண்டிய திட்டங்களா?

விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுவதால்தானே அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஏழை மாணவர்கள் கணினி அறிவைப் பெறுகின்றனர். அதனால்தானே இன்று இந்தியாவிலேயே தமிழ்நாடு கணினி அறிவில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இத்தகைய கேள்விகளை எழுப்புவோர் அந்த நிதி, எந்தெந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை ஆய்வு செய்து, அவற்றில் தேவையற்றவை என்று எதையாவது கருதுவார்களேயானால் அதுபற்றி வெளிப்படையாகக் கருத்தைத் தெரிவிக்கலாம். அதை விடுத்து, ஒட்டுமொத்தமாக இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி வீண் செலவு என்று கூறுவது ஏழையெளிய மக்களுக்கு இவர்கள் செய்யும் துரோகம் என்பதையே உறுதிப்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசும் போதுகூட பால் விலை பற்றியும், முதியோர் உதவித் தொகையைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இந்தப் பேரவையில்

இவை பற்றி பலமுறை விளக்கம் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுபற்றிப் பேசவில்லை என்றால் திருப்தி ஏற்படுவதில்லை.

*பிற்பகல் 12-50*

முதியோர் உதவித் தொகை வழங்க 2010-2011 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 1,208 கோடி ரூபாய் மட்டுமே. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றதும் மாதம் 500 ரூபாய் என வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகையை மாதம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதனால் 2015-2016-ல் இதற்கான ஒதுக்கீடு முன்பு எப்போதும் இருந்த அளவான 1,208 கோடி ரூபாயிலிருந்து 4,206 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* முதியோர் உதவித் தொகையைப் பொறுத்தவரை, வருமானம் ஈட்ட வழியில்லா வறிய நிலையில் உள்ளவர்களுக்கு அந்த உதவி வழங்கப்படவேண்டும். இவ்வாறு வழங்கும்போது சில இடங்களில் தவறுகள் நேரலாம். கார், மாடி வீடு வைத்திருப்பவர்கள்கூட சில இடங்களில் முதியோர் உதவித் தொகை பெறும் நிலை சில நேரங்களில் நிகழ்கிறது. இறந்தவர்கள் பெயரில்கூட சிலர் தவறாக உதவித் தொகை பெறலாம். இவற்றை அவ்வப்போது கண்டறிந்து நீக்கினால்தான் தகுதியான புதிய நபர்களுக்கு வழங்கமுடியும். அப்படிக் கண்டறியும்போது ஒரு சில தகுதியான நபர்கள் நீக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் அதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் உடனடியாக அது சரிசெய்யப்படும். இத்தகைய பணியை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்கூடச் செய்யலாம். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தகுதியான நபர்கள் எவருக்கும் முதியோர் உதவித் தொகையை மறுக்காது என்றும், அப்படி இருந்தால் எங்கள் கவனத்துக்குக் கொண்டுவாருங்கள்; அது உடனடியாகச் சரிசெய்யப்படும் என்றும், பலமுறை இந்த அவையில் தெளிவுபடுத்தப்பட்ட பின்பும் மீண்டும் மீண்டும் அதுபற்றிப் பேசவேண்டும் என்பதற்காகவே பேசுவது தவிர்க்கப்படவேண்டும் என்றும் இப்பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.



முதியோர் உதவித் தொகைத் திட்டத்தில் தகுதியான நபர்கள் சேர்க்கவேண்டி இருந்தாலோ, விடுபட்டிருந்தாலோ, தகுதியிருந்தும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலோ மாவட்ட நிருவாகத்தை அணுகி தீர்வுகாண வேண்டும் என்றும், இப்பணியை முன்னுரிமை அளித்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அத்தகைய எளியோருக்கு என்றும் உதவிடும் அரசாக இருக்கும் என்பதையும் நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோலத்தான் பால் விலையும். இந்த அவையில் பலமுறை இதுபற்றி தெளிவுபடுத்தியுள்ளோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே மிக விரிவான விளக்கமான பதிலை இங்கே அளித்திருக்கிறார்கள். ஆனால், அதைப் பற்றியே மீண்டும் மீண்டும் பேசப்படுகிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையைக் கோரும் செல்வி பாலபாரதி அவர்கள் விற்பனை விலையை ஏற்றவேகூடாது என்கிறார். விற்பனை விலையை ஏற்றாமல் கொள்முதல் விலையை ஏற்றுவது சாத்தியமாகுமா? இதனால் ஏழைகள் பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். இதில் ஏழைகள் பாதிக்கப்படவில்லை என்பதை அன்றே தெளிவுபடுத்தினேன்.

தமிழ்நாட்டில் மொத்த பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 187 இலட்சம் லிட்டர் ஆகும். இதில் ஆவின் கொள்முதல் அளவு 30 இலட்சம் லிட்டர் மட்டுமே. ஆவின் கொள்முதல் விலையை உயர்த்தாவிட்டால் ஆவின் நிறுவனம் பால் கொள்முதல் செய்ய முடியாத நிலைக்குப் போய்விடும். இதனால், பால் கொள்முதல் என்பது தனியாரின் ஏகபோகமாக மாறிவிடும். ஆவின் இந்த அளவு கொள்முதல் செய்வதால்தான் ஒருபுறம் விவசாயிகளும் மறுபுறம் நுகர்வோரும் பயன்பெறுகின்றனர். ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்யும் பால்மூலம் நாள் ஒன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் சென்னையிலும், 9.91 இலட்சம் லிட்டர் பிற மாவட்டங்களிலும் விற்கப்படுகிறது. குறைந்த விலையில் பால் வாங்கிப் பயன் பெறுபவர்கள் அட்டைதாரர்கள் மட்டுமே. இவ்வகையில் சென்னையில் 7 இலட்சம் அட்டைதாரர்களும், பிற மாவட்டங்களில் ஒரு இலட்சம் அட்டைதாரர்களும் உள்ளனர். இவர்கள்தான், ஆவின் குறைந்த விலையில் சமன்படுத்தப்பட்ட

பாலை விற்பதன்மூலம் பயன் அடைபவர்கள். இதில் பெரும்பாலும் வசதியுள்ளவர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள்தான் அதிகம். இதில் ஏழைகள் 30 சதவீதம்கூட இல்லை. இதற்கு மானிய விலையில் விற்று ஆவின் நஷ்டப்பட வேண்டுமா? ஆவின் நிறுவனம் நலிவடைந்தால் யாருக்கு இலாபம்? பிற 70 சதவீதம் பயனாளிகள் மானியம் பெறவேண்டிய நிலையில் இல்லாதபோதும் இதற்கு மானியம் வழங்கப்படவேண்டும் எனக் கூறுவது எந்தவகையில் நியாயம்?

இதுகுறித்து மேலும் ஒரு விளக்கத்தைத் தருகிறேன். ஆவின்மூலம் விற்கப்படும் சமன்படுத்தப்பட்ட பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு 34 ரூபாய். இவ்வாறு சென்னையில் விற்கப்படும் சமன்படுத்தப்பட்ட பாலின் அளவு நாள் ஒன்றுக்கு 5.60 இலட்சம் லிட்டர். ஆனால், தனியார்மூலம் இதே பாலின் விற்பனை விலை லிட்டருக்கு 42 ரூபாயிலிருந்து 44 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அவர்கள் சென்னையில் விற்கும் பால் அளவு அனைத்து வகையும் உள்பட, நாள் ஒன்றுக்கு 11.25 இலட்சம் லிட்டர். இந்நிலையில், பால் விலை நியாயமான அளவுகூட உயர்த்தாமல் ஆவின் எப்படிச் செயல்படமுடியும். இதை வைத்து எவ்வளவு காலம்தான் அரசியல் செய்வது? பால் விலை பற்றிய விளக்கம் இத்துடன் போதும் எனக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும், இதன் உண்மை நிலையை உணர்ந்து செயல்படக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வி, சுகாதாரம் போன்ற சமுதாய நலத்திற்கான மேம்பாட்டிற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை எனச் சிலர் விமர்சித்துள்ளனர். கல்வித் துறையைப் பொறுத்தவரை, 2010-2011 ஆம் ஆண்டில் மொத்த ஒதுக்கீடு 13,319.49 கோடி ரூபாய். ஆனால், 2015-2016 ஆம் ஆண்டில் கல்வித் துறைக்கான ஒதுக்கீடு 24,633.32 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாநிலத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 13.67 சதவீதமாகும். அதேபோல் சுகாதாரத் துறைக்கு 2010-2011-ல் ஒதுக்கப்பட்ட தொகை 4,395.31 கோடி ரூபாய். ஆனால், 2015-2016 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு 8,245.41 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலத் துறைக்கு மொத்த ஒதுக்கீட்டில் 4.52 சதவீதம் என நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளேன். இந்த அளவுக்கு ஒதுக்கீடு கல்விக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-55

கல்வித் துறையில் கட்டமைப்புகளை மேம்படுத்தியது, பல்வேறு புதிய முன்முயற்சிகளின்மூலம் கல்வி கற்கும் திறனை மேம்படுத்தியது, கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் 1,36,593 நலிவடைந்த, வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளைக் கல்விக் கூடங்களில் சேர்த்தது, பள்ளிக்குச் செல்லாத 46,737 சிறுவர், சிறுமியரை பள்ளியில் சேர்த்தது என பல சிறப்பான சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செய்துள்ளது. பெண் கல்வியை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் மிகவும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உயர் கல்வியில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்க ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் கல்வி உபகரணங்கள் அனைத்தையும் விலையில்லாமல் வழங்குதல், 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினி, பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி போன்ற எண்ணற்ற திட்டங்களின் மூலமாக, மாணவ மாணவியர் சேர்க்கை கூடியுள்ளதால் கல்வித் துறையில் ஒரு புதிய வரலாற்றை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் விளைவாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களின் சேர்க்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அதன் புள்ளிவிவரங்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேபோல் சுகாதாரத் துறையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தது, தற்போதுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர தரம் உயர்த்தப்பட்ட சுகாதார மையங்களாக மாற்றியது, மாநகர மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றில் எண்ணற்ற கட்டமைப்பு மற்றும் உபகரண வசதிகளை மேம்படுத்தியதுடன், கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்களைப் பணியமர்த்தியது என மருத்துவமனைகளின் தரம் ஓர் உச்ச நிலையை எட்டியுள்ளது. பொதுமக்களுக்கான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், ஏழையெளிய மக்களுக்கு ஒரு பெரும் பாதுகாப்பை அளித்து வருகிறது. இவ்வகையில் கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள்

முனைப்புடன் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, இன்று தமிழ்நாடு கல்வி, சுகாதாரக் குறியீடுகளில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

விவசாயத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்ததன் பயனாக 2010-2011-ல் 75.95 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த உணவு உற்பத்தி, 2014-2015-ல் 122.86 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. விவசாயத் துறையின் பொருளாதார வளர்ச்சி வீதமும் 2013-2014, 2014-2015 ஆம் ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது. விவசாயத் துறைக்கு 2010-2011 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2,072.43 கோடி ரூபாய்தான். ஆனால், இத்துறைக்கான 2015-2016 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு 6,613.68 கோடி ரூபாய் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக விவசாய சாகுபடிப் பரப்பளவையும், உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயினையும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க நுண்ணீர்ப் பாசனம், இயந்திரமயமாக்கலுக்குக் கணிசமான ஒதுக்கீடு, பயிர் அடிப்படையிலான உயர் சாகுபடி முறைகளைப் பரவலாக்கல், தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் துல்லிய பண்ணை முறை, பசுமைக்குடில் சாகுபடி, வலை நிழல் சாகுபடி (Polyhouse Greenhouse Cultivation and Shade net Cultivation) எனப் பல திட்டங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு போதுமான நிதியை ஒதுக்கியுள்ளது. இது தவிர, சேமிப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முதல் மாவட்ட அளவு வரை சேமிப்புக் கிடங்கு வசதிகளைக் கணிசமாக மேம்படுத்தியதுடன் விற்பனைக் கட்டமைப்புகளையும் தரம் உயர்த்தியது, விவசாய உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிலையும் ஊக்குவித்தது போன்ற எண்ணற்ற திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து முன்னுரிமை வழங்கி வருகிறது.



வறுமை ஒழிப்புப் பற்றி ஏதும் இல்லையென சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். அவர்கள் பார்வையில் ஏதோ இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பல நல்ல விஷயங்கள் தென்படுவதில்லை. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்துவது போன்ற ஓர் ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தை இதுவரை எந்த அரசும் செயல்படுத்தவில்லை என்பதை இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கிராமப்புறப் பகுதிகளைப் பொறுத்தவரை, புதுவாழ்வுத் திட்டம், கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைந்த யுக்திகளுடன் இம்மாநிலத்தில் முழுமையாக வறுமையை அகற்றிட மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களாகும். அதேபோல் நகர்ப்புறப் பகுதிகளுக்கு 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கியது. தற்போது இத்திட்டத்துடன் இணைத்து மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசு, நாடு முழுவதற்கும் 1,800 கோடி ரூபாயினை மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ள நிலையிலும்கூட தமிழக அரசு 2015-2016 ஆம் ஆண்டுக்கு நமது மாநிலத்திற்கு மட்டுமே 862.40 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதிலிருந்து எந்த அளவுக்கு வறுமை ஒழிப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

*பிற்பகல் 1-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பைப் பெருக்க தொழில் துறையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பாக ஊக்குவித்து வருகிறது. தமிழகத்தின் தென்பகுதிகளில் தொழில் முதலீடுகளை ஈர்க்க, சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தென் மாவட்டங்களில் தொழில் மேம்பாட்டினை ஊக்குவித்திட, மதுரை-தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்தினைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முனைப்புடன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உலக முதலீட்டாளர்களின் மாநாட்டை, மே 23, 24-ல் நடத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெரும் தொழில்களுக்கும்,

சிறு, குறு தொழில்களுக்கும் திட்ட அனுமதிகளை எளிமைப்படுத்த, தனித்தனியே ஒற்றைச் சாளர இணைய தளங்கள் 2015-2016-ல் தொடங்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சிறு, குறு தொழிற்சாலைகளுக்கு வட்டி மானியம், முதலீட்டு ஊக்கத் தொகை, கட்டமைப்பு மேம்பாடு மானியம் போன்ற பல சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறது. முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கான சிறப்புத் திட்டம் ஒன்றையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இவை அனைத்துமே தமிழ்நாடு தொழில் துறையில் மேம்பாடு பெற்றிடவும், அதனால் பல புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு இளைஞர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்திலும்தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 45 இலட்சம் பேர் பதிவு செய்துள்ளனர் என்றும், அவர்களெல்லாம் வேலை இல்லாமல் உள்ளனர் என்பது போன்றும் ஒரு கற்பனையைச் சிலர் செய்து வருகின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பெரும்பாலானோர், தனியார் நிறுவனங்களில் பணி செய்து வருகின்றனர். எனினும், அவர்களில் பலர், அரசு வேலைகளுக்காக இவ்வாறு பதிவு செய்துள்ளனர். தமிழ்நாட்டில் மொத்தம் 13 இலட்சம் அரசு ஊழியர்கள் உள்ள நிலையில், எல்லோருக்கும் அரசு வேலை வழங்குவது என்பது இயலாத ஒன்று. ஆகவே, இத்தகைய தொழில் முதலீடுகளை ஏற்படுத்தி, புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலமாக மட்டுமே, இத்தகைய தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும். இத்தகைய பணிகளை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஊக்குவித்து வருகின்றன. இவற்றின் வாயிலாக மட்டுமே, சென்ற ஆண்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான திறன்களைப் பெறும்வகையில் 1.5 இலட்சம் இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இவர்கள் மருத்துவம் சார்ந்த சேவைப் பணிகள், பிற சேவைத் துறைப் பணிகள், கட்டுமானத் துறை, தொழிற்சாலைகளில் தொழில்நுட்பப் பணிகள் போன்ற பல்வேறு துறைகளிலும் வேலைகளைப் பெறுவதற்கான தகுதியை, அரசு வழங்கிய சிறப்புப் பயிற்சியின்மூலம் பெற்றுள்ளனர். இதைத் தொடர்ந்து 2015-2016 ஆம் ஆண்டில் இத்தகைய பயிற்சிகளை 2 இலட்சம்



நபர்களுக்கு அளிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு இலக்கிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகத் திறன் மேம்பாடு நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் 100 கோடி ரூபாய், 150 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வேலைவாய்ப்புக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லையென்று கூறி, விவரங்கள் இருந்தாலும் அவற்றைப் பார்க்கக்கூடாது என்ற உறுதியோடு சிலர் உள்ளனர்.

இந்த நிதிநிலை அறிக்கையை வெற்று அறிக்கை என்றும், எத்தகைய புதிய திட்டங்களும் இல்லை என்றும், யாருக்கும் பயன்படாத அறிக்கை என்றும் சிலர் விமர்சனம் செய்துள்ளனர். அவர்களது பார்வை வெற்றுப் பார்வை. அதனாலே இது வெற்று அறிக்கையாகத் தென்படுகிறது என்றே கருதுகிறேன். 1 இலட்சத்து 84 ஆயிரத்து 296 கோடி ரூபாய் அளவிற்கான செலவினங்களை மேற்கொள்ளும்வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை எவ்வாறு வெற்று அறிக்கையாக இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. அச்சடிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் படிக்காதவர்கள்தான் இதனை வெற்று அறிக்கை என விமர்சனம் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் கூறிய கருத்துகள் என் நினைவுக்கு வருகிறன்றன. ‘இதுபோன்று வெற்று அறிக்கை என்று சொல்பவர்களைப் பார்த்து, ஒருவேளை அவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகத்தில் எதுவும் அச்சடிக்கப்படாமல் விடுபட்டுவிட்டதோ (மேசையைத் தட்டும் ஒலி) என அஞ்சியதாக’ பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு முக்கியத் துறைகளுக்குப் போதிய நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாட்டுக்கு போதிய நிதியொதுக்கப்பட்டுள்ளது. பல திட்டங்களுக்குக் கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிக்கை எவ்வாறு அவர்களுக்கு வெற்று அறிக்கையாகத் தெரிகிறது? கிட்டப் பார்வை உள்ளவர்களுக்கு அருகில் உள்ளதுதான் தெரியும், தூரப் பார்வை உள்ளவர்களுக்கு தூரத்தில் உள்ளதுதான் தெரியும், அரசியல் காழ்ப்புணர்ச்சிப் பார்வை உள்ளவர்களுக்கு நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்றபின் சமர்ப்பிக்கப்படும் ஐந்தாவது நிதிநிலை அறிக்கை இது. எந்த அரசும் ஒவ்வோர் ஆண்டும் புதுப்புதுத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டே இருக்க முடியாது. புதியதாக ஓர் அரசு பொறுப்பேற்றால் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பல புதிய திட்டங்களை முதல் ஆண்டில் தீட்டுவது இயற்கை. அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் சூழ்நிலைக்கேற்ப சில திட்டங்களை மாற்றி அமைத்தும், சில புதிய திட்டங்களை அறிவித்தும் செயல்படுத்தலாம். மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரை, தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளுக்கேற்ப பல புதிய திட்டங்களை முதல் நிதிநிலை அறிக்கையிலும், அதைத் தொடர்ந்து தேவைக்கேற்ப திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன் வாயிலாகவும் அறிவித்து, அதனை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் இந்தத் திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதற்கே மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனினும், இந்த நிதிநிலை அறிக்கையிலும், தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு சில திட்டங்களுக்கும், துறைகளுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டும், சில புதிய திட்டங்களைச் சேர்த்தும், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தகைய புதிய திட்டங்களைப் பற்றி நேற்று விரிவாக இம்மாமன்றத்தில் எடுத்துரைத்தேன். எனவே, புதிய திட்டங்கள் இல்லை என்பவர்கள் நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படித்துப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சூரிய மின்சக்தி பற்றி சில உறுப்பினர்கள் பேசினார்கள். இதுகுறித்து விரிவான பதிலை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் அறிவித்துள்ளார்கள். எனவே, அதுபற்றி நான் மீண்டும் விளக்கமளிக்கத் தேவை எழவில்லை எனக் கருதுகிறேன்.

*பிற்பகல் 1-05*

மின்சாரப் பற்றாக்குறை பற்றி எந்தக் கருத்தும் இல்லையென சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் இதுபற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்றபோது, மின் பற்றாக்குறை எவ்வாறு இருந்தது என்பதையும், அதன் பிறகு எவ்வாறு அது சரி



செய்யப்பட்டு வருகிறது என்பதையும், அதனால் எந்த அளவிற்கு மின் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் விரிவாக இந்த நிதிநிலை அறிக்கை தெரிவித்துள்ளது. அதற்காக அரசின் நிதி உதவி எந்த அளவுக்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்றபொழுது மாநிலத்தின் மின் தேவை 12,000 மெகாவாட். ஆனால், மின் வழங்கல் திறன் 8,000 மெகாவாட்டாக மட்டுமே இருந்தது. அதாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் பதவியேற்றபோது 12,000 மெகாவாட் மின் தேவையாக இருந்தது. ஆனால், அப்போது நமக்குக் கிடைத்த மின் வழங்கல் திறன் 8,000 மெகாவாட்டாக இருந்தது. மின் பற்றாக்குறை 4,000 மெகாவாட்டாக இருந்தது. தற்போது தமிழ்நாட்டின் மின் வழங்கும் திறன் 13,000 மெகாவாட் அளவை எட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து எந்த அளவுக்கு மின் பற்றாக்குறை குறைந்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் செயல்திறனை மேம்படுத்தி, தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை முழுமையாக நீக்க தொடர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நிதிநிலை சீர்குலைந்துவிட்டது, சிதைந்துவிட்டது, அதனால் தமிழக அரசு நெருக்கடி வலையில் சிக்குண்டுவிட்டது, ஆழமான கடன்களில் மூழ்கி திவாலாகும் கட்டத்தை எட்டிவிட்டது என்றெல்லாம் சிலர் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இது அவர்களுடைய அபார கற்பனைத் திறனையும், கண் விழித்தபடியே அவர்கள் காணுகின்ற பகல் கனவையும் பிரதிபலிப்பதாக உள்ளது. அவ்வாறு அறிக்கை விடுபவர்கள் ஏதோ சில ஏடுகளில் தமிழ்நாட்டின் மொத்தக் கடன் நான்கு இலட்சம் கோடி ரூபாய் எனத் தவறாக வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தைப் பற்றிக்கொண்டு அதை வைத்து மக்களைத் திசை திருப்பும் வகையில் அறிக்கையினை வெளியிட்டுள்ளனர். சிலர் 2015-2016 பட்ஜெட், வளர்ச்சிக்கு உதவாத கடனில் மூழ்கடிக்கும் வெற்று அறிக்கை என்று ஒரு வெற்று வேட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அரசு பெறும் கடனைப்

பற்றி இப்படிப் பொதுவாக நிலவிவரும் பல்வேறு தவறான கருத்துகள் மக்களைப் பீதியடையச் செய்யும் நோக்குடன் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகின்றன. அவர்களுடைய கனவெல்லாம் தமிழகத்தின் நிதிநிலை ஏதோ மோசமடைந்துவிட்டதாக ஒரு கற்பனையைச் செய்து, அதை மக்களிடம் பரப்பினால் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதைப்போல அவர்களுக்கு ஏதாவது அரசியல் ஆதாயம் ஏற்படும் என்று தொடர்ந்து ஏதாவது கூறி வருகின்றனர். அரசுக் கடன் பற்றிய நேற்றைய எனது பதில் இவர்களுக்குத் தெளிவைத் தரும் என்று கருதுகிறேன்.

தமிழக அரசின் மொத்தக் கடனுக்கும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்குமான விகிதம் மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே சரியாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அதை மேலும் குறைப்பதற்கான முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் நிதிநிலை திவாலாகும் நிலை என்பதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களது அரசுக்கு எதிரானவர்களின் பகல் கனவே என்பதையும் தமிழ்நாட்டின் நிதிநிலை சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறது என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நேற்றுகூட அரசு கடன்பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்கள் பேசும்போது அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் கடன்பற்றிக் கேட்டார். அவருக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நிதி ஆணையத்தின் பரிந்துரையான மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவு *25* சதவிகிதம் என்பது அரசுக் கடன் மட்டும்தான். எனவே, இது வரம்பிற்குள்தான் உள்ளது. அவர் கேட்டபடி அரசுக் கடன் *2014-2015* ஆம் ஆண்டின் இறுதியில் *1.81* இலட்சம் கோடி ரூபாய். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் *73,708* கோடி ரூபாய். போக்குவரத்துக் கழகங்கள் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் *2,084* கோடி ரூபாய். இவற்றுடன் பிற அரசுத் துறை நிறுவனங்கள் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடனைச் சேர்த்தாலும் மொத்தம் *2,64,701* கோடி ரூபாய்தான் வருகிறது. குற்றஞ்சாட்டும் இவர்கள் கணக்குப்படி, எங்கிருந்து *4* இலட்சம் கோடி ரூபாய் எனக் கணக்கிட்டார்கள் என்பதை



மாமன்ற உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்களும், அவர் சார்ந்த இயக்கத்தின் தலைவரும்தான் விளக்க வேண்டும். ஏதோ அரசியல் செய்யவேண்டும் என்பதற்காக மனம்போன போக்கில் அறிக்கை விடுவதும், பேசுவதும் இவர்களின் அறியாமையையே வெளிப்படுத்துகிறது.

*பிற்பகல் 1-10*

வருவாய்ப் பற்றாக்குறை என்பது வருவாய் வரவிற்கும், வருவாய்ச் செலவினத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு. ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் பொருளாதார நிலை நன்றாக உள்ளபோது பொருளாதார வளர்ச்சியின் பயனால் வருவாய் வரவும் கணிசமாக உயரும். அத்தகைய நேரங்களில் செலவைவிட வருவாய் கூடுதலாக இருக்கும். இதனால் வருவாய் உபரி ஏற்படும். பொருளாதார வளர்ச்சி குறையும்போது வருவாய் வரவும் குறையும். ஆனால் நிருவாகச் செலவு, மானியங்கள், நலத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான செலவுகளைத் திடீரெனக் குறைக்க இயலாது. இதனால் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும். மாநில அரசின் செலவு பெரும்பாலும் வருவாய்ச் செலவினங்களாகவே உள்ளது. ஏனெனில், கல்வி, சுகாதாரம், நிருவாகம் மற்றும் காவல் துறை போன்றவற்றுக்கு கணிசமாக மாநில அரசு செலவிட வேண்டியுள்ளது. அதனால்தான், பெரும்பாலும் வருவாய்ப் பற்றாக்குறையும் வருவாய் உபரியும் பொருளாதாரச் சுழற்சிக்கு ஏற்றவாறு மாறி, மாறி ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. நிதிச் சூழ்நிலையைத் திறம்படக் கையாண்டு, மாநில அரசு செயல்பட்டு, திட்டங்கள் பாதிக்கப்படாத வகையில் நிதி மேலாண்மை மேற்கொள்ளப்பட வேண்டும். இதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பாகச் செய்து வருகிறது. எனவே, வருவாய் உபரி என்பதும், பற்றாக்குறை என்பதும் ஒரு சுழற்சியே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த *2011* ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, *2011-2012* ஆம் ஆண்டில் வருவாய் உபரி கணிசமாக இருந்தது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இவை கட்டுக்குள் உள்ளதால் எந்தக் கவலையும் படத்தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, கடந்த *15* ஆண்டுகளின் நிதிநிலைமையைப் பார்க்கும்போது, தி.மு.க.

ஆட்சிக் காலத்தில், அதாவது, 2009-2010-ல் 3,531 கோடி ரூபாயும், 2010-2011-ல் 2,729 கோடி ரூபாயும் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல், வரும் 2015-2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஆந்திரப் பிரதேசம், கேரளா, மகாராஷ்டிரா, ஹரியானா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள்கூட வருவாய்ப் பற்றாக்குறை நிலையை எதிர்நோக்கியுள்ளன. எனவே, 2015-2016 ஆம் ஆண்டின் வருவாய்ப் பற்றாக்குறை என்பது நமது தமிழக அரசை மட்டும் நெருக்கிடும் சூழ்நிலையன்று. இவ்வருவாய்ப் பற்றாக்குறை, ஒட்டுமொத்த இந்திய நாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நிதிப் பற்றாக்குறை என்பது, மாநிலத்தின் மொத்தச் செலவினத்திற்கும், வருவாய் வரவிற்கும் உள்ள பற்றாக்குறையைக் காட்டுவது. மாநிலத்தின் செலவு பெரும்பகுதி வருவாய்ச் செலவாக உள்ள நிலையிலும், மாநில அரசுகளுக்குக் குறைந்த அளவே வருவாய் ஆதாரம் உள்ள நிலையிலும், அதன் வருவாய் ஆதாரத்தை வைத்தே முழுச் செலவையும் ஈடு செய்ய இயலாது. எனவே, இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்ய, கடன்மூலம் நிதி திரட்டி, வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிறந்த பொருளாதார வழிமுறையாகும். ஆனால், இந்தப் பற்றாக்குறை கட்டுக்குள் இருக்க வேண்டும். நமது மாநிலத்தைப் பொறுத்தவரை நிதிப் பற்றாக்குறை அதன் அதிகபட்ச வரம்பான மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குக் குறைவாகவே உள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 10 ஆண்டுகளைப் பார்க்கும்போது, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.16,647 கோடியாக இருந்த நிதிப் பற்றாக்குறை, 2011-2012-ல் ரூ.17,274 கோடியாக இருந்தது. இந்த நிதிப் பற்றாக்குறை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சியில் 2,251 கோடி ரூபாயாக மட்டுமே இருந்தது. ஆனால், இது தி.மு.க. ஆட்சியின் இறுதியில் 16,647 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. இது, 2014-2015-ல் ரூ.27,346 கோடியாக உள்ளது. நிதிப் பற்றாக்குறை இவ்வாறு ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்திருந்தாலும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் (GSDP)



நிதிப் பற்றாக்குறையின் அளவு, 2014-2015-ல் 2.90 சதவீதமாக இருந்து, தற்போது 2015-2016 ஆம் ஆண்டில் இந்த அளவு 2.89 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த அளவு 2010-2011-ல் 3.04 சதவீதமாக இருந்தது என்பதையும் தற்போது 2.89 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பதின்மூன்றாம் நிதி ஆணையத்தின்படி இவ்விகிதம் மூன்று சதவீதத்திற்கும் குறைவாக இருக்கவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களது வழிகாட்டுதலின்படி தமிழகம் மேற்கொண்டுவரும் சிறப்பான நிதி மேலாண்மையின் காரணமாகவே இந்த அளவு 3 சதவீதத்திற்கு உட்பட்டே உள்ளது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசும்போது, பெட்ரோலியப் பொருட்களின் விலைக் குறைவால் மூன்று மாதங்களில் 1,000 கோடி ரூபாய் வரி இழப்பு என்றால் ஓர் ஆண்டுக்கு 5,000 கோடி ரூபாய் இருக்குமே என்றும், ஆனால் 2,141 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளதால் மீண்டும் நீங்கள் வரி போடுவீர்களா என்ற அச்சத்தை வெளிப்படுத்தினார். அதற்கு நான்கூட மனக் கணக்கு வேண்டாம் என்று கூறினேன். 2014-2015-ல் 1,000 கோடி ரூபாய் வரி இழப்பு கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து ஏற்பட்டது. இது கிட்டத்தட்ட 5 மாதங்களில் ஏற்பட்ட இழப்பு. அது, 2015-2016 ஆம் ஆண்டு முழுவதும் 2,141 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு அரசின் வருவாய் குறைந்தாலும் மற்ற மாநில அரசுகள் மதிப்புக் கூட்டு வரியை உயர்த்தியதைப்போல், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உயர்த்தாது எனத் தெளிவாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். இதற்குப் பிறகும் இவருக்கு இந்த அச்சம் தேவையில்லை. எனவே, பல்வேறு விமர்சனங்கள், கருத்துகள் நிதிநிலை அறிக்கையின்மீது தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு விரிவான விளக்கத்தை நான் இங்கே வழங்கியுள்ளேன். அது நியாயமாகச் சிந்திப்பவருக்குத் திருப்தியை அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1-15

தமிழக மக்களின் மேன்மைக்காகவும், தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காகவும் பல அரிய திட்டங்களையும், அதற்கான

ஒதுக்கீடுகளையும் பொதிந்து வைத்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை குறித்து, ஒருசில எதிர்க்கட்சிகள் மிகவும் குறைத்து எடை போடுகின்றன. மக்கள் மத்தியில் தங்கள் பெயரை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டுமென இல்லாததையும், பொல்லாததையும் இட்டுக்கட்டி அறிக்கை விடுகிறார்கள். நிதிநிலை அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதைப்பற்றி தானாகவும் படிக்காமல், அடுத்தவர் சொல்வதையும் கேட்காமல், வெளிநடப்பு என்று சொல்லிக்கொண்டு நடையைக் கட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *"மானுட சமுதாயம் இன்பமுற மகிழ்ச்சிக் கோட்டையைப் படைத்த இறைவன், இரும்புப் பூட்டு கொண்டு அதைப் பூட்டி வைத்தானாம்; மனிதர்கள் அதனை அனுபவிக்க வேண்டுமெனில், சரித்திர புருஷர்கள் தருகின்ற சாவியால் திறந்து வளம் பெறலாம் என வரமும் கொடுத்தானாம்; இறை தந்த வரம் பலிக்க, சாவிகள் கொண்டு வந்தார்கள் சமுதாயச் சிற்பிகள்." இயேசுபிரான் ஒரு சாவி தந்தார், அது 'அன்பு'; வள்ளுவர் ஒரு சாவி கொடுத்தார், அது 'அறம்'; நபிகள் நாயகம் ஒரு சாவி வழங்கினார், அது 'சகோதரத்துவம்'; காரல் மார்க்ஸ் ஒரு சாவி அளித்தார், அது 'பொதுவுடைமை'; அண்ணல் காந்தி ஒரு சாவியைக் கண்டார், அது 'அகிம்சை'; தந்தை பெரியார் ஒரு சாவி தந்தார், அது 'பகுத்தறிவு'; பேரறிஞர் அண்ணா ஒரு சாவி தந்தார், அது 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒரு சாவி தந்தார், அது 'மனிதநேயம், மனிதாபிமானம்'. (மேசையைத் தட்டும் ஒலி) இவை அத்தனையும் கலந்து தமிழ் மக்கள் துன்பமெனும் இருள் நீங்கி, இன்பவொளி காணவும்; வாழ்வின் துயரம் நீங்கி வளமான உயரம் காணவும்; எண்ணில்லாத் திட்டங்கள் தந்து 'புது விடியலெனும்' சாவி தந்தார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமாம் நம் அம்மா; இயற்கையின் கருணையால் தோன்றிய இணையில்லா தலைவர்; தவமாய் தவமிருந்து தமிழகம் பெற்ற தன்னிகரில்லா முதல்வர் நம் மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஆழ்ந்த அறிவு, அஞ்சா நெஞ்சுரம், படைப்பாற்றல், பன்முகத் திறமை, படை நடத்தும் வல்லமை, குறிக்கோளை எய்திடும் உறுதி, நினைவாற்றல், நினைத்ததை முடிக்கும் நிர்ணயம்,*



*(மேசையைத் தட்டும் ஒலி) திறமை, தீரம், தாய் நாட்டின்மீது தாளாத பற்று, மதிநுட்பம், மனிதநேயம், மக்கள் சக்தியின் உறுதுணை என (மேசையைத் தட்டும் ஒலி) குணநலன்கள் அணிகலன்களாய் அலங்கரிக்க தமிழர்களின் நலனுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்து வரும் (மேசையைத் தட்டும் ஒலி) தியாகத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.*

*"நீந்த மறந்த மானுக்கு வாழ்வு இல்லை; நகர மறந்த வாகனத்துக்குப் பயணம் இல்லை; படிக்க மறந்த மாணவனுக்குத் தேர்ச்சி இல்லை; பயிற்சி மறந்த வீரனுக்குப் பரிசு இல்லை; உழைக்க மறந்த மனிதனுக்கு உயர்வு இல்லை; முயற்சி செய்யா மனிதனுக்கு முகவரியே இல்லை."* எங்கள் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை எதிர்ப்பவர்களுக்கு எதிர்காலம் என்பது இல்லவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதை உணராமல் மாண்புமிகு அம்மா அவர்களை, அரசியலில் இருந்து அகற்றிவிட வேண்டுமென்றும், பொது வாழ்வில் ஈடுபடாதவாறு தடுத்துவிட வேண்டுமென்றும், இன்னமும் சிலர் சூழ்ச்சி வலை பின்னிக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் சந்திக்காதது அல்ல. மாண்புமிகு அம்மா அவர்கள் அரசியலில் அடியெடுத்து வைத்த காலந்தொட்டே எதிர்கொண்ட எதிர்ப்புகளும், சந்தித்துவரும் சவால்களும் ஒன்றல்ல, இரண்டல்ல. தகர்த்தெறிந்த சதிச் செயல்களும், கிழித்தெறிந்த சூழ்ச்சி வலைகளும் கொஞ்சமல்ல, நஞ்சமல்ல. அத்தனை எதிர்ப்புகளையும், சிங்கத்தின் துணிவோடு எதிர்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை எதிர்ப்புகளையும், சிங்கத்தின் துணிவோடு எதிர்கொண்டு, சதிகளின் முனை முறித்து, சூழ்ச்சிகளை முறியடித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றி கண்டு வருகிறார்கள். ஆனால், இத்தனைக்குப் பின்பும் மாறவில்லை அந்தச் சூழ்ச்சியாளர்கள்.

பிற்பகல் *1-20*

முக்காலமும் முழுமதியாய் ஜொலிக்கின்ற தாயே! ஏழைகளின் துயர் தீர்க்க எந்நாளும் உழைக்கின்ற தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டு வந்து கல்லணைக்குச் சேர்த்த தாயே! முல்லையாற்றின் உரிமை காத்து, உழவர் தம் கவலையைத் தீர்த்த

தாயே! இனஅழிப்பு இலங்கைக்குக் குலை நடுக்கம் கொடுத்த தாயே! கண்ணிமையாய்த் தமிழர்களைக் காக்கின்ற தாயே! அன்னைத் திருநாட்டை ஆபத்து சூழ்ந்தபோது *(மேசையைத் தட்டும் ஒலி)* பொன்னும் பொருளும் ஒரு பொருட்டில்லை என்று தான் அணிந்திருந்த நகைகளையெல்லாம் வாரித் தந்த வள்ளல் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

தேசமே பெரிதென்னும் தெளிவு மனம் கொண்ட தாயே! தெரசாவும், ஹிலாரியும், அமர்த்தியாசென்னும், அர்னால்டும் *(மேசையைத் தட்டும் ஒலி)* வருகை தந்து வாழ்த்தி, வாயாரப் போற்றிடும் திராவிட அரசியலின் திசைகாட்டியான தாயே! 'நிமிர்ந்த நன்னடை, *(மேசையைத் தட்டும் ஒலி)* நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள், நிமிர்ந்த ஞானச் செருக்கு' என்னும் முண்டாசுக் கவி பாரதியின் பாடல் வரிகளுக்கு இலக்கணமாய்த் திகழும் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)* நீதிக்கே தலை வணங்கி நித்தம் நித்தம் நடக்கும் தாயே! ஏங்கி நிற்கும் ஏழையரை ஏணியாக உயர்த்தும் தாயே! எகிப்தும் நார்வேயும் புகழாரம் சூட்டும் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)* தன்னலம் என்பதை மறந்து தமிழ்த் தரணிக்கே தன் வாழ்வை அர்ப்பணித்து வாழும் தாயே!

சதி செய்து சாய்த்து விட்டோம் என்று கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள் சிலபேர். அத்தகைய நஞ்சு நெஞ்சினரை சிறு புல்லினும் கீழாக, ஒரு புழுவினும் கீழாக தமிழக மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களுக்கெனவே வாழும் தாய்க்கு இப்படி ஒரு கொடுமையா என்று விழிகளில் நீர்முட்ட வேதனையில் தவிக்கிறார்கள் தமிழக மக்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

உலைக்கு அரிசி தந்த உத்தமத் தாய் எங்கள் அம்மா அவர்கள். உலையிட்ட அரிசியாய் மக்களின் உள்ளங்களும் இல்லங்களும் ஒருசேரக் கொதிக்கின்றன இப்போது. அரைக்க மிக்ஸி, கிரைண்டர் தந்த அன்புள்ளத்து அம்மா அவர்கள். அரைபடும் தானியமாய் மக்களின் உள்ளங்கள் வலிபடுகின்றன இப்போது. தாய் தந்த மின்விசிறி தருகின்ற குளிர்ச்சியிலும், புண்பட்ட மனதோடு புழுங்குகின்றன இல்லங்கள் இப்போது.



உடுக்கச் சீருடையும், நடக்கச் செருப்பும், கடக்க மிதிவண்டியும், உலகை உள்ளங்கைக்குள் அடக்க மடிக்கணினியும் தந்த கலைமகள் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* பள்ளிச் செல்வங்களும், பெற்றோரும் கண்ணீரில் கலங்குகின்றனர் இப்போது. பள்ளியில் பந்தியிட்டு, ஆலயத்தில் அன்னமிட்டு, விலையில்லா அரிசி தந்து, வாழும் மக்களுக்கு வயிறாரச் சோறிட்டு, அன்னலட்சுமியாய், *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்னலட்சுமியாய் 'அம்மா உணவகம்' அமைத்த அன்னை எங்கள் அம்மா அவர்கள். பசியாறிய மக்களின் வயிறுகள் நெருப்பின்றி எரிகின்றன இப்போது. கறவை மாடு, ஆடு தந்த கனிவுள்ளத்துத் தாய் அம்மா அவர்கள். இந்த ஐந்தறிவு இனமும், அதனாலே பயன் பெற்ற மனமும், ஏகமனதாய் வாடுகின்றன இப்போது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை முகம் கண்டு மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்களின் தயவால் தமிழகம் சொர்க்கமாகுமென்று தளராத நம்பிக்கை எங்களுக்கு உண்டு *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று ஏங்கியிருக்கிறார்கள் தமிழக மக்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வீணர் தம் சூது வலை வீசினாலும் வீறு கொண்டு எழுவார் மாண்புமிகு அம்மா என்றே *(மேசையைத் தட்டும் ஒலி)* உறுதியான நம்பிக்கை எங்களுக்குண்டு என்றே எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள் தமிழக மக்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1-25*

ஆற்றல் அன்னை விரைவில் தலைமையேற்க வருவார் என்றே அசைக்க முடியாத நம்பிக்கை, *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆற்றல் அன்னை விரைவில் தலைமையேற்க வருவார் என்றே அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்குண்டு என்றே *(மேசையைத் தட்டும் ஒலி)* உறுதியுடனிருக்கிறார்கள் தமிழக மக்கள். மாண்புமிகு அம்மா அவர்களே என்றும் எங்கள் முதலமைச்சர் என்று *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களே என்றும் எங்கள் முதலமைச்சர் என்று கோடானு கோடி மக்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களே மீண்டும் முதலமைச்சராக வேண்டுமென்று இலட்சோபலட்சம் மக்கள் மனமுருகிப் பிரார்த்தனை செய்து

கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறையின் தீர்ப்பு! பிரார்த்தனைகள் வீணாவதில்லை, இது நாடு கண்ட தீர்ப்பு! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நம்பிக்கை என்றுமே கெட்டதில்லை, இது தமிழகம் கண்ட தீர்ப்பு! (மேசையைத் தட்டும் ஒலி)

பாரதி கண்ட புதுமை, பார் வியக்கும் தலைமை, சதியையும், விதியையும் மக்கள் சக்தியின் துணையால் வென்றிடும் மகாசக்தி (மேசையைத் தட்டும் ஒலி) சதியையும், விதியையும் மக்கள் சக்தியின் துணையால் வென்றிடும் மகாசக்தி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சூதுமதி கூட்டத்தின் சூழ்ச்சி அரசியலைத் தோற்கடித்து, மீண்டும் தமிழ் மாநிலத்தின் முதல்வராய் (மேசையைத் தட்டும் ஒலி) சூதுமதி கூட்டத்தின் சூழ்ச்சி அரசியலைத் தோற்கடித்து, மீண்டும் தமிழ் மாநிலத்தின் முதல்வராய், அன்று தாம் மீட்ட புனித ஜார்ஜ் கோட்டையிலே மறுபடியும் பாதம் பதிப்பார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மகோன்னத காலத்தை மலர்விப்பார்கள். கோடானு கோடி தொண்டர் படை சூழ, கோடானு கோடி மக்களின் நலன் நாடி மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் அரியணையில் அமர்ந்திடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது உறுதி, உறுதி என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் 5-வது நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்தில் அளித்திடும் வாய்ப்பினை அளித்து, அதன் தொடர்ச்சியாக, அதன் மீதான விவாதங்களுக்குப் பதிலுரை வழங்குகின்ற நல்வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்காக எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது வணக்கத்தையும், நன்றியையும் சமர்ப்பித்து, இந்த பதிலுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். (குறுக்கீடு) என்ன? திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.



**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான நீண்ட விவாதங்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பதிலில் பல விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 'எந்தத் துறைக்கும் தேவையின் அடிப்படையில் நிதி குறையாது' என்று வாக்குறுதி அளித்திருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கின்றேன்.

அடுத்து, 'திட்டங்களுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காகத்தான் திட்டங்கள்' என்று இந்த அரசு ஏற்கெனவே அறிவித்திருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பெருந்துறை, சிப்காட்டில் Coca-Cola கம்பெனிக்கு 77 ஏக்கர் நிலம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, அதுதான் நேற்றைக்கே சொல்லிவிட்டார்களே? (குறுக்கீடு) அதற்கு, நேற்றைக்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அது சம்பந்தமாக நேற்றைக்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டாரல்லவா? (குறுக்கீடு) அதுகுறித்துப் பேச வேண்டாம், விடுங்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். திரும்பவும் அதைப்பற்றிப் பேச முடியாது. (குறுக்கீடு)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். ** என்று நீங்கள் சொல்ல முடியாது. அது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) திரு. குணசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு பதில் சொன்னதற்குப் பின்னால், ** என்று எப்படி நீங்கள் அவையில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) அதுவெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. குணசேகரன். (குறுக்கீடு) இல்லை, அதுபற்றி நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. திரு. குணசேகரன், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் அனுமதியில்லாமல் அது நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை. சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்கவில்லை என்கிற விவரங்களையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) எந்த ஒரு விஷயமும், (குறுக்கீடு)

பிற்பகல் *1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** ** (குறுக்கீடுகள்) இன்னும் சுற்றுச்சூழல் அனுமதியை நாங்கள் கொடுக்கவில்லை. அதனால் அந்தக் கம்பெனி அங்கு வராது என்று விளக்கமளித்திருக்கிறார். அதில் என்ன சந்தேகம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறிய பின்னரும், நீங்கள் அதன்மீது விளக்கம் கேட்பது சரியில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதாவது ஒரு வேண்டுகோள் வைக்கலாமே தவிர, ** என்று சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்) அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) திரு. சு. குணசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன், ** என்று சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) உங்களுடைய வேண்டுகோளை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய வேண்டுகோளை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் ஏதாவது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



வேண்டுகோள் வையுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதாவது ஒரு வேண்டுகோள் வைப்பீர்கள் என்றுதான் உங்களுக்கு அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். நான் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் இடம் வாங்கியிருக்கிறார்கள்; சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்கள்; அதற்கு அனுமதியளிக்கவில்லை. இதற்கிடையில் அதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று மக்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ‘மாண்புமிகு அம்மா அவர்கள், மக்களைப் பாதிக்கின்ற எந்த ஒரு திட்டத்திற்கும் அனுமதி அளிக்கமாட்டார்கள்’ என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள் ** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு இப்போது இந்தக் கேள்வியை எழுப்புகின்றீர்கள். ** என்று சொல்லவில்லை. ஒருவர் சிப்காட்டில் தொழில் தொடங்குகிறோம் என்று சொன்னால், அவர்களுக்கு இடம் கொடுக்கின்றோம். அதற்குப் பின்னர்தான் சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைக் கேட்டு விண்ணப்பிக்கின்றார்கள். அப்படி சுற்றுச்சூழல் துறையின் அனுமதி கேட்கின்றபோது, அப்பகுதி மக்களின் எதிர்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அனுமதி கொடுக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் GAIL நிறுவனத்தால் பாதிப்பு வரும் என்ற நிலையில், அந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்தியதைப்போல, இந்த நிறுவனத்தால் மக்களுக்குப் பாதிப்பு என்கிறபோது, உண்மையாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவையில் சமர்ப்பித்து, அதன்மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனது விரிவான பதிலுரையை ஆற்றியிருக்கிறார்கள். அதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக, அனைத்து மாணவர்களுக்கும் உயர் கல்வி பயில்வதற்காகவும், அனைத்து வகையான கட்டணத்தையும் அரசே கட்டுவதற்கு நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது. அதற்கு இந்த ஆண்டு வெறும் 5 கோடி ரூபாய் அளவில்தான் நிதி கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில், நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, பல கல்வி நிறுவனங்களில் கடந்த ஆண்டு அவர்களுக்கான கட்டணம் செலுத்தாத நிலையில், வெறும் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வது போதுமானதாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் குணசேகரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச எழுந்துவிட்டார், நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. குணசேகரன் அவர்கள் சென்ற இரண்டு நாட்களாக அவைக்கு வரவில்லை. இன்றுதான் வந்திருக்கிறார். ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்குக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் எந்தவித மாற்றமும் இல்லை. ஒரு நயா பைசா குறையாமல் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஆலங்குளம் அரசு சிமென்ட் ஆலையை நவீனப்படுத்துவதற்கு 190 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் பேசினார். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்குண்டான எந்த அறிவிப்பும் இல்லை. எனவே, அந்த நிதி எப்போது ஒதுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் உறுப்பினராக இருந்திருக்கிறார். ஒரு நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே நிதியொதுக்கிவிட்டால், வருடா வருடம் நிதிநிலை அறிக்கையில் அதற்கென நிதி ஒதுக்கமாட்டார்கள். அதுமட்டுமல்லாமல், (குறுக்கீடு) முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள், பின்னர் கேள்விக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை முழுவதுமாகக் கேளுங்கள்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த முறை இதே பிரச்சினைக் குறித்து கேட்டார். ஏற்கெனவே போட்ட மதிப்பீடு 165 கோடி ரூபாய் என்று இருந்தது, இப்போது விலை உயர்வின் காரணமாக 190 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருந்தேன். தற்போது திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கூடிய விரைவில், அந்த ஆலையை நிருவகிப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் மேலாக இன்னும் ஒரு தகவலைச் சொல்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்,

கிட்டத்தட்ட 20, 30 ஆண்டுக் காலமாக நஷ்டத்தில் இயங்கி வந்த அந்த ஆலை இந்த மாதம் 15 இலட்சம் ரூபாய் இலாபத்தை ஈட்டி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்ன, சொல்லுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையில், நிச்சயமாக தமிழ்நாடு வளர்ச்சியின் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கான பல ஆதாரங்களை எடுத்துரைத்தார்கள். மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் அதைப் பாராட்டுகிறேன். அதேபோன்று, சிப்காட்டில் கோகா-கோலா கம்பெனி ஆரம்பிப்பதற்கு அனுமதி தரமாட்டோம்; மக்களைப் பாதிக்கக்கூடிய எந்த ஒரு திட்டத்திற்கும் இந்த அரசு அனுமதி அளிக்காது என்ற மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன். தற்போது ஒரேயொரு கோரிக்கையை நான் அரசுக்கு வைக்க விரும்புகின்றேன். இதுபோன்ற மக்களைப் பாதிக்கக்கூடிய திட்டங்களை, அதற்கான நிலங்களை எடுப்பதற்கு முன்னால், அந்தத் திட்டங்களைத் தொடங்குவதற்கு முன்னால், கட்டாயமாக சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைப் பெற்ற பிறகுதான் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். ஏனென்றால், Neutrino Project சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறாமல் தொடங்கப்பட்டு, தற்போது நிறுத்தப்பட்டுள்ள நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, எதிர்காலத்தில் இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்ன? சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீண்ட ஒரு பதிலுரையை அளித்திருக்கிறார்கள். நாங்கள் மிகவும் எதிர்பார்த்தது, மத்தியில் ஆளும் அரசாங்கம், இன்றைக்கு தமிழகத்திற்கான நிதியை மிகவும் குறைத்துவிட்டது; திட்டங்களையும் குறைத்துவிட்டது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டங்கள் தரப்பட்டு. . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இதுகுறித்து நிறைய விவாதம் செய்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) அதுபற்றி நிறைய விவாதம் செய்யப்பட்டுவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கையோ அல்லது வேறு ஏதாவது வேண்டுகோளோ இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்பார்த்தது குறைந்தபட்சம் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் கூறிய ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் கேட்ட கேள்வி அப்படியே அவைக் குறிப்பில் இருக்கும். ஆனால், நீங்கள் ** என்று கூறியது, நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

## 5. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*35. மதுரையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் அமர்வு) கூடுதல் உறுப்பினர் (சட்டம்) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (இ2) துறையின் 8-10-2014 ஆம் நாளிட்ட அரசாணை (டி) எண் 379-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*36. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*37. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*38. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின்*





*(தமிழ்நாடு சட்டம் 21/2012) 52(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*39. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 37(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*40. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)*

*41. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள் (தொகுதி 1 மற்றும் 2) (ஆங்கிலம்), நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) மற்றும் "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" (தமிழ், ஆங்கிலம்) ஆகியவற்றை உள்ளடக்கிய குறுந்தகடு. (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*60. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.*

---